*18*

# “ஞானவான்களாய் நடந்து கொள்ளுங்கள்”

# [பாகம் 2]

## [6:1–20]

### பெற்றோர் பிள்ளைகள் உறவை கனப்படுத்துதல் *(6:1-4)*

*6:1-4ல் பவுல் 5:15ல் தொடங்கிய விவாதமாகிய, ஞானத்திலே கிறிஸ்தவர்கள் வாழ்வதைக் குறித்து தொடருகிறார்.*

*கிரேக்க - ரோம உலகில், தகப்பனுக்கு பிள்ளைகள் மீது மிகுந்த பொறுப்புகளும் கட்டுப்பாடும் இருந்தது. அவனுக்கிருந்த கட்டுப்படுத்தும் அதிகாரம் அவர்களுக்கு போதிக்கவும் அவர்களை சிட்சிக்கவும், அவர்களை விற்றுப்போடவும் தண்டிக்கவும் கூட உரிமையளித்தது, ஆகிலும் பொது மக்களின் கருத்துக்களில் கடுமையாக நடத்துவது குற்றஞ்சாட்டப்பட்டது. யூத மார்க்கத்திலும், அதே போன்ற வலியுறுத்தல் பெற்றோர்களின் அதிகாரத்தின் மீது சுமத்தப்பட்டது, விசேஷமாக தகப்பன்மார்கள் மேல். பழைய ஏற்பாட்டில் தங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படியாத பிள்ளைகளுக்கு மரண தண்டனை கூட அளிக்கப்பட்டது (லேவியராகமம் 20:9; உபாகமம் 21:18-21). ஃபிளேவியஸ் ஜோசிபஸ் என்பவர் கீழ்ப்படியாத பிள்ளைகளுக்கு புத்திமதி வழங்க வேண்டும் என்று பெற்றோருக்கு அறிவுறுத்தினார். பிறகு அந்தப் பிள்ளைகள் தனது பெற்றோரின் புத்திமதியை ஏற்றுக் கொள்ளாமல் போனால், அதற்கும் அறிவுறுத்தி அவர், “... அவன் பெற்றோர்களால் கொண்டுவரப்பட வேண்டும், ஒரு திரளான கூட்டம் தொடர்ந்து வர அவன் அங்கே பட்டணத்துக்குப் புறம்பே கல்லெறியப்பட வேண்டும்,”[1] என்று சொன்னார். இப்படியொரு கொடுமையான தண்டனை உண்மையிலேயே நடப்பிக்கப்பட்டதா இல்லையா என்பது குறித்து சில வாக்குவாதங்கள் நடந்து கொண்டுள்ளன, ஆகிலும் பெற்றோர், விசேஷமாக தகப்பன், தனது பிள்ளையின் மீது முழுமையான கட்டுப்பாட்டைக் கொண்டிருந்தான்.*

*யூதர்களின் பிள்ளைகளுக்குப் போதிக்கத் தக்க பாடப் புத்தகம் மோசேயின் நியாயப்பிரமாணமே, அது பெற்றோர்களுக்குச் சொன்னதாவது,*

இன்று நான் உங்களுக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன்

*இருதயத்தில் இருக்கக்கடவது, நீ அவைகளை உன் பிள்ளைகளுக்கு கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்து பேசி (உபாகமம் 6:6, 7).*

மோசே இஸ்ரவேலர்களிடம் தனது பேச்சின் இறுதியில், "... இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின்படியெல்லாம் உங்கள் பிள்ளைகள் செய்யும்படி கவனமாயிருக்க, நீங்கள் அவர்களுக்குக் கற்பிற்கும்படி, நான் இன்று உங்களுக்குச் சாட்சியாய் ஒப்புவிக்கிற வார்த்தைகளையெல்லாம் உங்கள் மனதிலே வையுங்கள்," என்று சொன்னார் (உபாகமம் 32:46).

பிள்ளைகளுக்கு அளிக்கும் சிட்சை பழைய ஏற்பாட்டில் ஒரு முக்கியத்துவம் பெற்ற சாராம்ஸமாகக் கொடுக்கப்பட்டது. நீதிமொழிகள் 22:6ல், சாலொமோன் "பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்" என்று சொன்னார். மேலும் அவர், "பிரம்பைக் கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான்; அவன்மேல் அன்பாயிருக்கிறவனோ அவனை ஏற்கனவே தண்டிக்கிறான்," என்றும் சொன்னார் (நீதிமொழிகள் 13:24), தொடர்ந்து அவர், "பிள்ளையைத் தண்டியாமல் விடாதே. அவனைப் பிரம்பினால் அடித்தால் அவன் சாகான்" என்றார் (நீதிமொழிகள் 23:13).

இந்தத் திரைக்குப் பின்னால், பவுல் பிள்ளைகளின் மேல் பெற்றோருக்கு இருக்கிற அதிகாரத்தை வலியுறுத்தினார். 6:1-4ல் பவுல் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் சொன்னவைகள் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் அதிகாரத்தின் கீழ் இருந்து பரஸ்பர மரியாதையை கைக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை அப்பகுதி கொண்டுள்ளது. இங்கே குறிப்பிடப்படுகிற கடைமைகளின் நிறைவேற்றம் தனித்தனியே குறிப்பிடப்பட்டு பிள்ளைகளின் பகுதியிலே கீழ்ப்படிதலையும் கனப்படுத்துதலையும் மற்றும் பொறுமை, போதனை, அவர்களைக் கோபப்படுத்தாமை தகப்பன் மார்களின் பகுதியிலும் அவர்கள்மேல் சுமத்தப்பட்ட கடமையாயிருக்கிறது.

### பிள்ளைகளே: "கனப்படுத்தி கீழ்ப்படியுங்கள்" (6:1-3)

**[1]பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். [2]உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும் பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், [3]உன் தகப்பனையும் உன் தாயையையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது.**

**வசனம் 1. பிள்ளைகளே,** என்பது *டெக்னா* என்பதன் மொழிபெயர்ப்பு, தேவனுடைய பிள்ளைகளாக மாறியுள்ள விசுவாசிகளுக்கும் வசனங்கள் பயன்படுத்தும் வார்த்தை (ரோமர் 8:16, 17; 1 யோவான் 3:10). மற்றும் மாமிசப் பிரகாரமான குடும்பத்துப் பிள்ளைகளுக்கும் பயன்படுத்துகிறது. மாமிசப் பிள்ளைகளுக்குப் பயன்படுத்தும்போது, இந்த வார்த்தை வயதைப் பொருட்படுத்துவது இல்லை. அது ஒரு சிறு பிள்ளைக்கும்

பயன்படுத்தப்படலாம் (மத்தேயு 18:1-6ல் பயன்படுத்தப்பட்டது போல) அல்லது வயது முதிர்ந்த பிள்ளையையும் குறிப்பிடலாம் (காண்க 1 தீமோத்தேயு 5:4).

எபேசியரில் குறிப்பிடப்படுகிற "பிள்ளைகள்" தங்களுக்குக் கொடுக்கப்பட்ட உபதேசங்களை புரிந்து கொள்ளக் கூடிய அளவுக்கு முதிர்ச்சியடைந்தவர்களாயிருந்திருக்க வேண்டும்; மேலும், வசனப்பகுதியின் பயன்பாடு அவர்கள் சபையின் அங்கத்தினர்களாக இருந்திருக்கக் கூடும் என்பதைக் காட்டுகிறது. **கர்த்தருக்குள்** எனும் பதம், இந்த நிருபத்தில் வேறு இடங்களில் பயன்படுத்தப்பட்ட சொற்றொடர் (2:21; 5:8; 6:10, 21), ஒரு கிறிஸ்தவனைத்தான் இது குறிப்பிட்டிருக்க வேண்டும். இத்துடன் பெற்றோர்களை இணைப்போமானால், ஒரு கேள்வி எழும்புகிறது: கிறிஸ்தவர்களல்லாத பெற்றோருடைய பிள்ளைகள், அவர்களுக்குக் கீழ்ப்படிய கடமைப் பட்டவர்கள் இல்லையா? இது ஒரு வகையில், பழைய ஏற்பாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கும் பூர்வாங்க உலகம் அங்கீகரித்திருந்த கருத்துக்கும் எதிரானது. பிள்ளைகள் எப்பொழுதுமே தங்களுடைய பெற்றோரின் அதிகாரத்துக்குக் கீழானவர்கள்தான். எனவே "கர்த்தருக்குள்" எனும் பதம் "பிள்ளைகளுக்கு" மற்றும் "கர்த்தருக்குள்ளான பிள்ளைகளுக்கு" அல்லது கிறிஸ்தவர்களாக மாறிய பிள்ளைகளுக்கு பயன்படுத்தப்பட்ட வார்த்தை. ஆதலால், இங்கே பிள்ளைகளையும் இங்கு குறிப்பிடப்படுகிற பெற்றோரும், கிறிஸ்தவர்களையே குறிப்பதாக நாம் யூகித்துக்கொள்ளலாம், ஏனெனில் இரு சாராருமே சபை சமுதாயத்தின் ஒரு பகுதி.

Andrew T. Lincoln இப்பகுதியை சாராம்ஸமாக "தங்களுடைய கர்த்தருடன் கொண்ட உறவுமுறையைக் குறித்து அறிவு கொள்கிற அளவுக்கு வளர்ந்தவர்களாக இங்கே பிள்ளைகள் குறிப்பிடப்பட்டதாக ஆணித்தரமாகத் தெரிவிக்கிறார், மற்றும் அதன் அடிப்படையிலே இது கையாளப்படுகிறது, ஆனாலும் இன்னும் போதியஅளவு வளர்ச்சியும் தேவைப்படுகிற இளமை பருவத்தில் இருந்திருக்க வேண்டும் (காண்க எபேசியர் 6:4)."[2] இன்னொரு வார்த்தையில் சொன்னால், இந்தப் பாடப்பகுதி கிறிஸ்தவர்களாக இருக்கிற பிள்ளைகளை ஆகிலும் தங்களுடைய பெற்றோரின் அதிகாரத்தின் கீழ் இன்னும் இருந்தவர்களைக் குறிக்கிறது.

பெற்றோருக்கு பிள்ளைகளின் கீழ்ப்படிதல் மனைவிகள் தங்கள் புருஷர்களுக்கு கீழ்ப்படிந்திருத்தலுக்கு ஒப்பானது, அவர்கள் (மனைவிகள்) "கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல தங்கள் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்கும்படி சொல்லப்பட்டார்கள்" (5:22). கிறிஸ்தவப் பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்குக் **கீழ்ப்படிகிறபோது** கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறார்கள். பெற்றோருக்கு கீழ்ப்படியாமை என்பது புறஜாதி உலகில் அவிசுவாசமுள்ளவர்களைப் பின்பற்றுவதாகும் (ரோமர் 1:30) மற்றும் "கடைசி நாட்களில்" வரும் கொடிதான காலங்களின் பண்புகளில் இதுவும் ஒன்று (2 தீமோத்தேயு 3:1, 2).

**இது நியாயம்** என்பது பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிவதற்கான கூடுதல் காரணத்தை கொடுக்கிறது. முதலாவதாக, பெற்றோரின் அதிகாரமும் பிள்ளைகளின் கீழ்ப்படிதலும் பூர்வீக உலகத்தாலும் இஸ்ரவேலருடன் தேவன் செய்த உடன்படிக்கையாலும் அங்கீகாரம் பெற்றவை. இரண்டாவதாக, பெற்றோருக்குக் கீழ்ப்படிதல் கர்த்தருக்குக்

*கீழ்ப்படிவது என்று பவுல் குறிப்பிட்டார். மூன்றாவதாக, "இது நியாயம்"; என்று அப்போஸ்தலன் சொன்னார், இன்னொரு வார்த்தையில் சொன்னால், செய்ய வேண்டிய சரியான காரியம் கீழ்ப்படிதலே, மேலும் அவர் வலியுறுத்தி பிள்ளைகள் பெற்றோருக்கு கீழ்ப்படிதல் முறையானது என்பதை நியாயப்பிரமாணத்தை மேற்கோள் காட்டினார்.*

***வசனங்கள் 2, 3. உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக,*** *என்று வாசிக்கிறோம்.*[3] *"கனப்படுத்துதல்" என்பதன் கிரேக்க வினைச்சொல் timaō; ஜனங்களைக் குறித்து பேசும் பதமாக இது பயன்படுத்தப்பட்டது, இந்த வார்த்தையின் பொருள் "மதிப்பிடுதல், மதிப்பை குறித்தல்."*

> *ஆகையால், யாரோ ஒருவரைக் கனப்படுத்துவது என்பது, அந்த நபரைச் சரியாகவும் நேர்மையாகவும் மதிப்பிட்டு, அவரைப் பணிவோடும், மரியாதையோடும், பயபக்தியுடனும், இரக்கம்மிகுந்த கனிவோடும், மதிப்புடனும், கீழ்ப்படிதலோடுங்கூட நடத்தும் போது, அது அவருடைய வாழ்க்கையில் நிலைத்தன்மை அவருடைய நன்னடத்தையின் எதிர் பார்ப்பையும் நிறைவு செய்கிறார்.*[4]

*ஒரு பிள்ளை தன்னுடைய பெற்றோரை கனப்படுத்தாமலேயே கீழ்ப்படியக் கூடும், அவன் கீழ்ப்படியாமல் அவர்களைக் கனப்படுத்த இயலாது. ஆகையால், பிள்ளைகள் பெற்றோர்களுக்கு கீழ்ப்படிய வேண்டியதன் பவுலின் நான்காவது காரணம் இது. கீழ்ப்படிதல் கனப்படுத்துதலிலிருந்து நிரம்பி வழிய வேண்டிய ஒன்று. கீழ்ப்படிவதன் அவசியத்தை அவர் மேலும் வலுவூட்டிப் பேசினார், அது கனப்படுத்துதலில் வரும் இயல்பான விளைவு, கனம் பண்ணுதல் என்பது மோசேயின் நியாயப்பிரமாணத்தின் பத்துக்கட்டளைகளில் ஒன்று (யாத்திராகமம் 20:12).*

*பவுல் குறிப்பிட்ட இந்த இடைப்பிறவரலான சொற்றொடர்* ***(இது வாக்குத்தத்தமுள்ள முதலாம் கற்பனை என்பது)*** *- விளக்கவுரையாளர்கள் மத்தியில் புதிராகத் தோன்றுகிறது, ஏனெனில் பத்துக் கட்டளையின் துவக்கத்தில் சொல்லப்பட்டுள்ள வாக்குத்தத்தத்தை சிலர் பார்க்கின்றனர். இரண்டாவது கட்டளைக்குப் பின்பு தேவன் தாம், "ஆயிரம் தலைமுறை வரைக்கும் இரக்கங்காட்டுகிறவராய் இருப்பார்" என்று சொன்னார் (யாத்திராகமம் 20:6). ஆகிலும், இது முற்றிலும் தேவனுடைய இயல்பின் விளக்கத்தை அவர் கொடுத்தார்:*

> *... உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன். என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளை கைக் கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கஞ் செய்கிறவராயிருக்கிறேன் (யாத்திராகமம் 20:5, 6).*

*சிலர் ஐந்தாம் கட்டளை மட்டுமே பத்துக்கட்டளைகளில் வாக்குத்தத்தம் உள்ள முதலாம் கட்டளை என்று வாதிடலாம், பவுல் அதுதான் முதலாம் கட்டளை என்று சொன்னார். ஆகிலும், பத்துக் கட்டளைகள்*

*முழு நியாயப்பிரமாணத்தையும் அறிமுகப்படுத்தியது, அது அநேக வாக்குத்தத்தங்களை உள்ளடக்கிய ஆறுநூறுக்கு மேற்பட்ட கற்பனைகளை உள்ளடக்கியிருந்தது.*

*"வாக்குத்தத்தத்தின்" அடையாளமாக பவுல் இங்கே குறிப்பிடுவது என்ன? ஐந்தாம் கட்டளை குறைந்த பட்சம் ஐந்துமுறை புதிய ஏற்பாட்டில் மேற்கோளாக காட்டியிருந்த போதிலும், எபேசியரில் மட்டுமே வாக்குத்தத்த அமைப்பைக் கொண்டுள்ளது. இந்த வாக்குத்தத்தம் -* **பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும்** *- என்பது கானான் தேசத்தில் இஸ்ரவேலர்கள் தொடர்ந்து ஆஸ்திகளைக் கொண்டிருப்பதற்கு சுட்டிக்காட்டப்பட்டது, பவுல் எபேசியருக்கு நிருபத்தை எழுதியபோது, கானான் தேசத்தை சுதந்தரித்திருப்பதைப்பற்றி தம் சிந்தையில் கொண்டிருக்கவில்லை. இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட பழைய ஏற்பாட்டு வாக்குத்தத்தங்களெல்லாம் கிறிஸ்துவின் வருகையாலும் அவருடைய சபையின் ஸ்தாபிதத்தினாலும் நிறைவேறின என்பது பவுலுக்குத் தெரியும் (காண்க ரோமர் 4; 8; கலாத்தியர் 3; 4). ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததிக்கும் கொடுக்கப்பட்ட தேசத்தைக் குறித்த வாக்குத்தத்தங்களெல்லாம் (காண்க ஆதியாகமம் 12:7; 13:15; 15:18) யோசுவா தேசங்களை வெற்றி கொண்ட போது அதன் (மேற்குறித்தவைகளின்) நிறைவேற்றத்தைக் கண்டது (காண்க யோசுவா 21:43-45; 23:14). மேலும், எபேசு சபை யூதர்களல்லாத அங்கத்தினர்களைக் கொண்டிருந்தது, எனவே இந்த வார்த்தைகளை அவர்கள் வாசித்தபோது, ஒரு போதும் கானான் தேசத்தைப் பற்றி நினைத்துக் கூடப் பார்த்திருக்கமாட்டார்கள். பவுல் உற்சாகப்படுத்தி எபேசு சபையிலிருந்த அனைத்துப் பிள்ளைகளும் அவர்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து அவர்களைக் கனப்படுத்த வேண்டுமென்று வாக்குத்தத்தத்தை பயன்படுத்தினார்.*

*"உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும்," என்று பவுல் எதை, சரியாகக் குறிப்பிட்டுச் சொன்னார்? பவுல் மற்ற நிருபங்களில் பலன் அல்லது பிரதிபலன் என்று குறிப்பிடுகையில், இறுதி நியாயத்தீர்ப்பில் கிடைக்கும் பிரதிபலன்களைப் போல பூமிக்குரிய பிரதிபலன்களைக் குறிப்பிடவில்லை (காண்க 1 கொரிந்தியர் 3:8, 12-15; 2 கொரிந்தியர் 5:10). அவர் "தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின் வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது" என்றபோது இந்த வாழ்விலுள்ள பரிசைப் பற்றிப் பேசியிருந்தார் (1 தீமோத்தேயு 4:8). இதில் குறிப்பிடப்பட்டுள்ள உட்செய்தி வாக்குத்தத்தம் தங்கள் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்து அவர்களைக் கனப்படுத்துகிற அனைத்து பிள்ளைகளுக்கும் நீடித்த வாழ்நாளையும் நன்மையான வாழ்க்கையையும் உறுதியளிப்பதாக அர்த்தப்படுவதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. பவுல் எளிமையான கவனம் செலுத்தி, மற்ற எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்க்கும் போது, தன் பெற்றோர்களை கனப்படுத்தி கீழ்ப்படிகிற ஒரு பிள்ளை பொதுவான நல்வாழ்வை அனுபவிப்பான், என்றார். இந்தக் கட்டளைகளை கண்டு கொள்ளாமல் விடுபவர்களின் வாழ்வை காட்டிலும் அவருடைய வாழ்க்கை சந்தோஷமாகவும் நிறைவுள்ளதாகவும் இருக்கும்.*[5]

*ஞானமாய் நடந்து கொள்ள, பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு*

*கீழ்ப்படிந்து அவர்களை கனப்படுத்த வேண்டும். இளம் பிள்ளைகள் கீழ்ப்படிதலினால் தங்கள் பெற்றோர்களைக் கனப்படுத்த வேண்டும், வாலிப பிள்ளைகள் வயதில் முதிர்ந்த பெற்றோர்களை அவர்களுக்கு வேண்டியவைகளைச் செய்வதினால் அவர்களை கனப்படுத்த வேண்டும் (காண்க 1 தீமோத்தேயு 5:4, 8).*

***பிதாக்களே: "சிட்சையிலும் போதகத்திலும் வளர்ப்பீர்களாக" (6:4)***

***[4]"பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக."***

*__வசனம் 4.__ பவுல் "பெற்றோரைப்" பற்றிக் குறிப்பிடும்போது வசனம் 1 ல், கிரேக்க பெயர்ச்சொல்லாகிய goneus; ஐ அவர் பயன்படுத்தினார்; வசனம் 2 - ல் "உன்னுடைய தகப்பனையும் தாயையும்" என்று குறிப்பிடுகையில் பொதுவான பதங்களான patēr மற்றும் mētēr ஆகியவைகளை பயன்படுத்தினார். ஆகிலும், எபிரெயர் புத்தக எழுத்தாளர் மோசேயின் பெற்றோரைக் குறிப்பிடுகையில், patēr எனும் பதத்தை பன்மைப் பொருளில் "தகப்பனையும் தாயையும்" குறிப்பிடும்படி பயன்படுத்தினார் (எபிரெயர் 11:23). 6:1-4ல் பவுல் மூன்று வித்தியாசப்பட்ட பதங்களைப் பயன்படுத்தியிருப்பதால் - ஒன்று "தகப்பனுக்கும்," ஒன்று "தாய்க்கும்," மூன்றாவது பதம் "பெற்றோருக்குமாக" - நாம் வசனம் 4ல் பிரதானமாக __பிதாக்களுக்கே__ பேசுகிறார் என்ற முடிவுக்கு வரமுடியும், ஏனெனில் அந்த வார்த்தை patēr பன்மைப் பொருளாக இருக்கிறது. பிள்ளைகளை பயிற்றுவிப்பதில், தாய்மார்களும், உண்மையில் உட்படுத்தப்பட்டவர்கள், ஆனாலும் தகப்பன்மார்களே பயிற்றுவிக்கும் விஷயத்தில் முன்னின்று நடத்துகிற பொறுப்பைக் கொண்டவர்கள். கிரேக்க வசனப் பகுதியில் (kai, "மேலும்") எனும் வார்த்தை வசனம் 4ல் கொண்டுள்ளது. இது பிள்ளைகள் தகப்பன்மார்கள் ஆகிய இரு சாராருக்குமே உறவுமுறையில் தேவன் - கொடுத்த பொறுப்பை உடையவர்களாயிருக்கின்றனர்.*

*__பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல்__ என்பது எப்படி ஞானமாய் நடந்து கொள்ள வேண்டும் என்ற பவுலின் போதனையின் துவக்கமாக காணுகிறது. "கோபப்படுத்துதல்" என்பது parorgizō, என்பதிலிருந்து வருகிற வார்த்தை, இது "கோபத்தை மூட்டுதல். கோபமடையச் செய்தல். சினமடையச் செய்தல், மூர்க்கம்" என்றெல்லாம் பொருள்படும்.[6]*

> *இது எண்ணங்களையும், வார்த்தைகளையும், செயல்களையும் தவிர்க்க வேண்டியவைகளை உள்ளடக்கியது, ஏனெனில் இவைகளினாலே ஒரு பிள்ளை கோபமடையவும் எரிச்சலையூட்டுவதாகவும் அல்லது சீற்றங்கொள்ளச் செய்யவும் கூடும், மற்றும் அதிகப்படியான சிட்சை கடுமையானதாக இருந்தாலோ, காரணமற்ற எதிர்பார்ப்புக்களை பிள்ளைகளிடம் வைத்தாலோ, அதிகாரத்தை அவர்கள் மீறி துஷ்பிரயோகம் செய்தாலோ, கொடுமை, பட்சபாதம் காட்டுதல், தொடர்ந்து தொல்லை கொடுத்தல் ஆகியன அவர்களை மிக வெறுப்பு கொள்ளச் செய்யும்.[7]*

*இதற்கு ஒப்பான வசனப்பகுதி, கொலோசெயர் 3:21ல், பவுல் "பிள்ளைகள் திடனற்றுப் போகாதபடிக்கு" என்ற வரியைச் சேர்த்துச் சொல்லுகிறார். குழந்தைகளிடம் பாரபட்சமாக மறுபடியும் மறுபடியும் நடந்து கொள்ளும் போது அது அவர்கள் ஒருபோதும் தங்களுடைய தகப்பன்மார்களை சந்தோஷப்படுத்தக் கூடாத அளவுக்கு வெறுப்பை ஏற்படுத்திவிடக் கூடும்.*

*நேர்மறைப்பொருளில் பிள்ளைகளைப் பயிற்றுவிக்கிறபோது,* **"கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்ப்பீர்களாக"** *என்று பவுல் சொன்னார். "வளர்ப்பீர்களாக," என்பதன் கிரேக்க வினைச்சொல் (ektrephō), "போஷித்து" என்று 5:29ல் சொல்லப்பட்டபடி மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பிள்ளையைப் பயிற்றுவித்தல் என்பது பொதுவாக ஒரு விசாலமான பொருளையுடையது, கல்வியளிப்பதைக் குறிப்பாக பின்வரும் இரு பதங்களில் குறிப்பிடுகிறது. புதிய ஏற்பாட்டில், ektrephō, என்பது இரண்டு தொகுப்புப் பொருளைக் கொண்டது (காண்க நடபடிகள் 7:22; 22:3; 2 தீமோத்தேயு 3:16; தீத்து 2:12) குறிப்பான பொருளையும் உடையது (காண்க 1 கொரிந்தியர் 11:32; 2 கொரிந்தியர் 6:9; எபிரெயர் 12:5, 7, 8, 11).[8] "சிட்சை" மற்றும் "போதனை" "... வளர்ப்பதற்குரிய" தகுதியைக் கொடுக்கிறது அதினால் "... வளர்ப்பீர்களாக" என்பது பொதுவானதும், "சிட்சையிலும்" "போதனையிலும்" என்பது குறிப்பானதுமாகும், இவை சிட்சித்துக் கற்பித்தலை குறிக்க பயன்படுத்தப்பட்டது.*

*"சிட்சித்தல்" (paideia) என்பது பொறுப்புடன் கூடிய வாழ்விற்கு வழிகாட்டலைக் குறிப்பது,[9] "இந்த வார்த்தை பிள்ளைகளின் முழு போதனைகளுக்கும் பயிற்றுவித்தலுக்கும்" உட்படுத்தப்படுதலைக் குறிப்பிடுவது. மேலும் "மனதை பக்குவப்படுத்துதலுக்கும் ஒழுக்கத்திற்கும், ... கட்டளைகளுக்கும் புத்திமதி சொல்லுவதற்கும் (அதேபோல) கடிந்து கொள்ளப்படுதலுக்கும் தண்டிப்பதற்கும் பயன்படுத்தப்பட்ட வார்த்தை."[10]*

*"சிட்சித்தல்" என்ற பதத்திற்கும் பின்பு பவுல் குறிப்பிட்ட வார்த்தை "போதனை" (nouthesia). இந்தப் பதத்தின் பிரதானப் பொருள் "புத்திமதி சொல்லுதல்" (காண்க ரோமர் 15:14; 1 கொரிந்தியர் 4:14; 10:11; கொலோசெயர் 1:28; 3:16; தீத்து 3:10). அது "அங்கே ஏதோ சில கஷ்டங்கள் அல்லது பிரச்சனைகள் புத்திமதியை ஏற்றுக்கொள்வோர் பகுதியில் அவர்களுடைய எண்ணத்தில் அல்லது நடவடிக்கையில் காணப்படுகிறது, அவைகள் தீர்க்கப்பட வேண்டும் அல்லது எதிர்ப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும்."[11]*

*முடிவாக தகப்பன்மார்களே தங்களுடைய பிள்ளைகளின் வளர்ச்சியில் (ektrephō), பயிற்றுவிப்பிலும் தேவையானவைகளை ஒழுங்கு செய்தல் வேண்டும், இதினால் அவர்கள் சமுதாயத்திலும் சபையிலும் பிரயோஜனமுள்ள குடிமக்களாக வளருவார்கள். இது கல்வியளித்தல் மூலமாக, புத்திமதிகள் (paideia), ஊக்கமளித்தல் (nouthesia), ஆகியவையும், அதினால் தவறான நடத்தைகளைத் திருத்தி சரியான நடத்தைகளைப் பாராட்டுதலையும் உட்படுத்துவது.*

*எனவே "கர்த்தருக்கேற்ற" என்பது "சிட்சையையும் போதனையையும்" பிதாக்கள் அளிப்பதற்கான தகுதிகளை அளிக்கிறது, வசனம் 4 "கிறிஸ்தவப் பயிற்சியையும், கிறிஸ்துவால் கொடுக்கப்படுகிறதும், அவரிடத்திலிருந்து*

அவரால் விவரிக்கப்படுகிறதுமான பயிற்சி," என்பதை நன்கு அறிந்து கொள்ளக் கூடியதாகக் சுட்டிக்காட்டப்படுகிறது.[12]

இதற்கு முன்பு, எபேசியர்கள், கிறிஸ்துவினிடத்தில் கேட்டறிந்து, போதிக்கப்பட்டவர்கள் என்றும், கிறிஸ்துவை கற்றுக் கொண்டவர்கள் என்றும் பவுல் பேசினார் (4:20, 21). "சிட்சையும் போதனையும்" தங்களுடைய பிள்ளைகளுக்கு தகப்பன்மார்களால் கொடுக்கப்பட வேண்டியது, அது சபைக்குப் பொருத்தமானதாக பார்க்கப்பட வேண்டியது என்று பொதுவாக இது சுட்டிக் காட்டுகிறது.[13]

## எஜமானர்களுக்கும் அடிமைகளுக்குமிடையேயான கனமளிக்கும் உறவுமுறை (6:5-9)

கிரேக்க - ரோம உலகில் அடிமைத்தனமானது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக இருந்தது. ஒரு சமுதாயத்தில் அடிமைத்தனம் ஒரு வகையான வாழ்க்கை முறையாக இருந்த இந்நிலையில் சில அடிமைகளின் ஏஜமானர்கள் கிறிஸ்தவர்களாக மாறுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது, ஆனால் அவர்களின் அடிமைகள் மாறமாட்டார்கள். சில அடிமைகள் கிறிஸ்தவர்களாவார்கள், அவர்களின் எஜமானர்களோ கிறிஸ்தவர்களாக மாட்டார்கள். சில இடங்களில் இரு சாராருமே கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாவார்கள். இப்படிப்பட்ட மாறுபட்ட சூழ்நிலையில் கிறிஸ்தவ எஜமானர்களும் அடிமைகளும் ஒருவருக்கொருவர் நடந்து கொள்ள வேண்டியது எப்படியென புதிய ஏற்பாடு உபதேசங்களை முன் வைப்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை.[14]

புதிய ஏற்பாடு அடிமைத்தனத்தை அனுமதிக்கவோ நிராகரிக்கவோ செய்வதில்லை. இந்த மிகப்பெரிய சமுதாயத் தீங்கை கண்டனம் பண்ணுவதற்குப்பதிலாக, ஏவப்பட்ட முதலாம் நூற்றாண்டு எழுத்தாளர்கள் அதை முறைப்படுத்தினார்கள். சுவிசேஷக் கோட்பாடுகள் முழுமையாய் மனித உறவுமுறைகளுக்குப் பயன்படுத்தப்பட்டபோது (காண்க மத்தேயு 7:12; 22:39), அடிமைத்தனம் தானாக அழிவுபெறும். அப்படி அது நடக்கும் வரை, புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் அடிமைத்தனத்தை அழிக்க அறைகூவல் விடுக்கவில்லை, அல்லது அடிமைகள் புரட்சி பண்ண அழைக்கவில்லை. எளிமையான சில தெய்வீக வழிகாட்டலை மட்டும் ஒழுங்கு செய்தனர்.

எபேசியர் 6:5-9ல், பவுல் கிறிஸ்தவ எஜமானர்களும் அடிமைகளும் ஒரே எஜமானராகிய கிறிஸ்துவுக்கே ஊழியம் செய்கிறார்கள் என்ற உணர்வைப் பெறும்படி புத்திமதி கூறினார். எபேசியர் நிருபம் தவிர மற்ற வேத வசனங்களும் அடிமைத்தனம் இன்னும் இருந்து கொண்டிருந்த நேரத்தில் கிறிஸ்தவர்களை வழிநடத்த உதவுவதாக இருந்தன.

### *வேலைக்காரர்களே: "கீழ்ப்படிந்திருங்கள்" (6:5-8)*

**5 வேலைக்காரரே, நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கும் பயத்தோடும் நடுக்கத்தோடும் கபடற்ற மனதோடும் கீழ்ப்படிந்து; 6 மனுஷருக்குப்**

**பிரியமாயிருக்கவிரும்புகிறவர்களாகப்பார்வைக்குஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள். [7]அடிமையானவனானாலும், சுயாதீனமுள்ளவனானாலும், அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவானென்று அறிந்து, [8]மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள்.**

*வரலாற்று பின்னணி மற்றும் வேதாகம போதனைகளில் எஜமானர்களும் அடிமைகளும் குறித்து "மேலும் கற்றுக்கொள்ள: அடிமைத்தனம்" என்ற பகுதியில் எபேசியரின் இந்த வசனப் பகுதியின் விளக்கவுரையில் உதவிகரமான விளக்கம் காணப்படுகிறது. பவுல் இன்னமும் ஞானவான்களாய் நடந்து கொள்ளுங்கள் என்ற கருத்தையே அலசுகிறார், இதை அவர் எஜமானர்கள் மற்றும் வேலைக்காரர்களாக சபைக்குள் இருப்பவர்களுக்கு பயன்படுத்துகிறார்.*

***வசனம் 5.*** *எஜமானர்களுக்கும் அடிமைகளுக்கும் (வேலைக்காரருக்கும்) ஒரே நிறைவான எஜமானர் உண்டு, அந்த எஜமானர் கிறிஸ்துவே (6:6, 9). ஆகிலும், வீட்டு பராமரிப்புக் கடமைகளில்,* ***அடிமைகள் மாமிசத்தின்படி எஜமானர்களாயிருக்கிறவர்களுக்கு*** *கீழ்ப்படிந்திருக்க வேண்டும், அதாவது, அவர்களுடைய பூமிக்குரிய எஜமானர்கள் "பரலோகத்தி லுள்ள ... எஜமானுக்கு" வேறுபட்ட ரீதியில் பேசப்படுகின்றனர் (6:9). கீழ்ப்படிந்திருத்தல் என்பதன் கிரேக்க வினைச் சொல் ஒரு தொகுப்பு வார்த்தையான, (hupakouo), (hupo, "கீழ்"), மற்றும் (akouō), "கேட்க" இதன் முக்கியமான பொருள் கீழ்ப்படிய, செவிகொடுக்க, பின்பற்ற, இணங்க என்றெல்லாம் பொருள்படும்.[15] "கீழ்ப்படிந்திருங்கள்" என்று சொல்லப்படுவது ஒரு தொடர் செயல், எனவே வேலைக்காரர்கள் (அடிமைகள்) தொடர்ந்து தங்கள் எஜமானர்களுக்கு,* ***பயத்தோடும் நடுக்கத்தோடும்*** *கீழ்ப்படிந்தி ருக்க வேண்டும். இதற்கு ஒப்பான சொற்றொடர் பவுலைச் சம்பந்தப்படுத்தி பயன்படுத்தப்பட்டது (1 கொரிந்தியர் 2:3), கொரிந்தியர்களுக்கு (2 கொரிந்தி யர் 7:15), மற்றும் பிலிப்பியர்களுக்கும் கூட பயன்படுத்தப்பட்டது (பிலிப்பியர் 2:12).*

*"பயப்படுதல்" என்பது phobos என்பதன் மொழிபெயர்ப்பு. இது மனைவிகள் தங்களுடைய புருஷர்களிடம் கொண்டிருக்க வேண்டிய மதிப்பை போன்றது (5:33; 1 பேதுரு 3:2) மேலும் குடிமக்கள் தங்கள் அரசுக்குக் காட்டும் மரியாதையைப் போன்றது (ரோமர் 13:7). இந்த வசனப்பகுதியில் இது, "பயபக்தி"[16] என்றோ அல்லது "மரியாதை" என்றோ பொருள்பட வேண்டும். எஜமானர்களுக்கு அவர்களின் அடிமைகள் காட்டும் மரியாதை அவர்களுடைய "நடுக்கத்தைத்" தொடர்ந்து வரவேண்டும். இது tromos என்பதன் மொழிபெயர்ப்பு, விளக்கவுரையாளர்கள் "நடுக்கத்தோடும்," எனும் பதத்தை மிகவும் மிருதுவாக்க முயற்சிக்கக் கூடாது. வேலைக்காரர்கள் தங்களுடைய எஜமானர்களுக்குக் கீழ்ப்படிதல் என்பது படபடப்புடன் கூடிய நடுக்கத்துடன் மனவெழுச்சியில் காணப்படவேண்டும், அல்லது* S. D. F. Salmond *குறிப்பிடுகிறபடி, "ஒப்படைக்கப்பட்ட கடமையை ஆர்வமிக்க கவலையோடு நிறைவேற்றுதல்," "குறைவு படாத ஆர்வமிக்க ஒரு அக்கறையுடன்"*

செயல்படுத்துதல்.[17]

**"கபடற்ற மனதோடு"** என்பது கீழ்ப்படிதல் சுத்தமான உள் மனதுடன் செயல்படுதலை விவரிக்கிறது. "கபடற்ற" என்பது (*haplotēs*) "தூய்மை" அல்லது "உண்மையுள்ள" இருதயம் எனும் கருத்தைக் கொடுக்கிறது.[18] "இருதயமே" ஒருவருடைய நபர்த்துவம்; அது சிந்தனைகளை இயக்குகிறது; ஒருவருடைய எண்ணங்களையும், செயல்களையும் வெளிப்படுத்துகிறது. தன் எஜமானனுக்குக் கீழ்ப்படிகிற ஒரு அடிமையின் ஊற்றுக்காரணமாய் விளங்குகிற, அவனது "இருதயம்" சுத்தமுள்ளதாயும் முழுக்க முழுக்க உண்மையுள்ளதுமாயும் இருக்க வேண்டும். அடிமைகள் தங்களுடைய சேவை **கிறிஸ்துவுக்கு** செய்யும் கடமையாக உணர்ந்து கொள்ளும்போது மேற்குறித்த இப்படிப்பட்ட இருதயத்தையே கொண்டிருப்பார்கள். கிறிஸ்தவர்கள் தங்களுடைய அன்றாட நடத்தையில் தனித்து விடப்பட்டவர்களல்ல. அவர்கள் தங்கள் பூமிக்குரிய கடமைகளை நிறைவேற்றும்போது கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தை அவர்கள் கனப்படுத்துகிறார்கள்.

**வசனம் 6.** வேலைக்காரர்கள் (அடிமைகள்) தங்களுடைய எஜமானன் அருகில் இருந்து இவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தாலும் கவனியாமல் போனாலும், சிறப்பானதொரு சேவையை செய்ய வேண்டியவர்கள். அவர்கள் தங்களுடைய எஜமானர்களை மாத்திரம் பிரியப்படுத்தக் கூடியவர்களாக அல்ல. அவர்கள் மாறாக தங்களுடைய மெய்யான எஜமானராகிய, தேவனையே பிரியப்படுத்த வேண்டும், அது மறைவிலே செய்யப்படுகிற கிரியையாக இருந்தாலும் வெளிப்படையான கிரியையாக இருந்தாலும் சரி. அவர்கள் **மனுஷர்களைப் பிரியப்படுத்தக் கூடியவர்களாக** அல்ல, தேவனைப் பிரியப்படுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும் (காண்க கொலோசெயர் 3:22). அப்படி தங்களுடைய எஜமானர்களுக்கு உண்மையாய் சேவை செய்யும் போது, வேலைக்காரர்கள் **தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகின்றனர்,** மேலும், தங்கள் உள்ளான நோக்கத்தில், சுத்தமுள்ளவர்களாயும், **இருதயப் பூர்வமான** சேவையைச் செய்யக்கூடியவர்களாயும், அதாவது, "தங்களுடைய முழு இருதயத்தோடும்" சேவைசெய்வோராயிருப்பார்கள்.

**வசனங்கள் 7, 8.** பவுல் மேலும் வேலைக்காரர்களுடைய இருதயத்தைக் குறித்து விளக்கமளிக்கிறார். **நல்மனதோடே,** என்பது (*eunoia*), மொழிபெயர்க்கப்பட்டதன் பொருள், "பெரும் ஆவல், வைராக்கியம்" என்பன.[19] அடிமைகள் தங்கள் எஜமானர்களுக்கு நேர்மறையில் கீழ்ப்படிய வேண்டியவர்கள், அது "பயத்தோடும் நடுக்கத்தோடும்," கீழ்ப்படிதலாகும், மற்றும் (அவர்களுடைய) இருதயங்களின் ஒருமைப்பாட்டில் கீழ்ப்படிய வேண்டும். அவர்கள் எதிர்மறையிலும் கீழ்ப்படிய வேண்டும் - "பார்வைக்கு ஊழியஞ்செய்கிறவர்களாயிருக்கக் கூடாது." (அதாவது, "ஒருவர் தனது எஜமானனுடைய பார்வையில் இருக்கும் பொழுது மாத்திரம்" ஊழியம் செய்வதல்ல), ஆனால் உற்சாகமாகவும், "நல் மனதுடனேகூட செய்ய வேண்டும்."[20] தங்களுடைய ஊழியம் **கர்த்தருக்கென்று** செய்வதாக உணர்ந்து ஆர்வத்துடனே கீழ்ப்படிந்திருக்க வேண்டும். மேலும், **அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவானென்று** அறிந்து கொள்ள வேண்டுமென்று பவுல் விரும்பினார்.

தங்களுடைய எஜமானர்களுக்கு இப்படியாக ஊழியஞ் செய்தவர்கள்,

*தங்களின் எஜமானர்களால் நன்கு நடத்தப்படுவார்கள் மற்றும் அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. தங்களுடைய எஜமானர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டார்களோ இல்லையோ, எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கிற கர்த்தர், அவர்களுடைய கீழ்ப்படிதலுக்கேற்ற பலனை கடைசியில் தருவார் என்கிற உறுதி அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. எபிரெயருக்கு எழுதின எழுத்தாளர், "உங்கள் பிரயாசங்களை மறந்து விடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே" என்று சொன்னார் (6:10). தேவன் இந்த உலகத்தில் அடிக்கடி கீழ்ப்படிலுக்கு தமது பிரதிபலனை அளிக்கிறார். மலைப்பிரசங்கத்தில், இயேசு எது சரியானவையோ அதற்குத் தக்க சில பலன்கள் கிடைக்கும் என்று இயேசு குறிப்பிட்டார் (காண்க மத்தேயு 6:4, 6, 18), மற்றவைகள் மறுமைக்கென்று வைக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னார். கிறிஸ்தவனுக்குக் கிடைக்கும் பரலோக "பலன்" மத்தேயு 5:12, 46 மற்றும் 1 கொரிந்தியர் 3:8, 14 லும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*2 கொரிந்தியர் 5:10ல், அப்போஸ்தலன் சொன்னார், "சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக வெளிப்பட வேண்டும்." தங்களுடைய எஜமானர்களுக்குக் கீழ்ப்படிகிற வேலைக்காரர்கள் மறுபலன் அல்லது பிரதி பலனை இந்த வாழ்க்கையில் செய்த கிரியைகளுக்கு இறுதி நியாயத்தீர்ப்பின் போது தேவனால் அருளப்படுவார்கள். இரட்சிப்படைந்துள்ள அனைவரும் தேவனுடைய கிருபையால் முழுமையாய் இரட்சிக்கப்படுவார்கள். எப்படியிருப்பினும், கிறிஸ்தவன் நியாயத்தீர்ப்பின்போது, "தான் செய்த கிரியைக்கேற்ற பலனை அடைவான்."*

***அடிமையானவனானாலும், சுயாதீனமுள்ளவனானாலும்** என்பது தேவனுடைய பாரபட்சமற்றத் தன்மையைக் காட்டுகிறது (காண்க நடபடிகள் 10:34). அடிமைகள் மற்றும் எஜமானர்களுடைய ஸ்தானம் முதல் நூற்றாண்டு வீடுகளிலே கைக் கொள்ளப்பட்டன, ஆகிலும் நியாயத்தீர்ப்பு நாளிலே இந்த வித்தியாசம் கண்டுகொள்ளப்படமாட்டாது. இறுதியில் பாகுபடுத்தி பார்ப்பதில், கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் சமமாகக் கருதப்படுவார்கள் (கலாத்தியர் 3:27, 28).*

### எஜமானர்களே: "நற்செயல்களைச் செய்யுங்கள்" (6:9)

**9 எஜமான்களே, அப்படியே நீங்களும் வேலைக்காரர்களுக்குச் செய்யவேண்டியவைகளைச் செய்து, அவர்களுக்கும் உங்களுக்கும் எஜமானானவர் பரலோகத்தில் இருக்கிறாரென்றும், அவரிடத்தில் பட்சபாதம் இல்லையென்றும் அறிந்து, கடுஞ்சொல்லை விட்டுவிடுங்கள்.**

***வசனம் 9.** அடிமைகளுக்கும் எஜமானர்களுக்கும் இடையேயான உறவுமுறையைக் குறித்து முடிவுரையாக, அவர் **எஜமானர்களின்** கடமைகளைக் குறித்துப் பேசினார். (ஆங்கிலத்தில் மேலும் எனும் வார்த்தையுடன் 9ம் வசனம் துவங்குகிறது.) அது இந்தப் போதனை எஜமானர்களையும் அவர்களின் அடிமைகளுக்கான கடமையையும் தங்களுடைய கடமைகளையும் பிணைக்கும் வார்த்தையாக பயன்படுத்தப்பட்டது. **அப்படியே நீங்களும்***

***செய்ய வேண்டியவைகளை அவர்களுக்கு செய்து*** என்பது வேலைக்காரர்களும் எஜமானர்களுமாகிய இரு சாராருமே ஒரே எஜமானருக்குக் கீழ் ஊழியஞ் செய்கிறார்கள், அதாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்கிறார்கள் என்பதை உணர வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது. எஜமானர்கள், தங்களுடைய அடிமைகளைப் போலவே, தாங்களும் கிறிஸ்துவின் அடிமைகள் என்றும் அவருக்கு கணக்கு ஒப்புவிக்கவேண்டும் என்பதையும் புரிந்து கொண்டிருந்தால் தங்கள் வேலைக்காரர்களிடம் அதிகமான கவனம் செலுத்துவார்கள். எஜமானர்கள் **கடுஞ்சொல்லை விட்டுவிட வேண்டும்** என்று போதிக்கப்பட்டனர். எஜமானர்களுக்கும் ஒரே வித "நல்மனது" (6:7) தங்களுடைய அடிமைகளிடத்திலும் அடிமைகளுக்கு தங்களுடைய எஜமானர்களிடத்திலும் இருக்குமானால், இருவருமே பலனடைவார்கள். முதலாவதாக, எஜமானர்கள் தங்களுக்கு ஒரு எஜமானர் பரலோகத்தி லிருக்கிறார் என்று உணர்ந்து தாங்கள் அவருக்கே கணக்கு ஒப்புவிக்கவேண்டும் என்று உணர்ந்து கொள்வார்கள். இரண்டாவதாக. உறவுமுறைகள் இன்னும் அதிக மகிழ்ச்சியைக் கொடுக்கக் கூடும். மூன்றாவதாக, அடிமைகள் உற்சாகத்தோடே ஊழியம் செய்யத்தக்கதாக ஊக்கப்படுத்தப்படுவார்கள்.

***அவரிடத்தில் பட்சபாதம் இல்லை*** என்பது தேவனுக்கு முன்பாக எல்லா ஜனங்களும் சமமானவர்கள் என்பதை வலியுறுத்துகிறது. "பட்சபாதம்" என்பது கிரேக்க வினைச்சொல்லாகிய *prosōpolēmpsia* என்பதன் மொழி பெயர்ப்பிலிருந்து வருகிறது. எபிரெய வாக்கியத்தின்படி "பாரபட்சம் காட்டுவது, முகத்தாட்சண்யம் பார்த்து முற்றிலும் தீர்ப்பளிப்பது, அல்லது வெளிப்புறத் தோற்றத்தின் அடிப்படையில் மதிப்பிடுவது" என்று பொருள்படுகிறது.[21] எஜமானர்கள் தங்களுடைய அடிமைகளுக்கு மேலானவர்கள் என்கிற உயர்ந்த மனப்பான்மை கொள்ள ஏதுவாக இருந்தது. உயர்வு மனப்பான்மை என்பது குடும்பத்தின் (வாரிசுகளுக்கு) ஒரு தொடர் அடையாளமாக எடுத்துக் கொள்ளப்படக் கூடுமாகையால், எஜமானர்கள் தேவனுடைய பார்வையில் எல்லாரும் சமமானவர்கள் என்று நினைப்பூட்டப்பட்டனர். ஆகையால், எஜமானர்கள் தங்களுடைய அடிமை களோடே காரியங்களை செயல்படுத்தும்போது, மேலான எஜமானராகிய, இயேசு கிறிஸ்துவுக்கு உடன் வேலையாட்களாக அவர்களைக் கருத வேண்டும். அவர்கள் இந்தப் பொறுப்பை நிறைவேற்றும்போது எஜமானர்கள் ஞானமாய் நடந்து கொள்வார்கள்.

## கர்த்தருக்குள் பலப்பட வேண்டும் (6:10-20)

கிறிஸ்தவர்கள், தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொண்டு, கர்த்தருக்குள் பலப்பட ஏதுவான புத்திமதியைக் கொடுத்து பவுல் தனது போதனையை நிறைவு செய்தார். இந்தப் பகுதி 4:1ல் துவங்கி, மகிமையுள்ள சபையாக பயிற்றுவித்துக் கொள்ள ஏதுவாக்கும் வகையில் விவாதித்து நிறைவு செய்கிறார். இந்த வசனப் பகுதிகளை மூன்று பாகங்களாக ஒருவேளை பிரிக்கலாம்: விசுவாசிகளுக்கு இதில் கொடுக்கப்படும் அறிவுரை "தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொண்டு" "கர்த்தருக்குள் பலப்பட" வேண்டும் என்பதே (6:10-13), கிறிஸ்தவர்களின் போராயுதங்களைக் குறித்த விளக்கம் (6:14-17), மற்றும் ஜெபத்திலே தேவனையே முழுமையாய்ச் சார்ந்திருத்தலின்

*அவசியம் (6:18-20).*

***அறிவுரை: “பலப்படுங்கள்” (6:10)***

**[10]கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்.**

***வசனம் 10.*** *பவுலின் நிருபம், சபையிலே வெளிப்படையாக வாசிக்கப்பட்டிருக்கக் கூடும் என்பதிலே சந்தேகமில்லை. “கடைசியாக” என்ற வார்த்தையை வாசித்தபோது, சபையார்கள் தங்களுடைய உடமை களை எடுத்து கொண்டு வீட்டிற்குப் போக ஆயத்தப்படும்படி சொன்ன வார்த்தையல்ல. சபையின் நிலையான தன்மைக்கு பின்வரும் போதனைகள் மிகவும் அவசியமானவை. அவை வாசிக்கப்படவும், கேட்கப்படவும், நேர்மையாக கைக்கொள்ளப்படவும் வேண்டியவை.*

***கடைசியாக*** *(tou loipou)*[22] *என்பது பவுலின் நிருபத்தில் எஞ்சியிருப்பவைகளைக் குறிப்பிடுகிறது. இந்த வார்த்தை, “இப்பொழுதிலிருந்து” எனும் கருத்தைக் கொண்டுள்ளது, 1 கொரிந்தியர் 7:29 லும் எபிரெயர் 10:13 லும் இக்கருத்து சொல்லப்பட்டுள்ளது. இந்த சகோதரர்கள் மிகவும் வல்லமையான சத்துருவை சந்தித்து விட்டனர், எனவே இப்போதும் இனிவரும் காலத்திலும் “கர்த்தருக்குள் பலப்படும்படி” கூறப்பட்டனர்.*

***பலப்படுங்கள்*** *என்பது கிறிஸ்தவர்கள் சந்திக்கும் போராட்டத்தைப் பற்றிய பவுலின் விவாதத்திற்குள் கொண்டு செல்லுகிறது மற்றும் தேவன் அன்று இஸ்ரவேலருக்கு அவர்கள் கானானில் விரைவில் சந்திக்கவிருந்த யுத்தத்திற்காக கொடுத்த கட்டளையை நமக்கு நினைப்பூட்டுகிறது (காண்க யோசுவா 1:6, 7, 9). “பலப்படுங்கள்” என்பது கிறிஸ்தவர்கள் தங்களை “பலப்படுத்திக் கொள்ள” தாங்களே அனுமதிக்க வேண்டும் என்று அர்த்தப்படுகிறது.*[23] *பலப்படுதல் என்பது புறம்பான மூலக்காரணியான,* ***கர்த்தரிடத்திலிருந்து*** *வர வேண்டும். இந்த நிருபம் முழுவதும், “கிறிஸ்துவுக்குள்” மற்றும் “கர்த்தருக்குள்” என்பவை எபேசியரை நினைப்பூட்டி, சபையாக, அவர்கள் என்னவாக மாறினார்கள் மற்றும் என்னவாக இருக்கிறார்கள் என்றும் அவர்கள் சாதிக்க வேண்டியவைகளையும் குறிப்பிடுகின்றன.*

*கர்த்தரிடத்திலிருந்து வருகிற பலப்படுத்துதல் “தேவனுடைய மகா மேன்மையான மகத்துவம் நிறைந்த வல்லமையை விசுவாசிக்கிற அனைவருக்கும்” நினைப்பூட்டுதலாகும் (1:19) மேலும் அவர் தம் ஆவியின் மூலம் “உள்ளான மனுஷனிலே” கொடுக்கப்படுகிற பெலத்தைக் குறிக்கிறது (3:16). “கர்த்தருக்குள்” என்பது பெலம் பெறுகிற மூலகாரணி மற்றும் கிறிஸ்தவர்கள் தங்களுக்கான பெலத்தைப் பெறுகிற செயல் எல்லை ஆகிய இரண்டையுமே குறிக்கிறது.*

*இந்தப் பெலத்தைக் குறித்து இரண்டு வார்த்தைகள் விவரிக்கின்றன: வல்லமை மற்றும் சத்துவம். பவுலால் பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தைகள் வல்லமை (kratos, “பெலம்”) மற்றும் (ischus,) “சத்துவம்,” இரண்டும் சமசீர் வார்த்தைகள். இவைகள் தேவனுடைய வித்தியாசப்பட்ட முகப்பைக் கொண்ட வல்லமையை சுட்டிக் காட்டுவதைக் காட்டிலும்*

*கிறிஸ்தவர்களுக்குக் கிடைக்கக் கூடியதாக இருக்கும் வல்லமையை வலியுறுத்தவே பயன்படுத்தப்பட்டுள்ளன.*

***உபதேசம்: "தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொள்ளுங்கள்" (6:11-17).***

***[11]நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள், [12]ஏனெனில், மாம்சத்தோடும், இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. [13]ஆகையால் தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். [14]சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும், [15]சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும் [16]பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள். [17]இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்.***

***வசனங்கள் 11, 12.*** *தேவனுடைய வல்லமைகளும் பாதுகாப்பும் ஆயுத வர்க்கம் எனும் பதங்களில் பயன்படுத்தப்படுகிறது, அவை ரோம போர்வீரன் அணிந்திருந்தவைகளுக்கு ஒப்பானது. கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பெலத்தில் வல்லமையில் பலமாய் நிற்க வேண்டியவர்கள், ஏனெனில் நாம் தேவனுக்கும் பிசாசானவனுக்கும் இடையிலான முழு யுத்தத்தில் வாழ்வுக்கும் - சாவுக்கும் - இடையிலான போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறோம். அதிகாரங்கள் 1 லிருந்து மூன்றில் யுத்தம் ஏற்கனவே வெற்றி காணப்பட்டுள்ளது என்பதற்கான ஆதாரத்தை காணுகிறோம், ஆகிலும் தனிப்பட்டோரின் வாழ்நாளில் ஒவ்வொரு நாளும் போராடியே தீர வேண்டும். வெற்றிபெற ஏதுவாக, கிறிஸ்தவர்கள் தேவனுடைய பெலத்தை சார்ந்திருப்பது அவசியம். கிறிஸ்தவ போராட்டத்தை விவரிக்கிற பவுல் யுத்தகளத்தில் ரோம போர்ச்சேவகன் அணியும் ஆயுத வர்க்கத்துடன் ஒப்பிட்டுப் பேசுகிறார். சர்வாயுத வர்க்கத்துக்கு பயன்படுத்தப்பட்டுள்ள பதம் (panoplia, "சர்வ ஆயுதம்") "பாதுகாத்துக் கொள்ளவும் எதிர்த்து அடிக்கவும் உரியவைகளான ஆயுதம் தரித்த பாதங்களைக் கொண்ட யுத்த வீரனுக்கு பயன்படுத்தப்படுவது."[24]*

*கிறிஸ்தவனின் ஆயுதங்கள்* ***தேவனுக்கு உரியவை;*** *அவரே இந்த யுத்தத்தை நடத்துவதற்கு மூல காரணராயிருந்து உதவுகிறார். பவுல், "எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது," என்று சொன்னார் (2 கொரிந்தியர் 10:4).*

*கிறிஸ்தவன் "தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும்" தரித்துக் கொள்ள வேண்டியதன் அவசியம்,* **"தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்த்து நிற்க திராணியுள்ளவர்களாயிருக்கும் பொருட்டு."** *"நிற்கும் பொருட்டு" (dunamai) எனும் வார்த்தையை பவுல் மீண்டும் வசனம் 13 மற்றும் 16ல் பயன்படுத்தி, தேவனுடைய பலம் கிறிஸ்தவர்கள் "நிற்க திராணியுள்ளவர்களாக்குகிறது" என்று குறிப்பிடுகிறார் (histemi). நிற்கத் திராணியுள்ளவர்களாயிருப்பது குறித்து வசனங்கள் 13, 14லும் காணப்படுகிறது, அதில், "ஒருவர் தமது ஸ்தானத்தை காத்து, எதிர்த்து நின்று, எதிரிகளுக்கு முன் சரணடையாமல் எதிர்த்து வெற்றி கொள்ளச் செய்கிறது."*[25]

*யாருக்கு எதிராக கிறிஸ்தவர்கள் உறுதியாய் நிற்க வேண்டியவர்கள்? பிசாசுக்கு (diabolos). (காண்க "மேலும் கற்க: நமது எதிராளியாகிய, பிசாசானவன்.") வசனம் 12ல், இந்த எதிராளியைக் குறித்து பவுல் விளக்கமளிக்கிறார்:* **"ஏனெனில் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு"** *(காண்க 1:20; 3:10). ஆவிக்குரிய ரீதியில் கிறிஸ்தவர்களுக்கு சகலவிதமான பொல்லாப்புகளும் நேரிடும், அவை சுவிசேஷத்துக்கு எதிராக சாத்தான் நடத்துவது. கிறிஸ்தவர்கள் வெற்றி கொள்ள வேண்டுமானால் தேவனுடைய சர்வாயுத வர்க்கம், இயல்பாக ஒரு யுத்தத்தில் தேவைப்படுவது போலவே, அவனுக்குத் தேவை.*

*சாத்தானுக்ன்று சில யுத்த* **தந்திரங்களுண்டு** *(methodeia); அதாவது அவன் "தந்திரங்களை" அல்லது "சுழ்ச்சித்திட்டங்களை" யுடையவனாவான்*[26] *அதினால் அவன் விசுவாசிகளை அசையப்பண்ணி விசுவாசத்தில் அவர்கள் கொண்டிருக்கும் உறுதியைக் குலைப்பான். திட்டங்களின் பன்மை வார்த்தைகள் பிசாசானவனுக்கு ஜனங்களைத் தாக்க அநேக வழிகள் உண்டு என்பதை குறிப்பிடுகிறது. பவுல் தீமோத்தேயுவை எச்சரித்து "பிசாசின் கண்ணியில்" விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கும்படி கூறினார் (1 தீமோத்தேயு 3:7; 2 தீமோத்தேயு 2:26).*

*பொல்லாங்கனின் வல்லமையை பவுல், "கிறிஸ்துவால் முறியடிக்கப்பட்டதாகவும், ஆகிலும் அவன் இன்னமும் விசுவாசிகளின் பாதையில் குறுக்கிட்டு சுவிசேஷம் பரவுவதற்கு இடையூறை ஏற்படுத்தி அவர்களைத் தன் வசப்படுத்துவதாகவும்" பார்த்தார்.*[27] *இன்னொரு வார்த்தையில் சொன்னால், தான் தோற்றுப்போனது பிசாசுக்குத் தெரியும், ஆனாலும் தொடர்ந்து எத்தனை ஆத்துமாக்களைத் தன் வசப்படுத்த முடியுமோ அத்தனை ஆத்துமாக்களை வசப்படுத்த முற்படுகிறான். கணக்கொப்புவிக்கும் பிராயம் அடைந்த ஒவ்வொருவரும் ஒரு காலத்தில் சாத்தானுக்குக் கீழ்ப்பட்டிருந்தார்கள் (2:1-3); ஆனாலும் கிறிஸ்தவர்கள் தேவனுடைய திட்டத்தை கிறிஸ்து மூலமாய் ஏற்றுக் கொண்ட கிறிஸ்தவர்கள் அதிலிருந்து விடுதலையாகி இருக்கிறார்கள் (2:4-22). கிறிஸ்தவ யுத்த வீரர்களாக, வெற்றியையே தங்களுடைய பணியின் நோக்கமாகக் கொண்டு, தோல்வியுற்றும் இன்னும் வல்லமையுடன் செயல்படுகிற எதிரிக்கு முன்பாக உறுதியாய்த் தரித்திருக்க வேண்டும்.*

*"போராட்டம்" எனும் பதம் (palē), என்பது வழக்கமாக "மற்போர் புரிகிற*

*விதத்தை"*[28] படம் பிடித்துக் காட்டுகிறது. பவுல் விளக்கப்படுத்த முற்படுவது இது வென்றால், அவர் தனது உருவக மொழியை யுத்த வீரன் என்பதிலிருந்து, மற்போர் வீரன் என்பதாக குறிப்பிட்டிருக்கக் கூடும்; ஆகிலும், இந்தப்பதம் பண்டைய காலத்தில், "எந்தவொரு போட்டிக்கும் அல்லது யுத்தத்துக்கும் பயன்படுத்தப்பட்டது."[29] பவுல் தனது பதத்தை கிறிஸ்தவனின் யுத்தம் சத்துருவோடு மிகவும் நெருக்கமாக நடப்பதைச் சுட்டிக் காட்ட மாற்றியிருக்க வேண்டும்.

கண்ணுக்குப் புலப்படாதவனானாலும் அவர் இருப்பது மிகவும் நிச்சயம் - "ஆவிக்குரிய வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகள் - வல்லமையுள்ளவர்களாயிருக்கிறார்கள்."[30] அவன் "இருளின் அதிகாரத்தைப் பெற்றவனாக" அந்த ரீதியில் பேசப்படுகிறான் (கொலோசெயர் 1:13), ஆத்துமாக்களை வஞ்சித்து அவர்களை வசப்படுத்தும் பொருட்டு, அவன் கள்ள ஊழியர்களையும், மோசம் போக்கும் உபதேசங்களையும், பொய்யான இடங்களில் தொழுகையையும் செய்ய ஏதுவாக்கியிருக்கிறான்.[31] பவுலின் ஊழியம் "ஜனங்களை சாத்தானுடைய அதிகாரத்தினின்று தேவனிடத்தில் திருப்புவதுதான்" (நடபடிகள் 26:18). அப்படிப்பட்ட சக்திகளை சந்திப்பதற்கும் அவைகளை மேற்கொள்வதற்கும், தேவனுடைய உதவி கிறிஸ்தவர்களாகிய நமக்குத் தேவை.

**வசனம் 13. தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள்.** "தரித்துக் கொள்ளுங்கள்" என்ற வினைச்சொல் ஒரு கட்டளையாக ஒரே விசை மேற்கொள்ள வேண்டியதாகக் கூறப்படுகிறது. கிறிஸ்தவப் போர்வீரர்கள் "தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும்" "தரித்துக் கொண்டு" தொடர்ந்து அதை அணிந்து கொண்டிருக்க வேண்டும்.

அடுத்ததாக அவர் **ஆகையால், தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும்** என்றார். "தீங்கு நாளில்" எனும் வார்த்தைகள் வருகிற தீமை களைக் குறித்ததாக இருக்கலாம். சில விளக்கவுரையாளர்கள் குறிப்பிடுகையில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு சற்று முன்பாக மிகப் பெரிய அளவாய் தீமை அதிகப்படும் என நம்புகின்றனர். ஒரு வேளை இது உண்மையென நிருபிக்கப்பட்டாலும், 5:16ல் பவுல் எபேசியர்கள் வாழ்ந்த நாட்களே தீங்கு நாட்களாகப் பேசுகிறார். ஆகையால், பவுல் அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த நாட்களிலும் எதிர் வரும் நாட்களிலும் தீங்கு நாட்களை சந்திக்க, எதிர்கொள்ள ஏதுவாக தங்களை ஆயத்தப்படுத்தும்படி தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக் கொள்ளும்படி பவுல் கூறியிருக்கக் கூடும்.

"எதிர்த்து நிற்க" என்பது *anthistēmi,* என்பதன் மொழிபெயர்ப்பு, அதன் பொருள் "ஒருவர்தாமே ஒருவரை எதிர்த்தல் … தன் கருத்துக்காக நிலைநிற்குதல், எதிர்த்துப் பேசுதல்."[32] இதன் கருத்து போராட்டத்தில் வெற்றிகாணுதல், என்று கடைசி வசனம் சொல்லுவதைப் போன்ற கருத்தைக் கொண்டது. **சகலத்தையும் செய்து முடித்தவர்களாய்** என்பது "நடப்பித்தல், சாதித்தல் அடைதல், ஒரு நல்ல விளைவை ஏற்படுத்தத் தக்க வகையில் ஏதோ ஒன்றை செய்தல், ஒரு முழுமையான முடிவு உண்டாக ஒன்றை நடத்துதல் எனும் பொருளைக் கொடுக்கிறது."[33] கிறிஸ்தவ யுத்த வீரர்கள் தேவனுடைய ஆயுத வர்க்கத்தைத் தரித்துக் கொண்டு, தேவன் கொடுக்கும் ஆயுதங்களையே அணிந்து கொள்ளும் போது **நிலையாய்நிற்கவும்,** வெற்றியடையவும் **எல்லாம்**

*செய்யப்பட்டிருக்கிறதென்று நிச்சயமாயிருக்க முடியும்.*

*பவுல் மீண்டுமாக கிரேக்க வசனத்தின்படி "ஸ்திரமாக நில்லுங்கள்" என்ற புத்திகூறுகிறார் (காண்க 6:11, 13). தம்முடைய பிற எழுத்துக்களில் இதைத்தான் அடிக்கடிப் பயன்படுத்தினார், கொரிந்துப் பட்டணத்து சபை சுவிசேஷத்தில் நிலைநின்றது, மற்றும் சகோதரர்களை விசுவாசத்தில் உறுதியாய் நிலைகொண்டிருக்கும்படியும் குறிப்பிட்டார் (1 கொரிந்தியர் 15:1; 16:13). ரோமர்களுக்கு எழுதும் போது, "கிருபையிலே ... நிலை கொண்டிருக்கிறோம்" என்று குறிப்பிட்டு, பின்பு "அவர்கள் விசுவாசத்தினாலே நிற்கிறார்கள்" என்றும் சொன்னார் (ரோமர் 5:2; 11:20). பவுல் பிலிப்பியருக்கு வாக்களித்து "அவர்கள் ஒரே ஆவியிலே உறுதியாய் நின்றார்கள்" என்றும் பிறகு அவர்களுக்கு அறிவுறுத்தி "கர்த்தருக்குள் நிலைத்திருங்கள்" என்று சொன்னார் (பிலிப்பியர் 1:27; 4:1). அவருடைய சிநேகிதனான எப்பாபிரா "தேவனுக்குச் சித்தமானவைகள் எல்லாவற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலை நிற்க வேண்டுமென்று" கொலோசெயர்களுக்காக ஜெபித்தான் (கொலோசெயர் 4:12).[34] நம்முன் இருக்கிற வசனப் பகுதியில், பவுல் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொள்வது எபேசியர்களை "உறுதியாகத் தரித்திருக்கச் செய்யும்," என்று காட்டுகிறார்.*

***வசனம் 14. சத்தியம் எனும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும்*** *என்று வாசித்த போது நிச்சயமாக எபேசியரின் மனதில் ரோம போர் வீரர்கள் அணியும் ஆயுத வர்க்கங்கள் நினைவுக்கு வந்திருக்கக் கூடும். எபேசியர் புத்தகத்தை பவுல் எழுதினபோது அவர் ரோமாபுரியில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தபடியால், ஒவ்வொரு நாளும் அவர் யுத்த வீரர்களின் உடைகளை பார்த்தார். அவர்கள் இவருடைய மனதில் நினைப்பூட்டி மகத்தான ஆவிக்குரிய போராட்டத்தில் கிறிஸ்தவன் அணிய வேண்டிய ஆயுதவர்க்கங்களின் தேவைகளை சுட்டிக் காட்டியிருக்க வேண்டும்.*

*வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளோடே செய்யும் போராட்டம் ஜனங்களின் மனப்போராட்டம். எனவே சரியான சிந்தனைகளை கொண்டிருக்க வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக் காட்டி பவுல் கொரிந்தியர்களுக்கு எழுதினார்,*

> *நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல. எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக் கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவ பலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம் (2 கொரிந்தியர் 10:3-5).*

*சாத்தான் தான் விரும்புகிறபடி நம்மைச் சிந்திக்க வைப்பானானால், நமது யுத்தம் தோற்கப்பட்டாயிற்று. சாத்தான் மிகவும் தந்திரமுள்ளவனும் நம்முடைய சிந்தனை முறைகளை பல வகையிலும் பயன்படுத்த அவன் செல்வாக்குடையவனாயிருக்கிறான் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.*

பொருள் உலக சிந்தனை சாத்தானுடைய கையில் இருக்கிற மிகவும் வலிமையான ஒரு கருவி. "உங்கள் மனதின் அரையைக் கட்டிக் கொண்டு,[35] தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள்" என்று பேதுரு சொன்னதில் வியப்பு எதுவுமில்லை (1 பேதுரு 1:13).

"அரையில்" (*osphun*), என்பது தொடைக்கும் இடுப்புக்கும் இடையிலுள்ள இடைப்பகுதியை, தோள்களுக்குக் கீழானப் பகுதியைக் குறிக்கும். "கட்டப்பட்டிருத்தல்" (*perizōnnumi*) என்பது "கச்சை அல்லது பெல்ட்டால்" கட்டப்படுவது என்று பொருள்படும்.[36] கிறிஸ்தவ யுத்த வீரன் தான் தீமையை எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவனாவதற்குமுன் தேவனுடைய உதவியை பெற்றுச் செய்ய வேண்டிய காரியமாகச் சொல்லப்படுகிறது. ரோம போர் வீரனின் வாழ்க்கையில், அவன் அணியும் இடுப்புக் கச்சை அதிமுக்கியமானது. தனது செயலுக்கு ஆயத்தப்படுத்துவது அரைகட்டப்படுவதுதான் (காண்க லூக்கா 12:35, 37).

மற்ற அணிகலன்களுடன் இறுக்கிக்கட்டும் கச்சை, யுத்த வீரனுக்கு செயலூக்கத்திற்கு ஆயத்தப்படுத்துகிறதாயிருந்தது, என்பது "சத்தியத்தை" அடையாளப் படுத்துவதாயிருந்தது. புற உண்மைப் பொருளில் "சத்தியம்" என்பது தேவனுடைய வசனம் (யோவான் 17:17). எபேசியரில் அது சுவிசேஷமாக இருக்கிறது (காண்க 4:21). இந்த "சத்தியமே" மனிதர் களை விடுதலையாக்குகிறது (யோவான் 8:32). அது கேள்விப்பட வேண்டியது, நேசிக்கப்பட வேண்டியது, விசுவாசிக்கப்பட வேண்டியது, பாதுகாக்கப்பட வேண்டியது, மற்றும் கீழ்ப்படியப்பட வேண்டியது.[37] இந்த சத்தியமில்லாமல் கிறிஸ்தவ யுத்தவீரன் யுத்தத்திற்கு ஆயத்தமில்லாதவனாவான்.

தேவனுடைய இந்த சர்வாயுதவர்க்கத்தை, பவுல் ஏசாயா 11:5லிருந்து குறிப்பிட்டார், அங்கே வரவிருந்த மேசியாவின் "சத்தியம்," நீதி என்னும் அரைக்கச்சையாகவும் சத்தியம் எனும் இடைக்கச்சையாகவும் சொல்லப்பட்டது.[38] வசனங்கள் 14 முதல் 17 வரை அநேக உருவகங்கள் பழைய ஏற்பாட்டிலிருந்து எடுத்துக் கையாளப்பட்டவை, ஆகையால், சில வார்த்தைகள் இந்த வசனப்பகுதியில் பெரிய எழுத்துகளில் ஆங்கிலத்தில் NASB யில் காணப்படுகிறது.

கச்சை என்பது "தனிப்பட்டவர்களின் கிருபை பொருந்திய *கபடற்ற தன்மை, நேர்மை, உண்மை* ... ஆகியவைகளையும் தேவனுடைய மெய்மையையும்கூட காட்டுவதாயிருக்கிறது (ரோமர் 15:8)."[39]

> ... தெளிவான இந்தக் கிருபையின் வெளிப்படை *உண்மைத்துவம், நிலை, மனம்* ஆகியன எந்த ஒரு வஞ்சகத்தையும் கைக் கொள்ளாமலும், தேவனோடு நமக்குள்ள உறவுமுறையில் எவ்வித மறைவு செயலுக்கும் முயற்சியாமலும், கிறிஸ்தவப் பாதுகாப்புக்கும் முக்கியத்துவம் அளிக்கும், மற்றும் மற்ற எல்லா தகுதியாம்ச சிறப்புத்தன்மைக்கும் உரிய செயலாற்றலைக் கொடுக்கும்.[40]

கிறிஸ்தவ யுத்த வீரன் தேவனுடைய வசனத்தாலும் தனிப்பட்ட உண்மையினாலும் விசுவாசத்தினாலும் அரையைக் கட்டிக்கொள்ள வேண்டியவன்.

**நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்** எனும் போது யுத்த

*வீரனின் இருதயமும் பிற முக்கிய சரீர அங்கங்களும் பாதுகாக்கப்பட அணியும் யுத்த ஆயுதங்களில் ஒன்று என்பதை எபேசியர்களுக்கு நினைப்பூட்டியது. கிறிஸ்தவர்களின் பாதுகாக்கப்பட வேண்டிய இருதயம் "நீதி." யுத்த வீரனின் கச்சையாக மேசியாவைக் குறிப்பிடும் ஏசாயாவின் வசனத்தைக் குறிப்பிட்ட பவுல் இங்கே கர்த்தர் "நீதியை மார்க்கவசமாக அணிந்திருக்கும்" காட்சியை ஏசாயா விவரிப்பதைச் சுட்டிக் காட்டுகிறார் (ஏசாயா 59:17). இந்த ஒப்பிடுதல் வாக்கியம் மேசியாவின் "நீதியை" அவருடைய "உண்மைத் தன்மைக்கு" ஒப்பிடுகிறார். தேவனுடைய "நீதி" எபிரெய வார்த்தைகளில் மேசியாவின் நீதி யோடு ஒப்பிட்டு ஏசாயாவின் வசனப் பகுதிகளில் "நியாயம்" என்பது ஒழுக்க சம்பந்தப்பட்ட வார்த்தையாகப் பயன்படுத்தப்பட்டது.*[41]

*"நீதி" என்பது புதிய ஏற்பாட்டில் தேவனிடத்தில் கிறிஸ்துவின் மூலம் நமக்குள்ள உறவுமுறையோடு சம்பந்தப்பட்டது. "பாவத்துக்கு நீங்கள் அடிமைகளாயிருந்த காலத்தில் நீதிக்கு நீங்கினவர்களாயிருந்தீர்கள்" (ரோமர் 6:20). இதை எழுதியதன் மூலம், பாவி தேவனிடத்தில் எவ்வித உறவுமுறையும் கொண்டிருக்க முடியாது, ஏனெனில் அவனுடைய பாவம் அவனை தேவனிடத்திலிருந்து பிரிக்கிறது என்று பவுல் அர்த்தப்படுத்தினார் (காண்க ஏசாயா 59:1, 2), கிறிஸ்து நம்முடைய "நீதியாயிருக்கிறார்" (1 கொரிந்தியர் 1:30) இதினால் தேவன் "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவமறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2 கொரிந்தியர் 5:21). ஒருவர் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பண்ணப்படும்போது, அவர் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்கிறார் (கலாத்தியர் 3:27). அப்பொழுது அவர் நீதிக்கு அடிமையாகிறார் (ரோமர் 6:18). சுவிசேஷத்தில் முன்வைக்கப்படும் "நீதி" இதுதான், எனவே கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தோடே அது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் (ரோமர் 1:5, 16, 17). கீழ்ப்படிகிற விசுவாசத்தைக் கொண்டிருந்தபடியால் ஆபிரகாமுக்கு தேவனால் அது நீதி யாகக் கருதப்பட்டது (ரோமர் 4:22). எந்த நபரும் கிறிஸ்துவுக்குத் தன்னுடைய விசுவாசத்துடனான கீழ்ப்படிதலுடன் பதில் செயல் செய்யும் போது அவர் நீதி யாக எண்ணப்படுவார் (ரோமர் 4:23, 24). "நீதி" என்றால் தேவனோடு சரியான உறவுமுறையைக் கொண்டிருப்பது என்று பொருள்.*

*"நீதி என்னும் மார்க்கவசம்" ஏற்கனவே தங்களுடைய பாவத்துக்கு மன்னிப்பைப் பெற்று தேவனோடு சரியான உறவுமுறையைக் கொண்டவர்களுக்கு மட்டுமே, ஆகையால், பவுலால் பேசப்படும் "நீதி" என்பது கிறிஸ்தவனின் யுத்த ஆயுத வர்க்கங்களில் ஒன்றான அது, தேவனும் மேசியாவும் "நீதியாயும்" அல்லது நீதியில் உண்மையாயிருக்கிறார்கள் என்பதை ஞாபகப்படுத்துதாகவும் இருக்கிறது. சரியானவற்றைச் செய்யும் அல்லது நீதியை செயல்படுத்தும் பண்பு, கிறிஸ்தவ வீரனின் கவசத்தின் ஒரு முக்கிய பகுதி யாயிருக்கிறது.*

***வசனம் 15.*** *அடுத்ததாக, பவுல் சொன்னார்,* ***சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்;*** *இந்த வாக்கியம் ஏசாயா 52:7 ஐ எதிரொலிக்கிறது, இதில் "சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களை அறிவிக்கிறவர்களுடைய பாதங்களைப்" பற்றி பேசுகிறது. ரோமர்களுக்கு எழுதின தன்னுடைய நிருபத்தில், பவுல் சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களோடு இந்தப் பகுதியை*

சம்பந்தப்படுத்திப் பேசுகிறார் (ரோமர் 10:15). ஆகிலும், இந்த வசனப்பகுதியில் பவுல் பாதங்களை அறிவிக்கிறதற்குக் குறிப்பிடாமல் ஆயத்தப்படுத்துவதற்கு குறிப்பிடுகிறார்.

யுத்தகளத்தில் ஒரு வீரன் வெற்றிபெற முறையான பாதரட்சைகள் அவனுக்குத் தேவை. தொடுத்துக் கொள்ளுதல் என்பது *hupodeō,* அதன் நேரடிப் பொருள் "கட்டுதல், செருப்பின் வார்களைக் கீழே கட்டுவது போன்றது; அதன் மூலம் பாதரட்சைகளை அணிந்து கொள்ளுவது, என்று பொருள்."[42] ரோமப் போர்சேவகன் தனது பாதரட்சைகளை அதன் வார்களைக் கொண்டு தோலினால் ஆன பாதரட்சையின் அடிப்பகுதியோடு தன் காலில் சேர்த்துக் கட்டிக் கொள்வான். ஜோசிபஸ் என்பவர் எருசலேமில் இருந்த ஒரு ரோமப்போர்ச் சேவகனைக் குறித்து "முற்றிலும் கனமான ஆணிகளைக் கொண்ட பாதரட்சையை ஒவ்வொரு போர்ச் சேவகனும் அணிந்திருந்தான்"[43] என்று சொன்னார். ஆணிகள் போர்ச்சேவகன் யுத்தகளத்தில் உறுதியுடன் நின்று போரிட உதவியது.

பவுலின் வலியுறுத்தல் அநேகமாக உறுதியாக நிற்பதைப்பற்றி பெரிதும் இருந்திருக்காது (ஏற்கனவே வசனங்கள் 11 மற்றும் 13ல் முன் வைக்கப்பட்டக் கருத்துக்கள்) மாறாக "ஆயத்தம்" குறித்துப் பேசினார். இந்த வார்த்தை *hetoimasia,* எனும் கிரேக்கப் பெயர்ச்சொல்லில் பயன்படுத்தப்பட்டது. அதன் பொருள் "தயாராகுதல், ஆயத்தமாகுதல்."[44] கிறிஸ்தவ யுத்த வீரனின் "ஆயத்தம்" "சமாதானத்தின் சுவிசேஷத்தில்" இருந்து வருகிறது. முன்னதாக பவுல் தம் நிருபத்தில் கிறிஸ்து "நமது சமாதானகாரணர்" என்று காட்டியிருந்தார் (2:14). அவர் புறஜாதிக்கும் யூதனுக்குமிடையே சமாதானத்தை ஏற்படுத்தி யூதனையும் புறஜாதியையும் தேவனிடத்தில் ஒப்புரவாக்கினார் (2:15, 16). சிலுவையிலே அவர் சிந்தின இரத்தத்தின் மூலம் இந்த சமாதானத்தைக் கொண்டு வந்த கிறிஸ்து, எல்லாருக்கும் சமாதானத்தைப் பிரசங்கித்தார் (2:17). சுவிசேஷம் சமாதானத்தின் செய்தியாக இருக்கிறது. கிறிஸ்தவப் போர்ச் சேவகன் சாத்தானுடைய சகல அஸ்திரங்களையும் அவித்துப்போட ஆயத்தமாயிருக்க முடியும் ஏனெனில் "சமாதானத்தின் சுவிசேஷம்" அப்படிச் செய்ய அவனை ஆயத்தப்படுத்துகிறது. தேவனோடும் சக கிறிஸ்தவர்களோடும் பெறும் சமாதானம் கிறிஸ்தவ யுத்த வீரன் எதிரியை தைரியமாக எதிர்கொள்ள ஏவுகிறது.

***வசனம் 16.*** "பொல்லாங்கன்" எனும் சொற்றொடர் குறிப்பிடுகிற (ஆங்கிலத்தில் "evil one" என்பதில் "one" என்பது) கிரேக்க வசனப் பகுதியில் இல்லை. இது முற்றிலும் மொழிபெயர்ப்பாளரால் சரியான விளக்கமளிக்க ஏதுவாக பிசாசைக் குறிப்பிடும்படி இந்த குறிப்பு கொடுக்கப்பட்டது, அல்லது எல்லா பொல்லாப்புக்கும் அதிகாரியான சாத்தானைக் குறிப்பிட்டார் (ஒப்பிடுக எபேசியர் 6:12 மற்றும் மத்தேயு 6:13). கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல் நடத்த ஏதுவான வலிமைமிக்கதும் தொடர் தாக்குதல் நடத்துவதற்கு ஏதுவானதுமான யுக்திகளை சாத்தான் குவித்துவைத்திருக்கின்றான், ஆனாலும் "விசுவாசமாகிய கேடகம்" நாம் தாக்குப்பிடித்துக் கொள்ளவும் வெற்றிபெறவும் உதவுகிறது. யோவான், "நம்முடைய விசுவாசமே - உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" என்று சொன்னார் (1 யோவான் 5:4).

***பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்***

**போடத்தக்கதாய்** கிறிஸ்தவன் "விசுவாசமென்னும் கேடகத்தைப்" பயன்படுத்த வேண்டும். "அக்கினியாஸ்திரம்" என்பது அநேகமாக (தார்), கீல் அல்லது அது போன்ற ஏதோ ஒரு திரவத்தில் முழுக்கியெடுத்த அம்புகளாயிருக்க வேண்டும், அவைகள் எய்யப்படுவதற்குமுன் அதில் தீகொளுத்தப்படும்.[45] யுத்த வீரர்களின் கேடகம் மரத்தால் செய்யப்பட்டு, சில வேளைகளில் தண்ணீரில் ஊறவைத்து பதப்படுத்தப்பட்ட தோலினால் மூடப்பட்டிருக்கும்,[46] இதினால் எதிராளி எய்யும் "அக்கினியாஸ்திரங்களை" அது தடுத்து நிறுத்தும் வலிமை மிக்கதாயிருக்கிறது. கிறிஸ்தவனின் "விசுவாசம் எனும் கேடகம்" எல்லாவித தீமைகளையும் கள்ளப் போதகம் உட்பட உபத்திரவம், சோதனை, உலகக் கவலை, மற்றும் பயம் போன்ற அனைத்து வகை அஸ்திரங்களையும் எதிர் கொள்ள திராணியுள்ளது.

**எல்லாவற்றிற்கும் மேலாக** என்பது நேரடிப் பொருளில் "எல்லாவற்றிலும்" என்று சொல்லப்படுகிறது. இதன் பொருள் "எல்லாச் சூழ்நிலைகளிலும்" என்றும் பொருள்படும்; ஆனாலும் இந்த வசனப் பகுதி கிறிஸ்தவனின் போராயுதங்களைப் பற்றியது ஆகையால், சரியான மொழிபெயர்ப்பின் பொருள் "எல்லாவற்றோடும் கூட [மற்ற யுத்தக் கருவிகளோடு கூட]" என்று பொருள்படும்.

**விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும்** என்பது அடுத்ததாகப் பட்டியலிடப்பட்டுள்ளது. "கேடகம்" (*thureos*) என குறிப்பிடப்பட்டிருக்கும் இது "காலாட்சேனையின் கனமான, பெரிதான, நீளம் அதிகமான, நான்குக்கு இரண்டரை அடி அளவில், சில வேளைகளில் உள்பக்கம் வளைந்ததாகவும் இருக்கும் கேடகமாகும்."[47] இந்த விதமான கேடகம் போர் வீரனின் முழு சரீரத்தையும் பாதுகாக்க வடிவமைக்கப்பட்டிருந்தது. கிறிஸ்தவனின் கேடகம் "விசுவாசம்," இது எபேசியர் முழுவதும் காணப்படுகிறது (1:13, 15; 2:8; 3:12, 17; 4:5, 13; 6:23). உண்மையான விசுவாசம் என்பது சுவிசேஷத்தின் உண்மையையும் தேவனுடைய வல்லமையையும் வாக்குத்தத்தங்களை நம்புவதும், மற்றும் கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதுமாகும். இந்த அளவு விசுவாசம், "தீமையின் கொடுமையின் மத்தியிலும் தேவனுடைய ஆதரவைப் பற்றிக் கொண்டு, விரோதி அவன்மேல் எறியும் எதையும் தடுத்து அவித்துப்போடும் உறுதியையும் உண்டாக்கும் போது" கிறிஸ்தவனை முழுவதும் பாதுகாக்கிறது.[48]

பவுலின் வலியுறுத்தல்களெல்லாம் பிற யுகங்களில் வாழ்ந்த தேவனுடைய ஜனங்களின் விசுவாசத்தை சுட்டிக் காட்டுவதாயிருந்தது, எபிரெயர் 11:33, 34ல் விவரிக்கப்பட்டிருப்பது போல:

> விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களைச் ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள். அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலங்கொண்டார்கள்; யுத்தத்தில் வல்லவர்களானார்கள் அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்.

இந்த நடப்பு யுகத்தில், இதே போன்ற வெற்றிகள் பெற்றிருக்கிறார்கள், இன்னும் பெறுவார்கள்.

***வசனம் 17.*** *கிறிஸ்தவ யுத்த ஆயுதங்களைத் தரித்துக் கொள்வதில் அடுத்தபடி* ***இரட்சணியமென்னும் தலைச்சீராவைத் தரித்துக் கொள்ளுதல்.*** *மீண்டும், இந்த வார்த்தைகள் ஏசாயா 59:17 லிருந்து மேற்கோள் காட்டப்பட்டது. ரோம யுத்தவீரனின் தலைச்சீரா எதிராளிகளின் தாக்குதலுக்கு தப்புவிப்பதாயிருந்தது. சிறப்பாகச் சொன்னால், இவைகள் மாறுபட்ட நிலைகள்; மிக மோசமாகச் சொன்னால், இவைகள் ஊறு விளைவிப்பவை. கிறிஸ்தவன் தனது மனதை சலனமடையச் செய்யாமல் பாதுகாக்க வேண்டியவன், ஏனெனில் எதிராளியானவன் சந்தேகங்களையும் ஏமாற்றங்களையும் பயன்படுத்தி அவனை (கிறிஸ்தவனை) குழப்பமடையச் செய்வான் அல்லது ஆவிக்குரிய மரணத்தைக் கூட அவனுக்கு விளைவிப்பான். "தரித்து" (dechomai) என்பது கீழ்ப்படியும்படி கொடுக்கப்பட்ட ஒரு கட்டளை. "அது உடனடியாக தொடங்கப்பட வேண்டிய ஒன்று."*[49] *இடையிலான குரல், "ஏதோ ஒரு வகையில் அடையாளப்படுத்தி தன் மீதோ தன்னைக் குறித்தோ செயல்பட" வைக்கிறது.*[50] *இன்னொரு வார்த்தையில் சொன்னால், கிறிஸ்தவனுடைய சொந்தப் பாதுகாப்புக்காக, அவன் உடனடியாக செயல்படவேண்டும், அதினால் தனக்கு பிறரால் அளிக்கப்படுவதை பெற்றுக் கொள்ள முடியும். அதாவது இரட்சிப்பிலே பெற்றுக் கொள்ள முடியும். அதாவது கொடுக்கப்படுவது இரட்சிப்பு, மற்றும் அதை கிருபையின் வரமாக கொடுப்பவர் தேவனே.*

*எனவே, "இரட்சிப்பு" என்பது, எபேசியர்களின் நிகழ்கால ஆஸ்தி. அவர்களுடைய இரட்சிப்பு தேவனால் முதல் படியெடுத்து வைக்கப்பட்டு,* கடந்த காலத்தில் *கிறிஸ்துவின் மரணத்தால் நிகழ்ந்தது, அது எபேசியர்களின் ஏற்புடைமையால் அவர்கள் அடைந்து கொண்டார்கள் (காண்க 2:1-22). அது* நிகழ்காலத்திலும் *தொடர்ந்தது, அவர்கள் அதைப் பெற்ற அந்த வேளையிலேயே "பரிசுத்தவான்களாய்" இருந்தார்கள் மற்றும் "கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாய்" இருந்தார்கள் (1:1). அவர்கள் "இப்பொழுது கிறிஸ்துவுக்குள்" இருக்கிறார்கள் (2:13), "பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருக்கிறார்கள்" (2:19). இந்த இரட்சிப்புக்கு* எதிர்கால *அமலாக்கம் உண்டு, தெசலோனிக்கேயர்களுக்கும் பவுல் "இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச் சீராவையும் தரித்துக்கொள்ளும்படி" சொன்னார் (1 தெசலோனிக்கேயர் 5:8). கடைசி இரட்சிப்பு இன்னமும் எதிர்காலத்தில் பரலோகத்தில் வைக்கப்பட்டுள்ளது, இதன் மீது இந்தக் கிறிஸ்தவர்களுக்கு நம்பிக்கை இருந்தது.*

*கடந்த கால, நிகழ்கால மற்றும் எதிர்கால தன்மையில் பெறப்பட்ட எபேசியரின் தேவனுடைய இரட்சிப்பு கேடான சிந்தைக்கு அவர்களை விடாமல் பாதுகாக்கும். கடந்த காலத்தில் அவர்கள் இரட்சிக்கப்பட்டிருந்தார்கள் என்பதிலே அவர்களுக்கு உறுதியிருந்தது, நிகழ்காலத்தில் அவர்கள் இரட்சிக்கப்பட்ட நிலையில் இருந்தார்கள், மேலும் கடைசியாக பரலோகத்தி லும் முற்றுமுடிய இரட்சிக்கப்படுவார்கள். இந்த உறுதியளிப்பு அவர்களுக்கு தலைச் சீராவாக இருந்து ஆவிக்குரிய போராட்டத்தில் ஈடுபட்டிருந்த கிறிஸ்தவர்களின் தலையை பாதுகாக்க வல்லதாக இருக்கும்படி சித்தரித்துக் காட்டுகிறது.*

*அழிவுக்கு பயன்படுத்தப்படும் பட்டயமாக கிறிஸ்தவனின் கவச உடையில் இருக்கும் ஒரே கருவி* ***தேவ வசனமாகிய ஆவியின் பட்டயம்.*** *"பட்டயம்"*

என்பது *மச்சாரியா* என்பதன் மொழிபெயர்ப்பு, "ரோம போர்ச் சேவகர்களால் பயன்படுத்தப்பட்ட கூர்மையானதும் குறுகியதுமான ஒரு கருவி, நீண்ட அகன்ற பட்டயத்துக்கு முரணானது."[51] நீளம் குறைந்த பட்டயத்தைக் கொண்டு விரைவாக குத்தி எதிரியை எளிதில் கொல்லவும், அவனுடைய தாக்குதலைத்தடுக்கவும் பயன்படுத்தப்பட்டது. கிறிஸ்தவ போர்ச் சேவகன் தனது தேசத்தைக் காக்க வேரூன்றி உறுதியாய் நிற்பவன் மாத்திரமல்ல, அவன் கிறிஸ்துவினிமித்தம் முன்னேறிச் சென்று தனது "தேவனுடைய வசனமாகிய ஆவியின் பட்டயத்தை" பயன்படுத்தவும் வேண்டும்.

"தேவனுடைய வசனம்" "ஆவியின் பட்டயம்" என்று அழைக்கப்பட்டது, ஏனெனில் ஆவியானவரே மனிதருக்கு அதை அறியப் பண்ணினார் (காண்க 3:1-10; யோவான் 16:13), ஆவியானவரே வசனங்களுக்கு வலுவூட்டி ஜீவனையும் வல்லமையையும் அளித்தார் (காண்க 2 கொரிந்தியர் 3:6; 1 தெசலோனிக்கேயர் 1:5; எபிரெயர் 4:12). "வசனம்" என்ற பதத்திற்கு பவுல் பயன்படுத்தின பதம் *rhēma*, "பேசப்பட்ட ஒரு வார்த்தை,"[52] என்பது சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதை குறிப்பிடுகிறது. "பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம், 'தேவனுடைய பெலன்' [ரோமர் 1:16; 1 கொரிந்தியர் 1:18] அது பட்டயமாக மூர்க்கமான தாக்குதலை எதிர்கொள்ளவும் திருப்பித் தாக்கவும் ஆவியினால் கொடுக்கப்பட்டது."[53]

சுவிசேஷமே "சத்தியத்தின் செய்தி" (1:13), மற்றும் "சமாதானத்தின் சுவிசேஷம்" (6:15). சத்தியமானது எல்லாவித தவறுகளையும் கண்டித்து உணர்த்துவதும் தேவனுடைய சத்துருக்களை அழிக்கிறதுமாயிருக்கிறது. இந்த சத்தியம் தேவனோடும், சக ஜனங்களோடும், கிறிஸ்தவனுடைய இருதயத்திற்குள்ளும் சமாதானத்தைக் கொண்டுவருகிறது (2:13-18). சத்தியம் உலகத்தில் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுகிறது, கிறிஸ்தவர்களாகிய நாம் யுத்த வீரர்களாக கிறிஸ்துவின் நாமத்திலே முன் சென்று, எதிராளியை வென்று சிறைப்பட்டவர்களை விடுதலையாக்குவோமாக.

### விண்ணப்பம்: "ஜெபியுங்கள் மற்றும் விழித்திருங்கள்" (6:18-20)

**18 எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள். 19 சுவிசேஷத்திற்காகச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதியாகிய நான் அதைப்பற்றிப் பேசவேண்டியபடி தைரியமாய்ப் பேசத்தக்கதாக, 20 நான் தைரியமாய் என் வாயைத் திறந்து சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு வாக்கு எனக்குக் கொடுக்கப்படும்படி எனக்காகவும் விண்ணப்பம்பண்ணுங்கள்.**

***வசனம் 18.*** சில விரிவுரையாளர்கள் கிறிஸ்தவனின் போராயுதங்களில் ஜெபமே கடைசி ஆயுதம் என்று நம்புகிறார்கள், வேறு சிலரோ வசனம் 17 லிலேயே இராணுவம் குறித்த உருவகப்போதனையைவிட்டு ஜெபத்தைக் குறித்து வலியுறுத்தினார் என்கின்றனர். எந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், அந்தக்கால சிப்பாய்கள் வெளிப்படையான

தொடர்பு இல்லாமலும் தொடர்பு முறை சாதனங்களுமின்றி அவர்கள் தாக்குப்பிடித்திருக்க இயலாது என்று எல்லாரும் ஒப்புக் கொள்கிறார்கள். கிறிஸ்தவ யுத்த வீரனுக்கும் இது பொருந்தும். தேவனோடு அவனுக்கு உள்ள தொடர்பு திறந்து வைக்கப்பட்டிராத பட்சத்தில், தேவையான பெலனை தேவன் அளிக்காத பட்சத்தில், அவன் வெற்றிகொள்ள இயலாது.

எச்ச வினைகளான "ஜெபம்" மற்றும் "விழித்திருங்கள்" என்பன மொழிபெயர்க்கப்பட்டுள்ள விதம் ஆரம்ப வசனங்களில் பவுல் போர்சேவகனின் போராயுதம் பற்றிப் பேசிய "உறுதியாய் நிற்குதலுடன்" தொடர்புபடுத்தக் கூடும். கிறிஸ்தவன் எதிர்கொள்ளும் ஆவிக்குரிய போராட்டத்தில், வெற்றிபெறத் தேவையான ஆவிக்குரிய உதவி தேவனிடத்திலிருந்து வருவது அவசியமானது. "தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் அவர்கள் தரித்துக் கொள்ளுகையில்" (6:13), கிறிஸ்தவர்கள் ஜெபத்தின் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய தேவனுடைய வல்லமையை சார்ந்திருக்க வேண்டும்.

பவுல் **ஜெபத்திற்கு** இரண்டு வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார். முதலாவது, *proseuchē,* இது "ஜெபத்திற்குப்" பயன்படுத்தப்படும் பொதுவான வார்த்தை, இது ஜெபத்தைப் பற்றிய அனைத்து பகுதிகளையும், தேவனிடத்தில் பேசுவது, ஸ்தோத்திரஞ் செலுத்துதல், விண்ணப்பித்தல் போன்ற அனைத்தையும் உள்ளடக்கியது. இரண்டாவது *deēsis,* இதன் பொருள் ஒரு **விண்ணப்பம்,** "குறிப்பிட்ட பயன்பெற ஏதுவான ஒரு வேண்டுகோள்."[54] **எல்லா சமயங்களிலும்** தேவைப்படும் ஜெபத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்த பவுல் இங்கே இரண்டு வகையான பதங்களையும் பயன்படுத்தியுள்ளார்.[55] ஜெபமே தேவனுடைய வல்லமையைப் பெற்றுத் தரும் வழிபாட்டு முறையும் வாழ்வளிக்கும் பெலனுமாகும் (1:15-23; 3:14-21).

**ஆவியிலே** என்பது பரிசுத்த ஆவியை குறிப்பிடுகிறது. யூதா தன்னுடைய வாசகர்களுக்கு குறிப்பிட்டுச் சொல்லி அவர்கள் "பரிசுத்த ஆவியினால் ஜெபம் பண்ணும்படிக்" கூறப்பட்டனர் (யூதா 20). எபேசியருக்கு எழுதின நிருபம் முழுவதும், பரிசுத்த ஆவியைக் குறித்து பவுல் பேசியிருக்கிறார். அவர்கள் ஆவியினால் முத்தரிக்கப்பட்டார்கள், ஆவியினால் தேவனிடத்தில் சேரும் சிலாக்கியத்தைப் பெற்றிருந்தார்கள், ஆவியின் மூலம் தேவன் அவர்களுக்குள்ளே வாசம் பண்ணினார், ஆவியினால் பெலங் கொண்டார்கள், ஆவியானவரைத் துக்கப்படுத்தாதிருக்க கூறப்பட்டார்கள் மற்றும் ஆவியினால் நிரப்பப்பட்டிருக்க வேண்டியவர்களாய் இருந்தார்கள் (1:13; 2:18, 22; 3:16; 4:30; 5:18). தனது நிருபத்தின் நிறைவை அடைகிற வேளையில், பவுல் எபேசியர்களிடம் "ஆவியிலே ஜெபம் பண்ணி ..." என்று சொல்லுகிறார்.

கிறிஸ்தவர்களின் ஜெபத்திலே ஆவியானவர் ஆழமாய் உட்படுத்தப் பட்டிருக்கிறார். தேவனுடைய ஆவியானவர் அவர்களுடைய இருதயங்களிலே நிரப்பப்பட்டு, "அப்பா, பிதாவே" என்று கூப்பிடச் சொல்லப்பட்டார்கள் (ரோமர் 8:15; கலாத்தியர் 4:6). கிறிஸ்தவர்கள் தங்களுடைய பெலவீனங்களினால், தாங்கள் வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிற படியினாலே ஆவியானவர் அவர்களுக்காக வேண்டுதல் செய்கிறார். ரோமர் 8 கிறிஸ்தவர்களின் பலவீனங்களையும் தவிப்பையும் பேசுகிறது. பாடுகளைப்படும் பெரும்பாலான நேரங்களில், ஜெபத்தில் வார்த்தைகள் ஒரு அமைப்பைக் கொண்டிராது. தேவனுடைய பிள்ளைகள், "தேவனே, உதவும்!"

என்று மட்டுமே கூப்பிடமுடியும். இந்த பரிதவிப்புகளெல்லாம் மிக ஆழமான வார்த்தைகளால் கூப்பிடப்படும் போது, ஆவியானவர் பரிந்து பேசுகிறார்; அதாவது, தேவனுக்கு முன்பாக அவர் நின்று கிறிஸ்தவர்களினிமித்தம் வேண்டிக்கொள்கிறார். ஆவியானவரின் பரிந்துரைத்தலினால் பேசப்படாத அந்த ஜெபங்களைத் தேவன் தவறாகப் புரிந்துகொள்ள மாட்டார். "ஆவியிலே" ஜெபித்தல் என்பது ஆவியானவர் தமது வசனத்தின் மூலம் வெளிப்படுத்தியிருப்பது என்ன என்பதையும் ஜெபம் செய்யும்போது ஆவியின் உதவி இன்னது என்பதையும் அறிந்து கொள்வதுமே.

பொதுவான இடைவிடாத ஜெபத்தில், கூடுதலாக **சகல பரிசுத்தவான்களின்** தேவைகளைக் குறித்து எபேசியர்கள் விழிப்புணர்வு உள்ளவர்களாயிருந்து தொடர்ந்து **விண்ணப்பம்** (*deēsis*) செய்ய வேண்டும். **வேண்டுதலோடும் விழித்திருங்கள்** என்பது *agrupneō* மற்றும் *proskarterēsis* என்பவற்றின் மொழிபெயர்ப்பு. அது "கவனமாக இருக்க, விழிப்பான" மற்றும் "ஒன்றுக்கு இடைவிடாத கவனம் கொடுக்க" என அர்த்தப்படும்.[56] இங்கே, பரிசுத்தவான்களுக்காக ஜெபம் செய்வதில் இடைவிடாத கவனம் செலுத்த வேண்டியிருந்தது.

**வசனம் 19.** பவுல் **சங்கிலியினால்** கட்டப்பட்டிருந்தார்; அதாவது அவர் ஒரு கைதியாயிருந்தார் (காண்க 3:1; 4:1; நடபடிகள் 28:20; 2 தீமோத்தேயு 1:16). அதே நேரத்தில், தன்னை **ஸ்தானாபதி** என்றும் சொன்னார், இப்பதம் 2 கொரிந்தியர் 5:20ல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஸ்தானாபதி என்பவன் தனது நாட்டு அரசுக்காக அந்நிய நாட்டில் முகவராக செயல்படுபவன், தனது அரசுக்காக தைரியமாய் அதிகாரத்தோடே வாதிடுபவன், அவனது கரங்களில் அவனுடைய அரசாங்கத்தின் கீர்த்தி இருந்தது. மேலும் அவன் நாட்டையும் தன் வீட்டையும் விட்டு தூரத்திலே பணியாற்றுபவன். இந்த எல்லாவழிகளிலும், பவுல் பரலோகத்திற்கான ஸ்தானாபதியாயிருந்து முழு புதிய ஏற்பாட்டு உலகத்திலும், பணியாற்றுபவராயிருந்தார். தனது குடியிருப்பு வேறொரு உலகத்தில் இருப்பதை அவர் அறிந்திருந்தார் (காண்க பிலிப்பியர் 3:20, 21). மேலும் அவர் கிறிஸ்துவால் தெரிந்துகொள்ளப்பட்டு இந்த உலகில் தமக்கு முகவராயிருக்கும்படி விரும்பினார் (காண்க நடபடிகள் 26:15-18). தான் ஒரு கிறிஸ்துவின் ஸ்தானாபதியாக, கிறிஸ்துவின் சகல அதிகாரத்தோடும் அவர் பேசினார் (காண்க 1 கொரிந்தியர் 14:37). மேலும் கிறிஸ்துவைக் குறித்த நல்லெண்ணம் தனது கைகளில்தான் இருக்கிறது என்பதையும் அறிந்திருந்தார் (காண்க பிலிப்பியர் 3:12-21). "சங்கிலிகளினால் கட்டப்பட்டிருந்த ஸ்தானாபதி யாகிய" பவுல் குறித்து லிங்கன் தமது ஆய்வுரையில் சொன்னதாவது,

> சங்கிலியினால் கட்டப்பட்டிருக்கிற ஒரு ஸ்தானாபதியைப் பற்றி பேசும் போது அது முரணணியாகத் தோன்றுகிறது. வழக்கமாக ஒரு ஸ்தானாபதி என்பவன் அரசியல் திறமை மிக்கவனாக இருப்பான் ஆதலால் அவன் அனுப்பப்பட்ட மக்களால் அவன் சிறை சங்கிலியால் கைது செய்யப்படமுடியாது, ஆனால் சங்கிலிகளால் கட்டப்பட்டிருப்பதாக இங்கே சொல்லப்பட்டிருப்பது சுவிசேஷத்தினிமித்தமாக என அடையாளப்படுத்தப்படுவது ஒரு முறையான முகவராக அவரைக் காட்டுகிறது, அது உபத்திரவப்படும் அப்போஸ்தலனின் அடையாளம்.[57]

***வசனம் 20.*** இதற்குப் பின்பு பவுல் ஒரு தனிப்பட்ட வேண்டுகோளை வைத்தார். எபேசியர்கள் தங்களுக்காகவும், சகல பரிசுத்தவான்களுக்காகவும், தனக்காகவும் ***ஜெபிக்கும்படி*** விரும்பினார். ***அவர்*** [தமது] ***சார்பாக*** அவர்கள் ஜெபிக்கும்படி விரும்பினார். தேவன் தான் பிரசங்கிக்க ஏதுவான செய்தியைக் கொடுக்கும்படியாக மட்டுமல்லாது, அந்தச் செய்தியை பிரசங்கிக்க ஏதுவாக வாக்கையும் ***தைரியமாய் பேசத்தக்க வகையில்*** கொடுக்கும்படியும் ஜெபிக்கச் சொன்னார். பவுல் விரும்பிய "தைரியம்" *parrēsia,* என்பதன் மொழிபெயர்ப்பு, அதன் பொருள் "வெளிப்படையாக, எதையும் மறைத்து வைக்காமல், அல்லது பேச்சில் தெளிவு."[58] இங்கே "தைரியம்" எனும் வார்த்தை "வெட்கப்படுத்தப்படுதலுக்கு" முரணான வார்த்தை[59] (காண்க பிலிப்பியர் 1:20). ***வாயைத் திறந்து*** என்பது தேவனுடைய வசனத்தை அறிவிப்பதற்கான வேதாகமச் சொல் (காண்க எசேக்கியேல் 3:27; 33:22; தானியேல் 10:16).

எபேசு சபை ஞானமாய் நடந்து கொள்ள வேண்டியிருந்தது (5:15-6:20). இது ஜாக்கிரதையாய் வாழ்வதன் மூலமும் (5:15-21), உறவுகளை மதிப்பதாலும் (5:22-6:9), கர்த்தருக்குள் பலப்படுவதாலும் (6:10-20) சாத்தியமாகும். கர்த்தருக்குள் பலப்பட "தேவனுடைய சர்வாயுத வர்க்கமும்" தேவை (6:10-17), மேலும் ஊக்கமான வேண்டுதலும் தேவை (6:18-20). ஞானமாய் நடந்து கொள்ள வேண்டும் என்ற இந்த இறுதி அறிவுரையைத் தொடர்ந்து தமது வாழ்த்துக்களை எழுத ஆயத்தமாக இருந்தார்.

## மேலும் கற்றுக்கொள்ள:

**அடிமைத்தனம்**

கலாத்தியர் 3:28 அடிமையானாலும் எஜமானானாலும் தேவனிடத்தில் சேரும் சிலாக்கியத்தை சமமான ரீதியில் பெற்றிருக்கிறார்கள், குறிப்பாக அடிமைகள் கிறிஸ்தவ சமுதாயத்தில் புதிய ஒரு நிலையை அடைந்துள்ளதாகக் குறிப்பிட்டார். "கிறிஸ்துவுக்குள்" அடிமை என்றுமில்லை "சுயாதீனனென்றுமில்லை" என்று பவுல் சொன்னார். இந்த வாக்கியம் அடிமைகள் தங்கள் அடிமைத்தன விடுதலையைக்கோருவதற்கு வழிகாட்டியாய் இருந்திருக்க வேண்டும், ஏனெனில் "அடிமையானாலும் சுயாதீனனானாலும்" "ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள் நாமெல்லாரும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம்" (1 கொரிந்தியர் 12:13). கலாத்தியருக்குப் பவுல், "நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்தடிக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீனத்திலே நிலை கொண்டிருங்கள்" (கலாத்தியர்கள் 5:1) என்று சொன்னபோது அடிமைகள் தங்கள் எஜமானர்களிடமிருந்து விடுதலை கிடைத்ததாக நினைத்திருக்கலாம். கிறிஸ்தவ எஜமானர்கள் தாங்கள் புதிதாய்க் கண்டுபிடித்துள்ள தங்கள் விசுவாசம் தங்கள் அடிமைகளை விடுதலை செய்ய வேண்டும் என்ற பொருளில் புரிந்து கொண்டிருக்கலாம்; உண்மையில், சிலர் அப்படிச் செய்தார்கள்.

1 கொரிந்தியர் 7:20-22 ல் எஜமானர்கள் அடிமைகளிடையே கிறிஸ்தவ சமுதாயத்தில் என்ன நடக்கிறது என்று வேத மாணவன் ஒரு உள்ளான கருத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடும்:

*அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலையிலே நிலைத்திருக்கக் கடவன். அடிமையாய் நீ அழைக்கப்பட்டிருந்தால், கவலைப்படாதே; நீ சுயாதீனனாகக் கூடுமானால் அதை நலமென்று அநுசரித்துக்கொள். கர்த்தருக்குள் அழைக்கப்பட்ட அடிமையானவன் கர்த்தருடைய சுயாதீனனாயிருக்கிறான்; அப்படியே அழைக்கப்பட்ட சுயாதீனன் கிறிஸ்துவினுடைய அடிமையாயிருக்கிறான்.*

இந்த வசனப் பகுதியில், பவுல் அடிமைகள் உட்பட சகல கிறிஸ்தவர்களும் - வாழ்க்கையில் தங்களுக்கு இருக்கிற நிலையில் திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டும் என்று சொன்னார். அடிமைகள் தாங்கள் அடிமைகளாயிருப்பது குறித்துக் கவலைப்படக் கூடாது, ஏனெனில் அவர்கள் கிறிஸ்துவுக்குள் விடுதலை பெற்றிருக்கிறார்கள். சில அடிமைகள் தங்கள் எஜமானர்களால் விடுதலையாக்கப்பட்டதுண்டு, அந்த விடுதலையை அவர்கள் நன்மைக்காக பயன்படுத்த வேண்டியவர்களாயிருந்தனர். எந்நிலையிலும், அவர்கள் தொடர்ந்து அடிமைகளாகவே நிலைத்திருந்தாலும் அல்லது விடுதலையாக்கப்பட்டிருந்தாலும், அந்த அடிமைகள் கிறிஸ்துவுக்குள் விடுதலை பெற்றவர்கள், அதே வேளையில் கிறிஸ்தவ எஜமானர்களோடே, கிறிஸ்துவின் அடிமைகள் இருந்தார்கள்.

எஜமானனும் அவனுடைய அடிமையும் கிறிஸ்தவர்களானபோது, இந்தப் பிரச்சனைகள் பவுல் பிலேமோனுக்கு எழுதின நிருபத்தில் காணப்படுகிறது. பிலேமோன் என்பவன் ஐசுவரியத்துடன் - அடிமையைக் கொண்டிருந்த ஒரு எஜமானன் அவன் கொலோசெயில் இருந்தான், அந்த அடிமையாகிய ஒநேசிமு அவனுடைய சில உடமைகளை எடுத்துக் கொண்டு ரோமாபுரிக்கு ஓடிப்போனான். ரோமாபுரிக்குப் போனபோது, வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த பவுலைச்சந்தித்து, கிறிஸ்தவனானான், பிரச்சனை என்னவெனில் ஒநேசிமுவை என்ன செய்வது என்பது தான். அவன் மறுபடியும் தனது (எஜமானனுடைய) வீட்டிற்குத்தான் அனுப்பப்பட வேண்டும் என்பது தெளிவு, அங்கே அவன் பிலேமோனின் இரக்கத்தால் சேர்த்துக் கொள்ளப்படக்கூடும். பிலேமோன் ஒரு கிறிஸ்தவனாயிருந்த போதிலும், ஓடிப்போனவனும் திருடனுமாகிய ஒரு அடிமையை அவனது எஜமானனிடத்தில் மீண்டும் அனுப்புவது என்பது மிகவும் சிரமமிக்க ஒரு காரியம். ஒரு கிறிஸ்தவ அடிமையைக் கொண்ட - எஜமானன் ஓடிப்போனவனும் திருடனுமாயிருந்து இப்பொழுது சகோதரனாகியுள்ள ஒருவனை எப்படி நடத்துவது? இந்தக் கேள்விக்கான பதிலை பிலேமோனுக்கு எழுதின நிருபம் பதிலளிக்கிறது.

பிலேமோனுக்கு எழுதப்பட்ட நிருபத்தில், தனது சிநேகிதனோடு செயல்படும் பவுலின் மனோதத்துவ அணுகுமுறையை நாம் காணுகிறோம். அதற்கு மேலாக, கிறிஸ்தவ எஜமானனுக்கும் கிறிஸ்தவ அடிமைக்குமிடையே நிலவவேண்டிய உறவுமுறையை நமது உள்ளான மனதால் காண்கிறோம். இந்த சம்பவத்தின் முடிவு நமக்குத் தெரிந்திராவிட்டாலும், பவுல் கேட்டுக் கொண்டதற்கு மேலாகவே பிலேமோன் செய்தான் என்றும், ஒநேசிமுவை அவன் மன்னித்து, அவனை விடுதலை செய்தான் என்றும் விசுவாசிக்க விரும்புகிறோம்.

*கொலோசெயர் 3:11 ல், கிறிஸ்துவுக்குள் இருக்கும் சுயாதீனனுக்கும் ஒரு அடிமைக்கும் வித்தியாசம் எதுவுமில்லை என்று பவுல் குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் அந்த வீட்டாரில் அவரவருடைய கடமை கனப்படுத்தப்பட வேண்டும் என்று காட்டினார். அவர், "வேலைக்காரரே, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்து, நீங்கள் மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ் செய்யாமல், தேவனுக்குப் பயப்படுகிறவர்களாகக் கபடமில்லாத இருதயத்தோடே ஊழியஞ்செய்யுங்கள்" என்று சொன்னார் (கொலோசெயர் 3:22). கடைசியாக, பவுல் எஜமானர்களுக்குச் சொன்னார், "உங்களுக்குப் பரலோகத்திலே எஜமான் இருக்கிறாரென்று அறிந்து, வேலைக்காரருக்கு நீதியும் செவ்வையுமானதைச் செய்யுங்கள்" (கொலோசெயர் 4:1).*

## நம்முடைய எதிராளியாகிய, பிசாசு (6:11)

*கிறிஸ்தவர்களுக்கு "தேவனுடைய சர்வாயுதவர்க்கம்" தேவை அது "சாத்தானுடைய தந்திரங்களை" எதிர்த்து "உறுதியாய் நிற்பதற்குத்" தேவை. "பிசாசு" என்பது diabolos என்பதன் மொழிபெயர்ப்பு அதன் விளக்கம் "குற்றப்படுத்துகிறவன்" அல்லது "புறங்கூறுபவன்."[60] பிசாசு என்பது "சாத்தான்" (வெளிப்படுத்தின விசேஷம் 20:2), (சாத்தான்) என்பதன் மொழியாக்கம், "எதிராளி" என்று பொருள்[61] அவன் தனித்து செயல்படுவதில்லை; "பேய்களின் தலைவன்" அவன் (மத்தேயு 12:24-27; காண்க 25:41). அவன் "வானமண்டலங்களையும்" "இருளையும்" ஆளுகிற "ஆகாயத்து" அதிகார பிரபு (எபேசியர் 2:2; 6:12).*

*சாத்தானின் ஆரம்பம் பற்றி வேதாகமம் ஒன்றும் குறிப்பிடுவதில்லை. ஆகிலும், அது கொடுக்கும் சில தகவல்களிலிருந்து சில முடிவுகளை நாம் பெறக் கூடும். ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் இருந்த போது, சாத்தான் அங்கே இருந்தான் (ஆதியாகமம் 3:1), ஆதியாகமத்தில் வரும் "சர்ப்பம்" பற்றிய அடையாளத்தில் ஏதாவது கேள்வி இருக்குமானால் அது வெளிப்படுத்தின விசேஷத்தில் பதில் அளிக்கப்படுகிறது (20:2). யோவான் பரலோகத்தில் நடக்கும் ஒரு யுத்தத்தைப் பற்றி எழுதினார், அதன் பின் சாத்தான் "கீழே தள்ளப்பட்டான்" என்று சொன்னார் (வெளிப்படுத்தின விசேஷம் 12:7-9, 17). "தேவன் சிருஷ்டித்த எல்லாம் நன்றாயிருந்தது" என்பதால் (ஆதியாகமம் 1:31) சாத்தான் விழத்தள்ளப்பட்ட தூதன் என்று சிலர் முடிவுக்கு வருகிறார்கள் - அதாவது ஒரு காலத்தில் நல்லவனாக இருந்து பொல்லாங்கனாக ஆக அவனே தன்னைத் தெரிந்து கொண்டான்.[62]*

*சாத்தானின் ஆரம்பம் குறித்த கேள்விக்கு பதிலாக மூன்று சாத்தியக் கூறுகளைக் கொண்ட வசனங்களை மேற்கோளாகக் காணுகிறோம்.*

*(1) சாத்தானின் ஆரம்பத்துக்கு ஏசாயா 14:12-15 ஆதார வசனமாகுமா? ஏசாயாவின்படி, இந்த விழுந்துபோன நட்சத்திரம் தன் மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பை கொண்டிருக்கிறான், அதன் குறிப்பு அவனுடைய ராஜ்யம் நிலைபெறாது, அது நித்தியத்துக்குரியதல்ல, அவன் தன்னைத்தான் அழிவில்லாதவன் என்று சொல்லிக் கொண்டாலும், அதிலே அவன் தோற்றுப் போனான்.*

KJV *"விடிவெள்ளி" என்பதற்குப் பதிலாக "லூசிஃபர்" என்று*

*வசனம் 12ல் கூறுவதால், "அதிகாலையின் விடிவெள்ளியே" என்பதே சாத்தானுக்கு பெயராயிற்று. ஆகிலும், அப்படிப்பட்ட ஒரு விளக்கம் பின்னதாக உருவானது. அநேகமாக, தெர்த்துல்லியனுக்கு (கி.பி. நான்காம் நூற்றாண்டுக்கு) முன்பு சாத்தானுக்கு இந்த வசனப் பகுதியை யாரும் பயன்படுத்தியதாக தெரியவில்லை.*

*இவ்வசனப்பகுதி பிசாசுக்குப் பயன்படுத்தப் படாவிட்டால் வேறு யாரைக் குறித்துப் பேசுகிறது? ஏசாயா 14:4ன்படி, தேவன் ஏசாயாவினிடத்தில், "நீ* பாபிலோன் ராஜாவின்மேல் *சொல்லும் வாக்கியமாவது": (வலியுறுத்தல் சேர்க்கப்பட்டது) என்று சொன்னார். ஏசாயா தன்னுடைய ஜனங்களிடம் அறிவித்து, "இஸ்ரவேல் தேசத்தை பாபிலோனின் ராஜா இப்பொழுது ஒடுக்கினாலும். அவனுடைய ராஜ்யம் அழிவில்லாதது அல்ல. தேவனுடைய ஆளுகை மட்டுமே நித்தியமானது, ஒரு நாளிலே கொடுங்கோலான பாபிலோனை தேவன் அழிப்பார்." இந்த கவிதை வடிவ வசனப் பகுதி, அதன் சரியான பகுதியில் காணுகிறது. சாத்தானைக் குறித்து உண்மையில் எதுவும் சொல்லுவதில்லை.*

*(2) இப்படிப்பட்ட விவாதத்தில் அடிக்கடிப் பயன்படுத்தப்படும் மற்றொரு வசனம் லூக்கா 10:18. இயேசு தமது எழுபத்திரண்டு சீஷர்களை அனுப்பி, இரண்டு இரண்டு பேராகப் போய் இஸ்ரவேல் ஜனங்களுக்கு பிரசங்கிக்கச் சொன்னார். பிசாசுகளை விரட்டவும், விஷத்தைத் குடித்தாலும் அது அவர்களை சேதப்படுத்தாதபடிக்கும் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார் அவர்கள் திரும்பி வந்து, ஊழியத்தின் முழு வெற்றியையும் குறித்து அறிக்கை கொடுத்தார்கள். அவ்வேளையில் இயேசு வியப்புடன், "சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன்" என்று சொன்னார் (லூக்கா 10:18).*

*இயேசு "சாத்தான் வானத்திலிருந்து விழுகிறதாகச்" சொல்லவில்லை. சாத்தான் வானத்திலிருந்து மின்னலைப்போல ஆகாயத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன் என்றுதான் சொன்னார். ("வானம்" மற்றும் "ஆகாயம்" என்ற இரண்டு பதங்களுமே ஒரே கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்புகள்.) மேகத்திலிருந்து தோன்றும் மின்னல் பூமியிலே விழுவது போல, சாத்தான் தன்னுடைய சிங்காசனத்திலிருந்து விழுவதாக ஆவிக்குரிய ரீதியில் பேசினார். இயேசுவின் ஊழியத்தினால் சாத்தான் ஆத்துமாக்கள் மீது கொண்டிருந்த தனது பிடியை இழந்து கொண்டிருந்தான். அவன் தோற்கடிக்கப்பட்டான்! ஆகையால், சாத்தானின் ஆரம்பத்தைப் பற்றிப் பேசாத, மற்றொரு வசனப்பகுதி இது.*

*(3) அடிக்கடி குறிப்பிடப்படுகிற மற்றொரு வசனப்பகுதி வெளிப்படுத்தின விசேஷம் 12:7-9:*

> *வானத்திலே யுத்தமுண்டாயிற்று; மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம் பண்ணினார்கள்; வலுசர்ப்பமும் அதைச் சேர்ந்த தூதரும் யுத்தம் பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை. வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற்போயிற்று. உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது;*

*அது பூமியிலே விழத் தள்ளப்பட்டது; அதனோடே கூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்.*

*வெளிப்படுத்தின விசேஷம் ஒரு அடையாளச் சின்னங்ளைக் கொண்ட புத்தகமாக இருந்தாலும் இந்த வசனப் பகுதி விளக்கமளிப்பதனிமித்தம் மிகுந்த வாக்குறுதிகளைக் கொண்டுள்ளது. பரிசுத்தப்படைகள் அநீதியுள்ள படைகளுடன் யுத்தம் பண்ணும் நிகழ்ச்சியைக் குறித்து யோவான் பேசினார். இறுதி விளைவாக சாத்தானும் அவனுடைய தூதர்களும் பரலோகத்தில் தங்கள் இடத்தை இழந்து பூமியிலே விழத் தள்ளப்பட்டார்கள். உருவக வார்த்தைகளைக் கொண்ட புத்தகம் என்று ஏற்றுக் கொள்ளப்பட்ட வார்த்தைகளை நேரடிப் பொருளில் எப்படி விளக்கப்படுத்தக் கூடும்?*

*இந்த வார்த்தைகள் நேரடிப் பொருளில் எடுத்துக் கொள்ளப்பட்டாலும், சாத்தானின் ஆரம்பம் என்பது இன்னமும் மறைபொருளாகவே இருக்கிறது. சாத்தான் எங்கிருந்து வந்தான் என்று வெளிப்படுத்தின விசேஷமும் சொல்லுவதில்லை. சாத்தான் விழத்தள்ளப்பட்ட தூதனாக யோவான் விளக்கிச் சொல்லுவதில்லை, அவனைப் பின்பற்றின தூதர்களையுடையவனாக மட்டுமே சொல்லப்படுகிறான், வானத்திலே அந்த யுத்தம் எதனால் ஆரம்பித்தது என்றோ அல்லது எவ்வளவு காலம் யுத்தம் நடந்தது என்றோ நமக்குச் சொல்லப்படவில்லை.*

## கைக்கொள்ளுதல்

***பிள்ளைகளும் பெற்றோரும் (6:1-4)***

*பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து அவர்களைக் கனம் பண்ண வேண்டும் (6:1-3), கனப்படுத்தாமலேயே பெற்றோருக்குக் கீழ்ப்படியக் கூடும்; கீழ்ப்படியாமையின் விளைவை எண்ணி சிலர் பெற்றோருக்குக் கீழ்ப்படியலாம். ஆகிலும், கீழ்ப்படிதலில்லாமல் பெற்றோருக்கு செலுத்த வேண்டிய கனத்தைச் செலுத்த முடியாது. கீழ்ப்படிதல் என்பது ஒருவர் தம்மை தாழ்மைப்படுத்துவது, ஆனால் கனப்படுத்துதல்தான் அந்த கீழ்ப்படிதலுக்குரிய மரியாதையை ஊக்குவிக்கிறது.*

*கீழ்ப்படிதல் மற்றும் பெற்றோரைக் கனப்படுத்துதல் என்பது பெற்றோருக்கும் நல்லது, பிள்ளைகளுக்கும், மற்றும் சமுதாயத்துக்கும் நல்லது. இந்த ஒழுக்கக்காரியங்கள் குடும்பத்திலே கற்று பிள்ளைகளால் கைக்கொள்ளப்படாவிட்டால், பிறகு அவர்கள் பயிலும் பள்ளியிலோ, வேலை செய்யும் இடங்களிலோ, அல்லது சபை கூடுமிடங்களிலே செயல்படுத்த அவர்களால் கூடாது. கீழ்ப்படியாமையும் கனப்படுத்துதல் இல்லாமையும் உள்ள இடங்களில் சமுதாயம் வெறுமையையும் ஒழுங்கின்மையும் உள்ளதாகவே காணப்படும். பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படியும் போது, அவர்கள் ஞானத்திலே நடக்கிறார்கள்.*

*பெற்றோர் தங்கள் பிள்ளைகளைப் பயிற்றுவிக்கவேண்டும் (6:4). பயிற்றுவித்தல் ஒரு எதிர்மறை நிலையைக் கொண்டிருக்கிறது. “உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாதிருங்கள்” என்று பவுல் சொன்னார். பெற்றோர் தங்கள் பிள்ளைகளை கோபப்படுத்தவே கூடாது என்பது இதன் பொருள்*

அல்ல. முறையான பயிற்றுவித்தலில் பெரும்பாலும் பிள்ளைகள் விருப்பமற்றுப் போவார்கள். பவுலின் போதனை என்னவெனில், "பிள்ளைகள் திடனற்றுப் போய் மனச்சோர்வு அடையாதபடிக்கு அவர்கள் கோபத்தை மூட்டி எழுப்பவேண்டாம்" என்பது தான். மேலும், பிள்ளைகளை பயிற்றுவித்தல் நேர்மறைக் கோணத்தையும் கொண்டது. பவுல், "கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக" என்று எழுதினார். "சிட்சித்தல்" பிள்ளைகள் சரியானவைகளைச் செய்யும்படிக்கு அவர்களை நடத்தும்படி கொடுக்கப்படுவது, "போதனை" என்பது தான் போதிக்கப்பட்டதை செயல்படுத்தத் தேவையான உற்சாகத்தைக் கொடுக்கப் பிள்ளையிடத்தில் சொல்லப்படுவது.

பிள்ளைகளுக்குப் போதிப்பதன் நோக்கம் அதிகாரத்தை மதிப்பதற்குக் கற்றுத் தருவது. அவர்கள் பெற்றோரின் அதிகாரத்தை மதிக்க வேண்டும். ஆசிரியர்கள், அரசு, மற்றும் தேவனுடைய அதிகாரங்களையும் மதிக்க வேண்டும்.

போதிக்கப்படுவதில் விசுவாசம் (காண்க 2 தீமோத்தேயு 1:5), சுயஒழுக்கம், வேலை, மற்றும் சுய மதிப்பீடு, அதோடு கூட தோல்வி நிரந்தமல்ல போன்ற கருத்துக்களை உள்ளடக்கியது. பிள்ளைகள் எடுத்துக் கொள்ளும் எல்லா முயற்சிகளிலும் வெற்றி பெற்றிட இயலாது.

பிள்ளைகளைப் பயிற்றுவிக்க *காலஅவகாசம்* தேவை. பிள்ளைகளை பிரதானமாக மனதில் வைத்து பெற்றோர் நேரத்தை ஒதுக்க வேண்டும், மேலும் அது சரியான *முன்மாதிரியையும்* சார்ந்தது. பிள்ளைகள் தங்களுடைய பெற்றோரிடம் காண்பதைக் கொண்டே வாழ்வை அமைத்துக்கொள்வார்கள். முறையான பயிற்றுவித்தல் நேர்மறை மற்றும் சீர் திருத்துதலைக் கொண்ட சிட்சையுடன் பெற்றோரும் தவறுசெய்ய வாய்ப்புள்ளது என்பதால் நேர்மையான *அறிக்கையிட்டுக் கொள்ளுதல்,* நல்லவைகளைப் பிள்ளைகள் செய்யும் போது அவர்களுக்கு உறுதியான *நம்பிக்கையளித்தல்* ஆகியவற்றை உட்படுத்தியது.

பெற்றோரும் பிள்ளைகளுமாகிய இரு சாராருமே ஒருவரையொருவர் கனப்படுத்துகிற ஞானமுள்ளவர்களாய் வாழ முடியும். இப்படி நிகழும்போது, குடும்பம் ஆரோக்கியமாகவும், பிரயோஜனமுள்ளதாகவும், மனமகிழ் சூழலோடும் செயல்படும். கூடுதலாக, கர்த்தர் கனப்படுத்தப்படுவார், சமுதாயமும் வாழ்வதற்கேற்ற சிறப்பான சுற்றுச் சூழலைப் பெறும்.

ஜெய் லோக்ஹார்ட்

**கிறிஸ்துவை மையமாகக் கொண்ட குடும்பம் (6:1-4)**

James Dobson தனது புத்தகமாகிய *Dare to Discipline,* என்பதில் குளிர்ந்த நீர் இருந்த ஒரு பாத்திரத்தில் வைக்கப்பட்ட ஒரு தவளைப் பற்றிய கதையைச் சொல்லியிருந்தார். அந்தப் பாத்திரம் ஆழமற்றதாக இருந்தது, எனவே அந்தத் தவளை விரும்பியிருந்தால், சுலபமாக தப்பித்துப் போயிருக்கலாம். மெதுவாக, தண்ணீரின் வெப்பநிலை அதிகரிக்கத் துவங்கியது. ஏறத்தாழ, கண்ணுக்குத் தெரியாத வகையில், தண்ணீர் கொதிநிலையை அடைந்தது. தவளையோ தொடர்ந்து அந்தப் பாத்திரத்தில் தண்ணீர் கொதிநிலை அடைவதைக் கூட மறந்து உட்கார்ந்திருந்தது. தண்ணீர் கொந்தளித்து அதன் நீராவியுடன்

உச்சநிலையை அடைந்தபோதும், கடைசியில் தான் வெந்து சாகிறவரை அந்தத் தவளை தொடர்ந்து உட்கார்ந்திருந்தது.[63]

அநேக வழிகளிலே, இன்றைய குடும்பங்களின் காட்சி இதுதான். குடும்பத்துக்கு விரோதமான ஒழுங்கீனங்களின் தீமைகள் நாளுக்கு நாள் அதிகரித்து பொல்லாப்பு நிறைந்த உலகின் செயல்பாடுகள் கொஞ்சம் கொஞ்சமாக நமது குடும்பங்களை சீரழித்துக் கொண்டுள்ளன. நமது குடும்பம் நிலை நிற்க வேண்டுமானால், நல்மனசாட்சியுடன் வேதாகம உபதேசத்துக்குத் திரும்பி பலமான ஆவியினால் - கட்டுப்படுத்தப்படுகிற குடும்பங்களாக நாம் மாற வேண்டும்.

6:1-4ல், பவுல் பெற்றோர்/பிள்ளைகளின் உறவுமுறைகளை பரிசோதித்தார். இங்கே, நாம் கிறிஸ்து - மையம் வைக்கும், ஆவியினால் - நிரப்பப்பட்ட குடும்பத்திற்கு அநேக உண்மைகள் உள்ளடக்கியிருப்பதை நாம் கண்டு பிடிப்போம்.

*பிள்ளைகளுக்கு தேவனுடைய கட்டளை.* "பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம்." உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக (என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங்கற்பனையாயிருக்கிறது) (6:1-3).

"பிள்ளைகள்" என்பதற்கு பவுல் கூறும் வார்த்தை சந்ததி என்பதன் பொதுவான பதம். இந்தப் பொருளில் நாம் எல்லாருமே பிள்ளைகள் தான், நம்மில் ஒவ்வொருவருக்கும் தாயும் தகப்பனும் உண்டு. ஆகிலும், இந்த வசனப்பகுதியில், தனது பெற்றோரின் வீட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் எந்த ஒரு பிள்ளையையும் மனதில் கொண்டு பவுல் எழுதினார், அவர்களுடைய பெற்றோரின் அதிகாரத்துக்குள்ளாக அவர்களின் பொறுப்பில் தான் அவர்கள் இருக்கிறார்கள். இந்த வார்த்தைகள் ஏதோ எட்டு வயது பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் அறிவுரைகள் மட்டுமல்ல, ஆனால் வயது அடைந்து தங்களுடைய பெற்றோரின் கூரையின் கீழ் இருப்பவர்களுக்கு அப்படியிருக்குங்காலம் வரை அவர்களுக்கு தேவனுடைய கட்டளை இதோ.

(1) தேவைப்படும் கடமை. "பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள் ..." (6:1). சமீபகாலமாக புறந்தள்ளப்படும் தேவனுடைய கட்டளையின் வசனப்பகுதி ஒன்று இருக்குமானால், அது இதுதான். பெற்றோரின் பிள்ளைகள் மேல் இருக்கும் அதிகாரம் பரியாசம் பண்ணப்பட்டு பிள்ளைகளின் உரிமைகள் சமுதாயத்தில் மிக அதிகமாக வளருகிறது.

சில சமுதாயங்களில் ஒரு பிள்ளையானவன் தனது சொந்த விதியைத் தீர்மானிக்கவும், முறைகளை தன் வாழ்வுக்கு வகுத்துக் கொள்ளும் மதிப்பீட்டைச் செய்து கொள்ளவும், பெற்றோரின் ஆலோசனைக்கு புறம்பே குறிப்பால் உணர்த்துகின்றனர், இருந்தும் பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படிய வேண்டும், இது நியாயம் என்று வேதாகமம் அமைதியாக உறுதிப்படுத்துகிறது. இந்த கோட்பாடு கைக்கொள்ளப்படும் வீடுகள் மட்டுமே பலமாய் நிலைநிற்கும்.

"கீழ்ப்படியுங்கள்" எனும் வார்த்தை கிரேக்க மொழியில் ஒரு விரிவான விளக்கமுடையது. இதன் நேரடிப் பொருள், "கீழமர்ந்து கவனித்தல்." இதன் கருத்து ஒரு பிள்ளை தனது பெற்றோரின் அதிகாரத்துக்குக் கீழ்ப்படிந்து அவர்கள்

*என்ன சொல்லுகிறார்கள் என கவனிக்க வேண்டியதைச் சொல்லுகிறது.*

*பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு "அவர்கள் சரியாக இருக்கும் போது" மட்டும் கீழ்ப்படிய வேண்டும் என்று பவுல் சொல்லவில்லை. "அநேக வாலிபர்கள்," "அப்பா இந்த விஷயம் என்னவென்று தெரியாம லேயே பேசிக் கொண்டிருக்கிறார், ஆதலால் நான் அவர் சொல்லுவதை கேட்க வேண்டுவதில்லை," என்கின்றனர், அல்லது "இந்த விஷயத்தைக் குறித்த கேள்விக்கு அம்மா தவறான பதில் கொண்டிருப்பதால், நான் என்ன செய்ய விரும்புகிறேனோ அதைத்தான் செய்வேன்" என்று சொல்லுகின்றனர். தேவனுடைய வசனம் சொல்லுகிறது, "பிள்ளைகளே பெற்றோருக்கு கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம்." பிள்ளைகள் அவர்கள் காட்டும் வழிகள் ஏற்புடையதாய்க் காணாமலிருந்தாலும், அவர்களுடைய பெற்றோருக்குக் கீழ்ப்படிவது எப்பொழுதுமே சரியானது. இது குடும்பத்துக்கு தேவன் கொண்டுள்ள திட்டம், எனவே பிள்ளைகள் மனப்பூர்வமாய்த் தங்களுடைய பெற்றோரின் அதிகாரத்துக்குக் கீழ்உள்ள பாதுகாப்பில் தங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும்.*

*(2) பரிமாணம் ஒழுங்கு செய்யப்பட்டது. பிள்ளைகள் எப்படி கீழ்ப்படிய வேண்டும்? பவுல் தமது கட்டளையில் "பிள்ளைகள் ... கர்த்தருக்குள் கீழ்ப்படிய வேண்டும்" என்றார் (6:1). அதன் பொருள் என்ன? பெற்றோர் கிறிஸ்தவர்களாக இருந்தால் மட்டுமே கீழ்ப்படிய வேண்டும், அவர்கள் கிறிஸ்தவர்களாயிராவிட்டால் கீழ்ப்படிய வேண்டிய கட்டாயம் இல்லை என்பது இதன் பொருள் அல்ல. பவுல் கொலோசெயர் 3:18ல் மனைவிகளுக்குக் கொடுத்த அதே வழிகாட்டலைத்தான் இவர்களுக்கும் கொடுக்க விரும்புகிறார்: "மனைவிகளே கர்த்தருக்கேற்கும்படி, உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்." தங்கள் புருஷர்கள் கிறிஸ்தவர்களாயிருந்தால் மட்டுமே மனைவிகள் கீழ்ப்படிய வேண்டுமா? இல்லை! மாறாக, மனைவிகள் தங்களுடைய புருஷர்களின் அதிகாரத்துக்கு எல்லா வகையிலும் தேவனை மகிமைப்படுத்தும் வகையில் ஈர்க்கப்பட வேண்டும். கிறிஸ்துவை பின்பற்றுகிற ஒருவரின் தகுதியாக அவர்கள் கீழ்ப்படிய வேண்டும்.*

*இங்கு 6:1ல் சொல்லப்படுகிற "கர்த்தருக்குள்" எனும் பதத்தின் சரியான பொருள் இதுதான். பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு தேவனைக் கனப்படுத்தும் பொருட்டு கீழ்ப்படிய வேண்டும்.*

*பெற்றோர் தங்கள் பிள்ளையினிடத்தில் ஒன்றை செய்யும்படி கேட்டு அவன் மரியாதையில்லாத குரலில் முணுமுணுத்து, "சரி! நான் செய்கிறேன்!" என்று சொன்னால் பிறகு தன்னுடைய பெற்றோருக்குக் கீழ்ப்படியாமல் போகிறன். அவன் தொடர்ந்து தனது பெற்றோரின் கட்டளையைக் குறித்து தர்க்கம் பண்ணி அல்லது பெற்றோர் அறியா வண்ணம் அவர்களுடைய கட்டளையை மீறுவானானால், பிறகு அவன் கர்த்தருக்குள் தன் பெற்றோருக்குக் கீழ்ப்படிவதில்லை.*

*கொலோசெயர் 3:20ல் சொல்லுகிறது, "பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்கு எல்லா காரியத்திலும் "கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது." இடப்படும் கட்டளை எவ்வளவு தவறானதாகத் தெரிந்தாலும் சரி, பிள்ளை தனது பெற்றோருக்குக் கீழ்ப்படியும் போது, அவன் கர்த்தரைப் பிரியப்படுத்த முயற்சிக்கிறான்.*

பெற்றோர் கர்த்தருக்கு முரணான ஒரு காரியத்தைச் செய்யும்படி கேட்டால் என்ன செய்வது? அப்படியொரு நிலை ஏற்படுமாகில், உபதேசம் என்னவெனில், ஒரு மனைவியை அவளது கணவன் தேவனுடைய வசனத்துக்கு முரணான ஒரு காரியத்தைச் செய்யக் கேட்டால் அவள் செய்ய வேண்டியதைத்தான் பிள்ளையும் செய்ய வேண்டும்: கீழ்ப்படிவதற்கு ம னிதனைக் காட்டிலும் தேவனுடைய வழியையே தெரிந்து கொள்ள வேண்டும். அந்த உபதேசத்துக்கு உண்மையாயிருத்தலின் பொருள், தன்னுடைய பெற்றோரின் சொல்லுக்குக் கீழ்ப்படியாமல் போனதன் விளைவை அவன் சந்தித்தாலும் அவனது வாழ்க்கையில் தேவன் கனப்படுத்தப்படுவார்.

*(3) ஆதாயப்பங்கு உணரப்படுதல்.* "நன்மையுண்டாயிருக்கவும் பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக" (என்பதே வாக்குத்தத்தம் உள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது) (6:2, 3) இந்த ஆதாயப்பங்கு விஷயத்தில் தேவன் தனிப்பட்ட விதத்தில் தாங்கும் நிலையைக் குறிப்பிடுகிறாரா அல்லது தேசீய அளவில் வாக்குத்தத்தமாகப் பேசுகிறாரா? அநேகமாக, இரண்டுமே, ஒரு பிள்ளையானவன் தன் பெற்றோருக்குக் கீழ்ப்படியும்போது நீடித்த வாழ்வைப் பெறுவான், இதற்குக் காரணம் ஒரு பிள்ளை தனது பெற்றோரின் ஆலோசனையக் கேட்டு தனக்கு தீங்கை உண்டாக்கும் அநேக முடிவுகளையும் செயல்களையும் தவிர்க்கும்போது அப்படியாகும்.

தேவன் இஸ்ரவேலருக்கு இந்தக் கட்டளையைக் கொடுத்த போது, இந்த ஆதாயப்பங்கு ஏன் அத்துடன் சேர்க்கப்பட்டது? ஒருவேளை பிள்ளையின் உறவுமுறை தனது பெற்றோருடன் கொண்டிருப்பதே அவனுடைய எதிர்காலத்தின் அனைத்து உறவுமுறைகளுக்கும் திறவுகோலாய் அமையும். அவன் தன் பெற்றோருக்கு செலுத்தவேண்டிய கனத்தையும் மதிப்பையும் செலுத்தாமல் போனால், பிறகு அவன் தன்னுடைய சகாக்களோடோ, ஆசிரியர்களோடோ, உடன் பணி புரிவோருடனோ, அல்லது மேலதி காரியோடோ அவன் எதிர்கொள்ளும்போது அவர்களோடே எப்படி நட்பைக் காப்பது என்று அவன் அறியான். குடும்பம் தேவன் பயிற்சியளிக்கும் மைதானம், அங்கே ஒரு பிள்ளையை ஆயத்தப்படுத்தி இந்த உலகில் சரியாக நடந்து கொள்ள ஏதுவாகிறது.

கீழ்ப்படிதலுக்குக் கிடைக்கும் ஆதாயப் பங்கு தனிப்பட்டோருக்கான அடையாளம் மட்டுமல்ல, ஆனால் அது தேசீய அடையாளமும் கூட. ஒரு தேசம் அதன் குடும்பங்களைக் காட்டிலும் பலமானவையல்ல. தன்னுடைய குடும்பத்தில் கீழ்ப்படிதலைக் கற்றுக் கொள்ளாத பிள்ளைகளைக் கொண்ட எந்த தேசமும் ஆபத்தை நோக்கியிருக்கிறது.

*பிதாக்களுக்கு தேவனின் வழிகாட்டல்.* "பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக" (6:4).

*(1) அர்ப்பணம் குறிப்பிடப்பட்டது,* தகப்பன்மார்கள் (பிதாக்கள்) தங்களுடைய பிள்ளைகளை நடத்தும் விதத்திற்கு தேவனுடைய திட்டத்தின் மூன்று கொள்கைகளை பவுல் கொடுத்தார். முதலாவது கொள்கை குடும்பத்தில் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் அர்ப்பணம். இது வசனம் 4ல் குறிப்பிடப்பட்டுள்ளது: "பிதாக்களே உங்கள் பிள்ளைகளைக்

கோபப்படுத்தாதிருங்கள்."

ஒரு பிள்ளையானவன் ஆரோக்கியமான வளர்ச்சியைப் பெற்று பக்குவமடைய, தனது தகப்பனும் தாயும் அவனுக்காக தங்களை அர்ப்பணித்திருக்கிறார்கள் என்பதை அவன் உணர வேண்டும். இப்படிப் பட்ட எண்ணத்துடன் கூடிய அர்ப்பணம் இல்லாத பட்சத்தில், ஒரு பிள்ளையின் சுய-மதிப்பீடு மற்றும் மனோ ரீதியான - நலம் ஆகியன மிகக் கடுமையாக பாதிக்கப்படும். எந்தப் பிள்ளைக்கும் அப்படி நடக்கும் என்பதற்கான ஒரு உறுதிநிலை, அவனுடைய தகப்பன் எரிச்சலையும் வெறுப்பையும் உண்டாக்கும் செயலைச் செய்து அவனுக்கு மிகுந்த ஏமாற்றத்தைத் தொடர்ந்து கொடுக்கும் செயலில் ஈடுபட்டால் நிச்சயமாக அவனுக்கு அந்நிலை ஏற்படும் (கொலோசெயர் 3:21).

(2) சிட்சை அறிவுறுத்தப்படுகிறது. "... சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக ..." (6:4). பவுல் நேர்மறைப் பகுதியில் பிதாக்களின் தொடர்பு பிள்ளைகளிடத்தில் இருக்க வேண்டிய முறை எப்படிப்பட்டது என குறிப்பிட்டார். பயிற்சியும் போதனையும் இருக்க வேண்டும். இந்த உபகரணங்கள் இல்லாமல், ஒரு பிள்ளை ஆரோக்கியமுள்ள ஒருவனாக ஆவிக்குரியமுறையிலும், மனவெழுச்சியிலும், மனோதத்துவ ரீதியிலும் வளர இயலாது.

"போதனை" என்பது என்ன? எளிமையாகச் சொன்னால், அது சட்டங்களையும், விதிகளையும், கொள்கைகளையும் உள்ளடக்கிய ஒரு பிள்ளையானவன் தனது வாழ்க்கையை வாழவேண்டிய முறையைக் கொண்டது. தாய்களும், தகப்பன்களும் இந்த உறுதியான போதனையைத் தொடர்ந்து பிள்ளைகளுக்கு போதிக்கிற பொறுப்பைப் பெற்றிருக்கிறார்கள். இந்த அறிவின் மூலமாக மட்டுமே ஒரு பிள்ளை சரி எது தவறு எது என அறிந்து கொள்ளவும், வாழ்க்கையிலே ஆசீர்வாதங்களையும் சாபத்தையும் கொடுப்பது எது என்ற அறிவையும் பெற்றுக் கொள்ளக் கூடும்.

இப்படிப்பட்ட போதனைகள் "பயிற்சியுடன்" மேலும் வலுவூட்டுதலாக அமைய வேண்டும். இங்கே, இந்த வார்த்தையின் பொருள் ஒரு பிள்ளைத் தன்னைத்தானே ஒழுக்கப்படுத்திக் கொண்டு போதிக்கப்பட்ட சட்டங்கள், ஒழுங்குகள் மற்றும் கொள்கைகளின்படி தன்னை நடத்திக் கொள்வான். கீழ்ப்படிதலுக்குப் பிரதிபலனும் கீழ்ப்படியாமைக்குத் தண்டனையும் உண்டு என்பதை அவன் அறிய வேண்டும்.

வருந்தத்தக்க காரியம் என்னவெனில் அநேக குடும்பங்களில் பிள்ளைகளுக்கு வழிகாட்டல் இல்லாத கட்டளை கொடுக்கப்படுகிறது. எப்படி அந்தக் கட்டளை கொடுக்கப்படுகிறது எப்படி அந்தக் கட்டளைகளை கைக்கொள்வது - அல்லது போதனைகளை கனப்படுத்தாமல் விட்டால் அதினால் உண்டாகும் விளைவுகள் என்ன ஆகியன பற்றிய அறிவில்லாமல் கொடுக்கப்படுகிறது. அப்படிப்பட்ட பொருள் தெளிவில்லாமல் கொடுக்கப்படும் கட்டளைகள் ஒரு பிள்ளையை குழப்பமடையச் செய்து தப்பான குணத்திற்கு கொண்டு செல்லுகிறது. தேவனுடைய திட்டம் போதுமானதும் வழிகாட்டக் கூடியதும ாயிருக்கிறது என்று பவுல் சொன்னார்.

(3) வழிகாட்டும் நோக்கம். "... கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக" (6:4). தகப்பன்ம

ார்கள் தங்கள் பிள்ளைகளை நடத்த இரண்டு வழிகாட்டிகள் மட்டுமே உண்டு: கர்த்தருக்குள் அல்லது கர்த்தருக்குப் புறம்பே. பிள்ளைகள் வேதாகம வழியில் போதிக்கப்பட்டிருக்கக் கூடும் அல்லது மனுஷீக உபதேசங்களால் போதிக்கப்படக்கூடும். முதலில் சொல்லப்பட்ட வழி சந்தோஷத்தையும், சமாதானத்தையும் குடும்பத்தில் ஒற்றுமையையும் கொண்டு வருகிறது. இரண்டாவது வழி ஒரு பிள்ளையாண்டான் சுயநலமாய் வாழவும் மற்றவர்களைக் குறித்து அக்கறையற்ற முறையிலும் வாழச் செய்கிறது. ஒன்று வாழ்க்கையிலே எவ்வித மன உறுத்தலும் இல்லாமல் வாழ்ச்செய்கிறது; மற்றொன்று அநேக இதய வலிகளையும் வாழ்நாள் முழுவதும் மற்றவர்களோடு கொண்டுள்ள தொடர்பு முறையில் கொண்டு வருகிறது.

பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளின் சிட்சையிலும் போதனையிலும் சரியான வழி காட்டலைக் கொண்டிருக்க வேண்டும். அந்தப் பணிப்பொறுப்பு பள்ளிக்கூட ஆசிரியருக்கோ, மக்கள் பிரதிநிதிகளுக்கோ, சபைக்கோ விடப்படக்கூடாது. இவர்களெல்லாம் ஒருவேளை உதவிபுரியக் கூடியவர்களாக இருக்கலாம், ஆகிலும் பிள்ளைகளுக்குத் தெய்வீக வழிகாட்டலை கொண்டுவர வேண்டியது பெற்றோர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடமையாகும்.

*முடிவுரை.* தேவன் சிருஷ்டித்தபடியெல்லாம் நமது குடும்பம் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்; உலகம் உருவாக்கியுள்ள முறைகளினால் ஆன அச்சுக்குள் நாம் அமிழ்த்தப்படுவதிலிருந்து நம்மைப்பாதுகாக்க விரும்புகிறார். கிறிஸ்தவக் குடும்பங்கள் பிரிந்து வீழ்ச்சி அடைந்துவிடக்கூடாது. கிறிஸ்தவ திருமணங்கள் வாழ்நாள் முழுவதற்கும் ஒன்றாக நிலைத்திருக்க வேண்டும். நமது திருமணங்களின் ஒவ்வொரு நிலையையும், நமது குடும்பங்களையும் மற்றும் நமது வாழ்க்கைகளையும் தேவனுடைய ஆவியின் கட்டுப்பாட்டுக்குள் சரணடைய விட்டு விட வேண்டும்.

### வேலை செய்வதில் ஆவியினால் நிறைந்திருத்தல் (6:5-9)

எஜமான்/அடிமை குறித்த உறவுமுறைகளில் நான்கு வசனங்களில் மூன்று வசனங்கள் அடிமையைக் குறிக்கின்றன. இது ஆச்சரியமல்ல, அநேக ஆதிக்கிறிஸ்தவர்கள் சமுதாயத்தின் இப்படிப்பட்ட சூழ்நிலையிலிருந்து வந்தவர்கள்தான் (காண்க 1 கொரிந்தியர் 1:26). அந்தக் கொள்கைகளில் சில இன்றைய பணியாளர்களின் அன்றாட வேலைகளில் பொருந்தக் கூடியவைகளாயுள்ளன.

*வேலைக்கு அமர்த்தப்பட்டவரின் வேலை கொடுத்தவருக்கான நேர்மையான மரியாதை.* "வேலைக்காரரே, நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது போல, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கும் பயத்தோடும் நடுக்கத்தோடும் கபடற்ற மனதோடும் கீழ்ப்படிந்து …" (6:5, 6). அடிமைகள் கீழ்ப்படிதலுள்ளவர்களாயிருக்க வேண்டுமென்ற தேவையை பவுல் வைத்தார். அதே போன்ற கோட்பாடு வேலைக்காரருக்கும் பொருந்துகிறது. வேலைக்காரன் எல்லாவற்றிலும் மரியாதையுள்ளவனாயிருக்க வேண்டும் - ஒரு கண்காணி தன் மீது கவனம் செலுத்திக் கொண்டிருக்கும்போது மாத்திரமல்ல. அவன் தன்னை வேலைக்கு அமர்த்தியவனைப் பிரியப்படுத்த வேண்டியதுதான், ஆகிலும் அவனுடைய பிரதான அக்கறையெல்லாம் தேவனைப் பிரியப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, வேலைக்காரனாக

உள்ள அல்லது பணிபுரியும் ஒரு கிறிஸ்தவன் தேவனுடைய பிரதிநிதியாக தான் பணியாற்றும் அலுவலகம், அல்லது தோட்டம், அல்லது எங்கு வேலை செய்தாலும் அப்படியிருக்கிறான்.

எந்த நிபந்தனையும் இதிலே உட்படுத்தப்பட வில்லை, "உன்னுடைய எஜமானனுடைய கட்டளைகளில் அர்த்தமிருந்தால் கீழ்ப்படி" என்று அப்போஸ்தலன் சொல்லவில்லை. "உனக்குக் கொடுக்கப்பட்ட பணி உனக்கு மகிழ்ச்சியளித்தால் மட்டுமே கீழ்ப்படி" என்றும் அப்போஸ்தலன் சொல்லவில்லை. அவர் சொன்னதெல்லாம் கிறிஸ்தவன் மதிப்போடும், கனத்தோடும், நேர்மையோடும் வேலை செய்ய வேண்டும்.

ஒரு வேலையாள் ஒத்துழைப்புக் கொடுக்காமலும் தன்னை பணிக்கு அமர்த்தியவருக்குரிய மரியாதை செலுத்தாமலும் போனால், அவன் தேவனுடைய அடிப்படைக் கொள்கையையே எதிர்த்துக் கலகம் பண்ணக்கூடியவனும் ஏற்படுத்தப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்தவருக்கு கீழ்ப்படியாது தமது உலகளாவிய அமைப்பை எதிர்ப்பதுமாகும். தமது அந்தக் கொள்கை பணியமர்த்தப்பட்டவரும் பணியமர்த்தியவருமாகிய உறவுமுறையில் பின்பற்றப்படுவதை அவர் விரும்புகிறார்.

கீழ்ப்படியாமை என்பது தேவனுடைய அதிகாரம்/கீழ்ப்படிதல் கொள்கையை அழிப்பது மாத்திரமல்ல, அது கிறிஸ்தவ சாட்சியத்தை சீரழிப்பதுமாகும். தான் வேலை செய்யும் இடத்தில் சுவிசேஷத்திற்கான கதவு திறக்கப்பட ஒரே வழி பணியமர்த்தப்பட்டவர் கிறிஸ்தவத் தரத்தையும் மதிப்பையும் அங்கே வித்தியாசமான முறையில் வெளிப்படுத்துவதுதான்.

நம்மை நாமே கேட்டுக் கொள்ளும் கேள்வி, "என்னுடைய பணியாற்றும் விதம் எனது சாட்சியத்துக்கு புகழைக் கொண்டுவரத்தக்க வகையில் எனது விசுவாசத்தை எனக்கு வேலை கொடுத்தவரிடத்திலும் என்னோடு வேலை செய்பவர்களோடும் பகிர்ந்து கொள்ளும் வகையில் செயல்படுகிறதா?"

*பணியமர்த்தப்பட்டவர் பணியமர்த்தியவருடனான மனப்பூர்வமான ஒத்துழைப்புத் தன்மை.* "வேலைக்காரரே நீங்கள் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிகிறது போல, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கும் கீழ்ப்படியுங்கள் ... கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ் செய்யுங்கள்" (6:5-7). கொலோசெயருக்குப் பவுல் இதற்கு ஒத்த போதனையைக் கொடுக்கிறார்: "எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்" (கொலோசெயர் 3:23). கிறிஸ்தவ வேலைக்காரன் இயேசுவே தனது பூமிக்குரிய மேற்பார்வையாளராக இருப்பது போல தனக்குக்கொடுக்கப்பட்ட பணியைச் செய்ய வேண்டும். நாம் வேலை செய்யும் போது, "இயேசு இந்த வீட்டில் குடியிருப்பார் என்று இந்த வீட்டைக்கட்டுகிறேன்" என்று நினைத்துக் கொள்ள வேண்டும்; "இயேசு இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தப் போகிறார், ஆதலால் இந்த இயந்திரத்தை சரி செய்வேன்" என்று நினைக்க வேண்டும். உண்மையில் நாம் இயேசுவுக்காக வேலை செய்யக் கூடியவர்களாயிருந்தால், சந்தேகமே இல்லாமல் தர்க்கம் பண்ணாமலும் தாமதிக்காமலும் அவருக்குக் கீழ்ப்படிய ஆயத்தமாவோம். அதாவது, பவுலின் வார்த்தையின்படி, நமக்கு வேலை கொடுத்தவருடன் நாம் அப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும்.

கிறிஸ்தவனாயிருக்கும் ஒரு வேலைக்காரன் நல்மனதோடு வேலை

செய்யாவிட்டால், பிறகு அவன் ஒன்றைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும்: ஒன்றேல் அவன் தனது வேலையை மாற்றிக்கொள்ள வேண்டும், இல்லையேல் அவன் தனது எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். முதல் நூற்றாண்டில் வாழ்ந்த அடிமைகள் தங்கள் எஜமானருக்கு கர்த்தராகிய இயேசுவுக்கு ஊழியம் செய்வதாக நினைத்து செய்திருப்பார்களேயானால், நாமும் அந்த வழியே செயல்பட முடியும்! நம்மில் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்க்கையில் ஆவியானவர் இருப்பதை விளங்கப் பண்ண இன்னும் வித்தியாசமாக நாம் வேலை செய்து கொண்டிருக்கும் போது செயல்படுவோம்.

*பணியமர்த்தப்பட்ட ஒருவர் தன்னை பணியமர்த்தியவருக்கு தனது சிறப்பான செயலாற்றலைக் கொடுக்க வேண்டும் என்பதற்கான பகுத்தறிவு.* ஆவியினால் நிரப்பப்பட்டுள்ள பணியமர்த்தப்பட்டவருக்கு சிறப்பும் எண்ணமும் கொண்ட இரண்டு காரணங்களை வேதவசனங்கள் கொடுக்கின்றன. ஒன்று நேர்மறை; மற்றொன்று எதிர்மறை, நேர்மறைக் காரணம் வசனம் 7ல் சொல்லப்பட்டுள்ளது: "அடிமையானவனானாலும், சுயாதீனமுள்ளவனானாலும், அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவானென்று அறிந்து."

நாம் ஏற்கனவே பவுலின் நாட்களில் அடிமைகள் ஒரு அஃறினை பொருள் போல் நடத்தப்பட்டனர் என்று பார்த்தோம், அவர்கள் எவ்வளவு சிறப்பான கல்வியைப் பெற்றிருந்தாலும் சரி. உண்மையென்னவெனில் ஒரு கல்வி பயின்ற, (நல்ல) கலாச்சாரமுடைய ஒரு அடிமை கிறிஸ்தவனாக இருப்பானேயானால், அவனுடைய புதிய விசுவாசத்தினால் கடினமாய் நடத்தப்படுவான். அப்படிப்பட்ட அடிமைகளுக்கு பவுல் தங்களுடைய சிறப்பான செயலை விடாதிருக்கும்படி உற்சாகப்படுத்தினார், ஏனெனில் அவர்களுடைய உண்மையான ஊழியத்திற்கான பலனை கர்த்தர் அளிக்கும் நாள் வந்து கொண்டிருந்தது.

வேலைக்காரர்களாகிய நாம், இந்த வாழ்க்கையில் நம்முடைய தகுதிக்கேற்றவைகளை எப்பொழுதும் பெறாமல் இருக்கக் கூடும். நாம் குறைவாய் ஊதியம் அளிக்கப்பட்டும், அதிகமாய் வேலை சுமத்தப்பட்டும் இருக்கலாம். ஆகிலும், கர்த்தர் சரிகட்டும் நாள் வருகிறது. பெறப்படும் நமது வேலைக்கான கூலி ஒரு கிறிஸ்தவனுக்கு கிடைக்கிற முழுமையான சம்பளம் அல்ல, ஒரு நாளிலே இயேசு தமது விசுவாசமுள்ளவர்களுக்கு "சுதந்தரமாகிய பிரதிபலனை" அளிப்பார். உண்மையில், நாம் நமக்கு அளிக்கப்பட்ட ஒரு வேலையைச் செய்யும்போது, அவருக்கே ஊழியம் செய்கிறோம். நாம் எங்கே யாருக்கு வேலை செய்தாலும், இயேசுவே நமது உண்மையான எஜமானர். எப்படி நாம் அநியாயமாய் நடத்தப்பட்டாலும், அது நம்முடைய நடக்கையைக் கட்டுப்படுத்தக் கூடாது. முழுமையான இருதயத்தோடு நாம் வேலைசெய்தால், ஏற்ற வேளையில் கர்த்தர் அதைப் பார்த்து முழுமையான பலனை நமக்களிப்பார்.

இப்படிப்பட்ட ஊழியத்திற்கான எதிர்மறை காரணம் கொலோசெயர் 3:23, 25ல் காணப்படுகிறது: "நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, ... அநியாயஞ்செய்கிறவன் தான் செய்த அநியாயத்துக்கேற்ற பலனை அடைவான்; பட்சபாதமே இல்லை."

தனது வேலையிலே கிறிஸ்தவன் ஒருபோதும் தவறு செய்துவிடக் கூடாது.

*இதற்கு எவ்வித சாக்குப்போக்குமில்லை. நமது தவறுகளுக்கு மற்றவர்களை நாம் குறைசொல்ல முடியாது. எல்லாவற்றையும் தேவன் பார்க்கிறார் அவரே தவறுக்கு பிரதிபலன் செய்வார்.*

*எதிர்பாராத விதமாக, ஒரு எஜமான் சக கிறிஸ்தவனாக இருந்து அவனிடத்தில் பணிபுரியும் சிலாக்கியம் கிடைக்குமேயாகில், வேலை செய்பவர் குறைவான உழைப்பைக் கொடுக்கவோ அல்லது குறைவான பலனைக் கொடுக்கவோ செய்யலாம் என்பது இதன் பொருள் அல்ல. மாறாக, நம்மை பணிக்கு அமர்த்தும் கிறிஸ்துவுக்குள் சகோதரனாகிய அவருக்கு சிறப்பானதில் சிறப்பான உழைப்பை நாம் கொடுக்க வேண்டும், அது வேலை செய்வதிலும் மரியாதை செலுத்துவதிலும் இருக்க வேண்டும்.*

*பணியமர்த்தப்பட்டவர்களுக்கு பணியமர்த்தியவரின் கடமை. "எஜமான்களே, அப்படியே நீங்களும், வேலைக்காரர்களுக்குச் செய்ய வேண்டியவைகளைச் செய்து," அவர்களுக்கும் உங்களுக்கும் எஜமானானவர் பரலோகத்தில் இருக்கிறாரென்றும், அவரிடத்தில் பட்சபாதம் இல்லையென்றும் அறிந்து, கடுஞ்சொல்லை விட்டு விடுங்கள் (6:9). முதல் நூற்றாண்டு அடிமை - எஜமானனுக்கு இந்த வார்த்தைகளை நடைமுறைப்படுத்துவது எவ்வளவு கடினமானதாயிருந்திருக்க வேண்டும்! ரோம அரசில் இருந்த ஒரு எஜமானனுக்கு ஒரு முழுமையான கட்டுப்பாடு அவன் வாழ்வு அல்லது சாவு உட்பட தனது அடிமையின் மீது இருந்தது. இங்கே, ஆவியினாலே ஏவப்பட்ட எஜமானன் மிகவும் வித்தியாசமானவனாக இருக்க வேண்டும் என்று பவுல் தம் வாசகர்களிடம் அறிவுறுத்திக் கொண்டிருந்தார். அவன் தன் வேலைக்காரர்களை நியாயமாகவும், நீதியும் சமமான நிலையிலும் நடத்த வேண்டியவனாயிருந்தான்.*

*இங்கே போதிக்கப்படும் கருத்து என்ன? மத்தேயு 7:12ல் சொல்லப்படுகிற "பொன்விதியைக்" காட்டிலும் குறைந்ததல்ல. பணிக்கு அமர்த்துபவன் பணியில் அமர்த்தப்பட்டவன் தனக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறானோ அதையே அவனுக்குச் செய்து காரியங்களை நடப்பிக்க வேண்டும்.*

*கிறிஸ்தவ நிர்வாகிக்கு தனக்குக் கீழ் பணிபுரிவோரிடம் ஒரு ஆழமான பொறுப்பு (கடமை) இருக்கிறது. அவன் தன்னுடைய வேலைக்காரர்களின் நலனை நாடுகிறவனாயிருக்க வேண்டும், ஏனெனில் பவுல் சொன்னார், "அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" என்று சொன்னார். பணியமர்த்தினவர் தான் பணியமர்த்தினவர்களிடம் சிறப்பானதை எதிர்பார்த்தால், பிறகு அவன் தனது சிறப்பானதை அவர்களுக்குச் செய்ய வேண்டும்.*

*பணியமர்த்தப்பட்டவரிடம் பணியமர்த்தியவரின் சரியான அணுகுமுறை. பணியமர்த்தப்பட்டவன் கடுஞ்சொல்லால் தவறாக நடத்தப்படக் கூடாது, ஏனெனில் எஜமானர்கள் "கடுஞ்சொல்லை விட்டு விடும்படி" பவுலால் கூறப்பட்டனர், வேலை செய்யும் ஒருவரைத் தூண்டும் வழி அதுவல்ல. இயேசு தம்மைப் பின்பற்றி வந்தோரிடம் அப்படி நடந்து கொள்ள வில்லை.*

*ஒரு வெற்றிகரமான பணியமர்த்துபவர் தன்னிடம் பணிபுரிபவர் கொண்டிருக்கும் அதே பரலோக எஜமானரையே தானும் கொண்டிருப்பதை ஞாபகத்தில் வைத்திருப்பார். அதே தேவனுக்கு முன்பாகத் தான் அவன் நியாயத்தீர்ப்பிலே நிற்க வேண்டும். தனது சிறப்பான செயலாற்றலைக்*

கொடுக்கத் தவறும் கிறிஸ்தவ வேலைக்காரனுக்கு தேவன் பட்சபாதம் காட்டமாட்டார் என்றால் தெய்வீக நியமங்களின்படி ஆளுமை செய்யத் தவறிய பணியமர்த்துபவர்களின் தவறுளையும் கண்டு கொள்ளாமல் விடமாட்டார்.

*முடிவுரை.* நாம் ஒரு "சமூக சுவிசேஷத்தை" பிரசங்கிப்பதில்லை, மாறாக, சமுதாயத்தை உட்படுத்திக் கொண்ட சுவிசேஷத்தையே பிரசங்கிக்கிறோம். நம்முடைய வாழ்க்கை தேவனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டதாயிருக்குமானால் மேலும் பரிசுத்த ஆவியின் கட்டுப்பாட்டில் இருக்குமானால், அது எப்படி நம் வேலையைச் செய்கிறோம் என்பதில் வித்தியாசத்தை ஏற்படுத்தும். கிறிஸ்தவம் என்பது கூடி ஆராதிக்கிறதற்காக மட்டும் அல்ல; அது வேலை சார்ந்த சுற்றுப்புற சூழலும் கூட! நமது வேலையின் மூலம் ஆவியின் தாக்கத்தை ஏற்படுத்த நாம் அனுமதித்தால், நமது சக வேலைக்காரர்கள் நமது தொழுகையின் சாட்சியத்தை ஏற்றுக்கொள்வதில் சிரமம் இராது!

கிறிஸ் புல்லார்டு

### நமது எதிராளி (6:10-12)

சாத்தான் குற்றஞ்சாட்டித் திரிபவனும் நம்முடைய எதிராளியுமானவன். அவன் பலவான் (காண்க 1 பேதுரு 5:8) மற்றும் அவன் நமக்கெதிராக வஞ்சகம் நிறைந்த தந்திரங்களைப் பயன்படுத்துகிறான். நம்மைத் தாக்குவதற்கான தந்திரங்களைத் திறம்பட கையாளுகிறான். அன்று ஜனங்களை கடந்த கால வம்சாவழி தோறும் பாவஞ்செய்யப் பண்ணினதுபோலவே, இன்றும் பாவஞ்செய்யப் பண்ணுகிறான். 1 யோவான் 2:15-17ல் யோவான் "கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை" குறித்துப் பேசுகிறார். "மாம்சத்தின் இச்சை" சரீரப் பசியை உள்ளடக்கியது, "கண்களின் இச்சை" என்பது அதைப்பெற ஆசைப்படுவதை உள்ளடக்கியது, "ஜீவனத்தின் பெருமை" அடைந்தே தீர வேண்டும் என்ற ஆசையை உள்ளடக்கியது.

சாத்தான் ஏவாளை ஆதியாகமம் 3:6ல் இந்த மூன்று வழிகளில் சோதித்தான், அவள் விலக்கப்பட்ட கனியை "புசிப்புக்கு நல்லதும்," (மாம்சத்தின் இச்சை) "பார்வைக்கு இன்பமும்" (கண்களின் இச்சை), மற்றும் "புத்தியை தெளிவிக்கிறதும்" (ஜீவனத்தின் பெருமை) என்றும் பார்த்தாள்.

வனாந்தரத்தில் இயேசு சோதிக்கப்பட்டபோது, இதே வழிகளில்தான் சாத்தான் இயேசுவை அணுகினான். கல்லுகளை அப்பங்களாக்கிப் புசிக்கச் சொன்னது மாம்சத்தின் இச்சைகளைக் குறிப்பிடுகிறது. உலகத்தின் ராஜ்யங்களையெல்லாம் அவருக்குக் கொடுப்பதாகச் சொல்லப்பட்டது கண்களின் இச்சைகளைக் குறிப்பிடுகிறது. தேவாலயத்தின் உப்பரிக்கையிலிருந்து இயேசு தாமே கீழே குதித்தால் அவருக்குத் தேவனுடைய கவனமிருக்கிறது என்று நிரூபிக்கச் சொன்னது ஜீவனுத்தின் பெருமையைக் குறிப்பிடுகிறது (மத்தேயு 4; லூக்கா 4).

இன்று இவைகளின் ஒப்பீட்டுடன் கூடிய சோதனைகளை நாம் காண்கிறோம். சாத்தான் இன்னமும் இந்த மூன்று வழிகளில் ஜனங்களை தாக்குகிறான். சரீரப் பசியோ அதைப் பெறும் ஆசையோ, அடைய வேண்டும் என்ற ஆசையோ (அவைகளுக்குள்) தவறானவையல்ல; ஆனால் அதுதான் வாழ்க்கைக்குப் பிரதானமென்றோ அல்லது அதை முறைதவறி

*நிறைவேற்றிக்கொள்வதோதான் தவறாகிறது.*

*நற்செய்தி என்னவெனில் கிறிஸ்து சாத்தானை தமது மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலம் தோல்வியடையச் செய்தார் (எபிரெயர் 2:14, 15; காண்க வெளிப்படுத்தின விசேஷம் 20:10).*

*ஜெய் லோக்ஹார்ட்*

### *நாளுக்கு - நாள் யுத்தம்: எதிராளியாகிய சாத்தானை அறிந்து கொள்வது (6:10-12)*

*நாம் தேவனுக்கென்று வாழுவோமானால், நமக்கு முன்பாக மிகப் பெரிய போராட்டம் உண்டு. கிறிஸ்தவர்கள் வாழ்க்கையின் விளையாட்டு மைதானத்துக்கு அல்ல, யுத்தக்களத்துக்கு அழைக்கப்பட்டவர்கள். மேலும், சந்திக்கப்படும் சத்துரு மனித மாம்சத்தில் ஆடை தரித்து வருபவனல்ல; மாறாக, யுத்தம் ஆவிக்குரிய பொல்லாத மரண வழிகாட்டும் சேனைகளோடு. அது வெளிச்சத்துக்கும் இருளுக்கும், ஜீவனுக்கும் மரணத்துக்கும், பரத்திற்கும் நரகத்திற்கும் இடையிலான போராட்டம். இந்தப் போராட்டத்தில் இயேசுவின் நாமத்தைச் சொல்லுகிற ஒவ்வொருவரும் இடம் பெறுகின்றனர். எக்காரணத்தைக் கொண்டும் ஒருவரும் இதற்கு நீங்கலானவர் அல்ல; எல் லாரும் யுத்தம் பண்ணித்தான் ஆக வேண்டும்.*

*நாம் எப்படி போரிட முடியும்? நாம் வெற்றிகொள்ள தக்கதாக நம்மை ஏதுவாக்கும் யுக்திகள் ஏதேனும் உண்டா? பவுல் தெய்வீக செயல்திறனை எல்லா இருளின் அதிகாரங்களோடு (அந்தகார லோகாதிபதிகளோடு) வெற்றிபெற நமக்குக் கொடுத்தார்.*

*வெற்றிக்கான முதல்படி 6:10-12ல் காணப்படுகிறது. எதிராளியின் தந்திரங்களோடு எதிர்த்துப் போராடும் திராணியைப் பெற நாம் கர்த்தரைச் சார்ந்திருக்க வேண்டும்.*

> *கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனு டைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதி காரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு (6:10-12).*

*அறிவுக் கூர்மை கொண்ட எந்தப்படையும் அதன் யுத்தத்தில் முக்கிய பங்காற்றுவர். ஏனெனில் அது மேலதிகாரிகளின் கவனத்தைத் திருப்பி எதிரியை புரிந்து கொள்ளச் செய்கிறது. எதிராளி யார், அவன் எங்கே இருக்கிறான், அவனால் என்ன செய்ய முடியும், என்று நாம் அறிந்தால் ஒழிய நாம் எப்படி அவனை தோல்வியுறச் செய்ய முடியும்? தேவனுடைய வசனத்தின்படி, நம்முடைய உண்மையான எதிராளி பிசாசுதான்.*

*சாத்தானின் ஆரம்பம் குறித்து தெளிவாக தேவன் சொல்லவில்லை யென்றாலும், சாத்தான் எப்படியிருப்பான் என்றும், அவன் என்ன செய்து கொண்டிருக்கிறான் என்பதையும், அவன் எங்கே போய்க் கொண்டிருக்கிறான்*

என்பதையும் தெளிவுபடுத்தியிருக்கிறார். வெற்றி பெற எண்ணுகிற ஒவ்வொரு கிறிஸ்துவின் படை வீரனும் பொல்லாத ஆவிகளோடு போராடி தனிப்பட்ட முறையில் வெற்றிபெற எதிராளியைக் குறித்து கற்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.

சாத்தான் தேவனல்ல என்பதால், அவன் சிருஷ்டிக்கப்பட்டவனாகத்தான் இருக்க வேண்டும், அவன் தேவனைப்போல நித்திய பரன் அல்ல. இதன் விளைவாக அவனது அறிவும் செயலும் அளவிடப்பட்டவையே. அவன் சர்வ வல்லவனோ, சர்வ ஞானியோ, சர்வ வியாபியோ அல்ல. நமது வாழ்க்கையிலே நமக்கு தேவ பெலன் இருக்குமேயானால், அவன் நம்மை வெற்றிகொள்ள முடியாத ஒரு எதிரி. எபேசியர் 6ல் நம்முடைய எதிராளியாகிய, பிசாசானவனைக் குறித்து பவுல் சொன்னவைகளைக் கவனிப்போமாக.

*சாத்தான் ஒரு தந்திரமுள்ளவன் (6:11).* சாத்தான் பரலோகத்திற்கும் நரகத்திற்கும் இடையிலே எந்த இடத்தையாகிலும் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறானா? இல்லையே! நித்திய ஆசீர்வாதங்களுக்குப் பதிலாக யாரும் நித்திய வேதனையுள்ள இடத்தை மனப்பூர்வமாய் தெரிந்து கொள்ள மாட்டார் என்பதை அவன் அறிந்திருக்கிறான். அவன் அடிக்கடி தந்திரமிகுந்த செயலை செய்து, தனது திட்டத்தால் ஒரு முழு வீச்சுடனான தந்திரத்துடன் நமது ஆவிகளின் கோட்டையைப் பிடிக்கிறான்: சாத்தான் நம்மை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கும்படி பவுல், “அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே” என்றார் (2 கொரிந்திர்யர் 2:11).

அந்த தந்திரங்கள் யாவை? சாத்தானின் தாக்குதல் மூன்று மடங்கானது: அவன் கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமையென மூவகை ஈர்ப்புத் தன்மைகளை வைக்கிறான் (காண்க 1 யோவான் 2:15-17). அவன் தன் தந்திரத்தால் ஒரே ஒரு முறைமட்டும் தீமையான சந்தோஷத்தை அனுபவித்து விடலாம் என்ற நினைவுக்கு நம்மை இட்டுச் செல்கிறான். உலகத்தில் இப்போதைய தேவையெல்லாம் மிக முக்கியமானது நமது சுய தேவைகள் மட்டுமே என்ற உணர்வைக் கொடுப்பான். உடனடி பாவ சந்தோஷம் மட்டுமே எதிர்வரும் தண்டனையைக் காட்டிலும் மகத்தானது என்று சாத்தான் நம்மிடத்தில் சொல்லுகிறான். தனது தந்திரத்தாலும் சில முறைகளை வகுத்தும், ஜனங்களை ஆவிக்குரிய கலகத்தின் பாதையிலே நடத்திச் செல்லுகிறான். மனிதக் கற்பனை, புத்திக் கூர்மை, புதுமைகளைக் கண்டுபிடிக்கும் திறன் ஆகியன பிசாசின் தந்திரங்களுடன் ஒப்பிட இயலாதவை. இந்த தந்திரமுள்ளவனின் சுழ்ச்சி போராட்டத்தை வெல்ல தேவனுடைய உதவி நமக்குத் தேவை.

*சாத்தான் ஒரு ஆவியாயிருப்பவன் (6:12).* கிறிஸ்தவர்கள் ஆவியாயிருப்பதெல்லாம் நீதியுள்ளவையல்ல என்று உணரும் நாள் வந்தால் அதுவே கர்த்தருடைய சபைக்கு மகத்தான நாள். வேதம் சொல்லுகிறது, “பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்” (1 யோவான் 4:1). சாத்தானின் கொடிக்குக் கீழ் அநேக வஞ்சிக்கிற ஆவிகள் உலகத்தில் சென்றுள்ளன.

நம்முடைய யுத்தம் சிறையாக்கப் படக்கூடியவனோ பட்டயத்தால்

வெட்டப்படக்கூடியவனோ அல்லது துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்படத் தக்கவனோ போன்ற எதிரிக்கு எதிராக இல்லை. நமது யுத்தம் பொய், கள்ளஉபதேசம், பொய்யான பக்தி, கள்ளத்தனமான தத்துவம், புத்தி சாலித்தனமான சத்தியத்தின் புரட்டு ஆகிய கருவிகளைக் கொண்டுள்ள பிசாசின் சேனையோடுதான். நமது எதிராளி இன்னொரு பரிமாணத்தில் இருக்கிற கண்ணுக்குப் புலப்படாத ரீதியிலான இடத்தைத் தனது தலைமை யகமாகக் கொண்டு செயல்படுகிற ஆவிகள்தான்.

*சாத்தான் பலவானாக இருப்பவன் (6:12).* சாத்தானுக்கு அதி பயங்கரமான பலம் இருப்பது போல் சித்தரிக்கப்படுகிறது; அவன் நமக்கு முன் வலிமை மிக்க ஒரு எதிரி, நாமோ மாம்சத்தையும் இரத்தத்தையும் மாத்திரம் கொண்டவர்கள். நமது ஆவிக்குரிய எதிரியின் பலத்தை குறைத்து மதிப்பிடுவது நம்மை நாசமாக்கிக் கொள்ளும் தவறுதலாகும்.

சாத்தான் அவ்வளவு வல்லமை பொருந்தியிருப்பதற்கான ஒரு காரணம் அவன் தனியொருவனாய் இருப்பதில்லை. அவனுடைய ஆவிக்குரிய பொல்லாங்குகளுக்கு துணைநின்று அவனுக்கு ஊழியஞ் செய்கிற ஒரு கூட்ட தூதர்களின் சேனையை அவன் ஆளுகிறான். 6:12ல் அவர்கள் அதிகாரங்கள், துரைத்தனங்கள், அந்தகார லோகாதிபதிகள் என்று விவரிக்கப்படுகின்றனர், மேலும் அவர்கள் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகள் என்றும் சொல்லப்பட்டனர். எத்தனை பேய்களான தூதர்கள் இந்த வலிமையுள்ள பொல்லாத சேனையாக உருவாகின்றனர் என்று நமக்குத் தெரியாது.

ஜனங்கள் சாத்தானை ஒரு கேலிக் கூத்தாக்கி நகைப்புக்குரியவனாக ஒரு குள்ளமானவனாய் சிவப்பு ஆடை உடுத்து, தலையிலே கொம்புகளை உடையவனாய் கையிலே ஒரு கூரிய குத்தீட்டியைக் கொண்டவனாய் சித்தரிப்பது எவ்வளவு நகைப்புக்குரிய விஷயம்! அவன் இப்பிரபஞ்சத்தின் தேவன் என்று பவுல் சொன்னார் (2 கொரிந்தியர் 4:4). அவன் பெலத்தோடே ஆளுகிறான். அவன் பெலவீனமானவல்ல; அவன் வல்லமையுள்ளவன். அவனுடைய பெலம், அதிகமானது, அவனுடைய அதிகாரம் மிகப் பெரியது, அவனைத் தனிமையாய் எதிர்த்து நிற்கக் கூடாது. நாம் பெலவீனமானவர்கள். நம்மிலே அநேகரும் தோல்வியைத் தழுவக் காரணம் யுத்தத்தில் ஜெயிக்கத்தக்க பெலம் நமக்குள் இருக்கிறது என்று நாம் நினைக்கிறது தான். வெற்றிபெற ஒரே வழி “கர்த்தரிலும் அவருடைய வல்லமையிலும் பலப்படுவதுதான்” (6:10).

*சாத்தான் தீய இயல்புடையவன்.* இப்படிப்பட்ட எதிரியே நமக்கு இருக்கிறான். சாத்தான் தேவன் செய்யாத எல்லாவற்றையும் செய்கிறான். தேவன் ஒளியாக சித்தரிக்கப்படுகிறார், சாத்தானோ இருளின் அதி காரத்தையுடையவனாக காட்டப்படுகிறான். இயேசு அவனை பொய்யனென்றும் பொய்க்குப் பிதா என்றும் அழைத்தார்; மேலும் அவனை மனுஷர்கொலை பாதகன் என்றும் விவரித்தார் (யோவான் 8:44).

ஒரு மனுஷனைக் கெடுப்பது எதுவோ - ஒரு மனிதனை பாதிப்பது எதுவோ, தீமை எதுவோ, கசப்பு மற்றும் இணங்க வைக்க முடியாதவைகள் எவைகளோ - அனைத்தும் பிசாசினுடையது. அனைத்துவித ஊழல்களுக்கும் தீட்டுப்படுதலுக்கும் அவனே ஊழியக்காரன். அவன் ஒருபோதும் ஒரு ஜீவனைக்கூட ஆசீர்வதித்தவனல்ல; ஒரு தனிப்பட்ட நபரைக் கூட அவன்

சரியானவை எவைகளோ பரிசுத்தமுள்ளவை எவைகளோ அவைகளைச் செய்ய ஊக்கமளித்தவனல்ல. நம்முடைய எதிராளி முற்றிலும் தீய இயல்புடையவன்.

*முடிவுரை.* சாத்தானுடைய யுத்தம் நம்மோடே அல்ல. அவனுடைய உண்மையான யுத்தம் அகில அண்ட சராசரங்களின் பரிசுத்தரோடே கூடத்தான், ஆனால் அவனுடைய தாக்குதல் கிறிஸ்தவர்களுக்கு எதிரானது, ஏனெனில் அன்பையும் பாசத்தையும் நம்மீது பொழிகிறாரென்று அவனுக்குத் தெரியும். இந்த யுத்தத்தில் ஜெயிக்க, அவனுடைய தீய இயல்பை அறிந்து அவனுடைய பெலத்தைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

**நாளுக்கு - நாள் யுத்தம்: யுத்தம் செய்ய ஆயத்தமாக இருத்தல் (6:13-20).**

தேவனுடைய ஆளுகையை தூக்கியெறிந்து அவருடைய சொந்த இராஜ்யத்தில் அவரைத் தவிர்க்க வேண்டுமென நாட்டம் கொண்டிருக்கும் அவனே தேவனுடைய முதல் எதிரியாகக் கொண்டிருக்கிறார். சாவுக்கேதுவான இந்த யுத்தத்தில் இரண்டு அரியணைகள் ஈடுபட்டுள்ளன. தேவன் தமது சரியான இடத்தைப் பெற்று புருஷர்கள் மற்றும் ஸ்திரீகளுடைய இருதயத்தில் வீற்றிருந்து இராஜாதி இராஜாவாக ஆளுகை செய்ய நாடுகிறார். சாத்தானும் தொடர்ந்து அந்த அதிகாரத்தைக் குலைக்க வகை தேடுகிறான். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், இந்த மகாபெரிய சத்துரு தேவனுடைய ஸ்தானத்தில் அவரை அமரவிடாமல் செய்கிறவனாகிய அவனுக்கு எதிராக நீதிமான்களின் கூட்டத்தோடு சேர்ந்து யுத்தம் பண்ணும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம்.

இந்த யுத்தத்தில் வெற்றிகொள்ள விரும்பும் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் மூன்று அடுக்குகளான பாதுகாப்பு திறந்து வைக்கப்பட்டுள்ளது. முதலாவது இதுதான்: நமது எதிராளியைக் குறித்து முதலில் நாம் கற்றுக் கொள்ள வேண்டும். கிறிஸ்தவ யுத்த வீரனுக்குரிய படைத்தலைமை வகிக்கும் திறனாக இன்னும் இரண்டு பகுதிகளை ஆராய்ந்து பார்த்து செயல்படுத்த வேண்டும்.

*தேவனுடைய சர்வாயுத வர்க்கத்துடன் நம்மை தகுதிபடுத்திக் கொள்ளுதல்.* நாம் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் போராடாததால் வான மண்டலங்களிலுள்ள ஆவிக்குரிய எதிரிகளோடு நமக்குப்போராட்டமுண்டு என்பதால், ஜெயிப்பதற்கு நமக்கு தேவனுடைய சர்வாயுதவர்க்கம் தேவை.

*(1) சத்தியம் என்னும் கச்சை (6:14).* சண்டையிலே தன்னை உட்படுத்திக் கொள்வதற்கு முன் ஒரு ரோம போர்ச் சேவகன் செய்கிற முதல் காரியம் தனது வஸ்திரத்தின் மூலைகளை தனது கச்சைக்குள் சொருகிக் கொள்வதுதான். தனது துணிகளை இறுக்கிக் ஒன்றாகக் கட்டிக் கொள்வதன் மூலம் இயக்கத்துக்குத் தடை வராத வண்ணம் சுலபமான நிலையை அடைகிறான்.

ஒரு யுத்த வீரன் தனது கச்சையைச் சார்ந்திருந்தான். இது இன்று மனுஷர்கள் அணிவது போன்ற ஒரு மெல்லியதான கச்சையல்ல. அது அகலமாக, தோலினாலானது. அது அவனுடைய உடைகளை பிடித்துக் கொள்வதுமல்லாமல் அவனுடைய பட்டயத்தையும் தாங்கிக் கொண்டது. யுத்தத்திற்குச் செல்வோருக்கு கச்சை ஒரு முக்கியமான உபகரணமாயிருந்தது.

கிறிஸ்தவனின் கச்சை என்ன? அது சத்தியம். நமது எதிராளி தந்திரமுள்ளவனும், வஞ்சகமான சூழ்ச்சியுடையவனும், மோசம் போக்குகிறவனுமாயிருக்கிறான் என்று ஏற்கனவே கண்டோம். அவனை நாம்

*தோற்கடிக்க இருக்கிற ஒரே ஆயுதம் சத்தியம். சத்தியம் எதிரியின் பொய்யை வெளியரங்கமாக்கும். இந்த சத்தியத்தின் மூல ஸ்தலம் வேதாகமம், இயேசு "உம்முடைய சத்தியத்தால் அவர்களை பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" (யோவான் 17:17) என்று ஜெபித்தார்.*

*பிசாசு தவறுகளையும், கள்ள உபதேசங்களையும், ஆவிக்குரிய பகுத்தறிவையும் மையம் வைத்து தாக்குகிறான். அவனுடைய மோசடிகளுக்கு எதிராக நம்மை நாமே சத்தியத்திற்குள் முழுமையாய் மூழ்கடித்துக் கொள்வதுதான் நம்முடைய நிலையில் நாம் உறுதியாய் நிற்பதற்கான ஒரே வழி. நாம் தேவனுடைய வசனத்துக்குள் நுழைந்து, அவைகளால் போஷிக்கப்பட்டு, நமது ஆத்துமாக்களை அதிலே நிறைத்து, அதைப் புரிந்து கொள்ள ஜெபிக்க வேண்டும். அந்த சத்தியமே மற்ற எல்லாவற்றையும் ஒன்றாகக் கூட்டிக்கட்டி, நமது பொல்லாத ஆவிகளுடனான ஆவிக்குரிய போராட்டத்தில் உதவுகிற கச்சையாயிருக்கிறது.*

*(2) நீதியென்னும் மார்க்கவசம் (6:14). பவுலின் நாட்களில், ஒரு மார்க்கவசம் என்பது இரண்டு வித்தியாசப்பட்ட வழிகளில் செய்யப்படமுடியும். சில வேளைகளில் கனமான சணல் நார்த் துணிகளால் செய்யப்பட்டு, அதன்மீது மெல்லிய தகடு மூடப்பட்ட நிலையில் தொங்க விடப்பட்டிருக்கும். பொதுவாக மிக பிரசித்தமான முறையில் மார்க்கவசம் கடினமான இரும்புத் தகடு அல்லது ஒருவகையான பின்னலான இரும்புச் சங்கிலிகளினால் செய்யப்பட்டிருக்கும். எப்படியாயினும் அதன் அமைப்பின் முறை, அந்த மார்க்கவசம் ஒரு செயலை மட்டுமே கொண்டிருந்தது: போர் வீரனின் முக்கிய அங்கங்களை பாதுகாப்பது. அது அவனுடைய சரீரத்தில் கழுத்திலிருந்து இடுப்பு வரை மூடியிருக்கும், அதே போல முன் பக்கமும் பின்பக்கமும் காயம் உண்டாகாமல் பாதுகாக்கக் கூடியதாயிருக்கும். எந்த போர் வீரனும் தனது மார்க்கவசத்தைத் தரித்துக்கொள்ளாமல் யுத்தத்திற்குப் போகமாட்டான்.*

*கிறிஸ்தவனின் போர்க்கவசம் நீதி. இந்தக் கிறிஸ்தவ நீதி கிறிஸ்துவுக்குள் இருக்கிற நீதி மட்டுமல்ல (காண்க 2 கொரிந்தியர் 5:21), ஆனால் அது சுத்தமான ஜீவியத்தில் நடைமுறையில் கைக்கொண்டிருக்கும் நீதியும் கூட (காண்க எபேசியர் 4:24). நமக்கு இந்த மார்க்கவசம் தேவை. தவறைக் கொண்டு சாத்தான் நம்மைத் தாக்கக் கூடும் - அசுத்தத்தைக் கொண்டும் தாக்குவான் - இவைகளுக்கு சத்தியம் எனும் கச்சை நமக்குத் தேவை. நாம் பரிசுத்த ஆவியின் பெலத்தால் தேவபக்திக்குரிய வாழ்க்கையை வாழ்வோமானால் அவனுடைய அக்கினியாஸ்திரம் நம்மை எதுவும் துளைக்க மாட்டாது. நமது அன்றாட வாழ்க்கையில் பரிசுத்தத்தை ஒரு பாகமாக கைக்கொள்ளாமல் புறந்தள்ளினால் பிறகு எதிராளியின் தாக்குதலுக்கு நம்மை வெளிப்படையாகவே ஒப்புக் கொடுப்பதாகிவிடும்.*

*(3) சுவிசேஷம் என்னும் பாதரட்சை (6:15). ரோம போர்ச்சேவகர்கள் caliguli எனும் கனமான பாதரட்சைகளை அணிந்தார்கள்,[64] இது விசேஷித்த மாதிரியானதும் கனமான பாதரட்சைகளுக்கு கீழே தைக்கும் (கனமான) கடினமான ஆணிகள் கொண்டிருந்து போர் வீரன் ஊன்றி நடக்க ஏதுவாக்கியதுமான யுத்தத்திற்கான பாதரட்சைகள். அவை தற்போதைய விளையாட்டு வீரர்கள் அணிவது போன்ற ஆப்புகளைக் கொண்டிருந்தன,*

போர்வீரன் முட்புதர்களுக்குள்ளாகவும் கரடுமுரடான போர்த்துறை நிலங்களினூடாகவும் லாகவமாக நடக்க ஏதுவானவை, ஏனெனில் அவனுடைய பாதரட்சை மிகச் சிறப்பாக கால்களை மிதிக்க ஏதுவானவை.

நமது ஆவிக்குரிய போராட்டத்தில், சாத்தான் நம்மைத் தடுமாறி விழ வைப்பான், நாம் அவனுடைய கடுந்தாக்குதலை எதிர்த்து நிற்க திராணியுள்ளவர்களாயிருக்கும் பொருட்டு கால்களில் பாதரட்சைகளைத் தொடுத்தவர்களாய் நிற்க வேண்டும். அந்த பாதரட்சைகள் “சமாதானத்தின் சுவிசேஷம்.” “கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை” என்கிற நம்பிக்கை (ரோமர் 8:1) கிறிஸ்தவனின் சமாதானத்தைத் தருகிறது. இதன்மீது நாம் நிற்கும் போது சாத்தான் நம்மை கீழே விழத் தள்ள முடியாது.

*(4)* விசுவாசம் என்னும் கேடயம் (6:16). முதல் நூற்றாண்டில் இரண்டுவகை கேடயங்கள் முன்னிலை வகித்தன. ஒன்று போர்ச் சேவகன் பக்கம் - பக்கமாக நின்று போராடும்போது சிறியதாயிருந்த கேடகம் பயன்படுத்தப்பட்டது. இது போர் வீரனின் இடது கையில் அணியப்பட்டிருக்கும், கேடயம் கூர்மையான எதிரியின் வாளை தடுக்க பயன்படும். இங்கே பவுல் அப்படிப்பட்ட பட்டயத்தை மனதில் வைத்துப் பேசவில்லை. மாறாக, அவர் பயன்படுத்தியுள்ள வார்த்தை பெரிய கேடயத்தைக் குறிப்பிடுகிறது, தோராயமாக நான்கு அடி நீளமும் இரண்டரை அடி அகலமும் கொண்டது அது. பொதுவாக இது தடிமனாக இரண்டு மரத்துண்டால் இணைக்கப்பட்டு தோலால் மூடப்பட்டிருக்கும். வழக்கமாக, இது பக்கம் - பக்கமாக நின்று போரிடுவதில் பயன்படுத்தப்படுவதில்லை. இந்தக் கேடகத்தின் செயல்பாடு ஒன்று மட்டுமே: தாக்கப்படும் நேரத்தில் முழு உடலையும் பாதுகாக்க உதவியது.

இந்தக் கேடகங்களின் ஓரங்களின் அமைப்பு ஒரு முழுக் கூட்டப்போர் வீரர்கள் தங்களுடைய கேடகங்களை ஒன்றோடொன்றை இணைத்துப் பூட்டிக் கொண்டு ஒரு கடினமான சுவரைப்போல எதிரிகளை நோக்கி முன்னேற இயலும். இது, நாம் தனித்துப் போராடுவதில்லை என்பதை நினைவுபடுத்துகிறது, மாறாக ஒரு கூட்ட இராணுவ வீரர்களாக இணைந்து ஒரு பொதுவான எதிரியோடு போராடுகிறோம்.

நம்மை பாதுகாக்கும் இந்தக் கேடகம், சந்தேகம் என்னும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் தடுத்து, பொய்களையும் தேவ தூஷணங்களையும், பாவம் செய்ய ஏதுவாக்கும் தீவிர ஆசைகளையும் அவித்துப் போடுகிற இந்தக் கேடகம் எது? ஒரே ஒரு கேடகம் மட்டுமே நமக்கு உண்டு: நமது விசுவாசம். தேவன் நம்மை ஆதரிக்கிறார் என்ற நம்பிக்கையும் உறுதியான விசுவாசமுமே அது. நாம் அவரிலும் அவருடைய வாக்குத்தத்தங்களிலும் விசுவாசம் வைக்கிறோம். அவருடைய வசனத்திலிருந்து தேற்றப்படுகிறோம். யோவான் பின்வருமாறு விவரிக்கிறார்: “... நம்முடைய விசுவாசமே - உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்” (1 யோவான் 5:4). தேவன் கொடுத்த நம்முடைய விசுவாசமே நமது பிரதான பாதுகாப்பு.

*(5)* இரட்சண்யமென்னும் தலைச்சீரா (6:17). கிறிஸ்தவனின் மனம் முழுவதும் இரட்சிப்பின் உறுதி நிறைந்திருக்கிறது. தேவன் இந்த யுகத்தின் கேடான சிந்தையிலிருந்து நம்முடைய மனதை மீட்கும் போது நம்முடைய சிந்தனை முறைகளை அவர் கட்டுப்படுத்தத் துவங்குகிறார், ஆதலால் சாத்தான்

நம்மைக் கொள்ளை கொண்டு போய்விட முடியாது. தேவனுடைய வசனத்தை நாம் வாசித்து அதன் உபதேசங்களிலே நம்மை நாமே உறுதிப்பட்டவர்களாக்கிக் கொள்ளும்போது, நாம் சாத்தானுடைய வஞ்சகங்களில் சடிதியில் விழுந்து விடமாட்டோம். நமது இரட்சிப்பின் உறுதியினால் நம்முடைய அன்றாட போராட்டத்தில் போராடமுடியும்.

*(6) ஆவியின் பட்டயம் (6:17).* ஒவ்வொரு ரோம படை வீரனின் (வலதுபக்க) இடுப்பில், அவனுடைய கச்சையிலிருந்து, அவனது பட்டயம் தொங்கிக் கொண்டிருக்கும். பாதுகாப்புக்கும் தாக்கவும் முழு ஆயுத வர்க்கத்தில் இது மட்டுமே செயல்படுகிறது. பக்கம் - பக்கமாக நின்று எதிரியுடன் சண்டையிடுவதில், ஒவ்வொரு யுத்த வீரனுக்கும் அவனுடைய பட்டயம் மிகவும் அத்தியாவசியமானது. நெருங்கிச் செய்யும் யுத்தத்தில், எதிரியின் இருதயத்தைக் குத்திகிழிக்கும் மிகப்பெரிய செயலுக்கு பயன்படுத்தும் ஆயுதம் இது.

கிறிஸ்தவ யுத்த வீரனுக்கும் பட்டயம் உண்டு. அதுதான் தேவனுடைய வசனம். இந்த ஒரு யுத்தக் கருவிதான் தேவனால் கொடுக்கப்பட்டது அதினால் கிறிஸ்தவன் தன்னையும் பாதுகாத்துக் கொண்டு எதிரியை நோக்கியும் அவனுக்கு எதிராக தைரியமாக முன்னேறிச் செல்லமுடியும். தம்மைப் பின்பற்றுவோர் பொல்லாப்புக்கு எதிரான முதல் அடியை கொடுக்க வேண்டுமென இயேசு விரும்பினார், எனவே அவர், "... என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" என்றார் (மத்தேயு 16:18).

*தாக்குதலில் நம்மை ஈடுபடுத்திக் கொள்ளுதல்.* சாத்தானை எதிர்த்து ஜெயிக்க தேவையான தெய்வீக திராணி இறுதிப்போரில் கிடைப்பது என்பது உண்மையில் எதிரியை எதிர்த்து தாக்குவது தான். தேவன் நம்மை மந்தகதியில் செயல்படும் யுத்த வீரர்களாக நம்மை அழைக்கவில்லை. உண்மையில் யுத்தம் எங்கே துவங்குகிறது என்பது குறித்து நாம் ஆச்சரியப்படக் கூடும்.

> எந்த சமயத்திலும் சகல விதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதி யோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள். சுவிசேஷத்திற்காகச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதியாகிய நான் அதைப்பற்றிப் பேச வேண்டியபடி தைரியமாய்ப் பேசத்தக்கதாக, நான் தைரியமாய் என் வாயைத்திறந்து சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு வாக்கு எனக்குக் கொடுக்கப்படும்படி எனக்காகவும் விண்ணப்பம்பண்ணுங்கள் (6:18-20).

யுத்தம் செய்ய தயாராவதற்காக ஜெபம் செய்வதல்ல; ஜெபமே யுத்தத்திற்கு துவக்கம். ஒருமுறை நாம் யுத்தத்திற்காக அணிந்து கொண்ட பிறகு, எதிராளி யார் என்று ஒருமுறை நாம் அறிந்து கொண்ட பின்பு, நம்முடைய நேசக்கூட்டம் யாரென்று பார்த்தபிறகு, நாம் யுத்தத்தில் தாக்குவதற்குப் போக ஆயத்தமாக இருக்கிறோம். கர்த்தருடைய சேனை அதன் முழங்காலிலே முன்னேறுகிறது.

கிறிஸ்தவர்கள் ஜெபிப்பதை பிசாசானவன் விரும்புவதில்லை. நாம் வேறெதைச் செய்தாலும் அது அவனுக்கு அக்கறை இல்லை.

நம்முடைய திட்டங்களைக் குறித்து அவன் நகைக்கிறான், ஆனால் நம்முடைய ஜெபத்தைப் பார்த்து மட்டும் பயப்படுகிறான். ஒவ்வொரு கிறிஸ்தவனும் இதில் தான் வெற்றி பெறுகிறான் அல்லது தோல்வியுறுகிறான் என்று அவனுக்குத் தெரியும்.

நம்முடைய ஜெபத்தைக் காட்டிலும் பெலமிக்கவர்களாய் நாம் ஒருபோதும் இருக்க மாட்டோம். கர்த்தரின் எந்த உள்ளூர் சபையும் அதன் அங்கத்தினர்களின் ஜெப வாழ்க்கையைவிட வல்லமையுள்ளது எதுவுமிராது. “நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் ...” என்று இயேசு சொன்னார் (மத்தேயு 26:41). சபைக்கு தேவையானது என்ன - ஜீவனுள்ள தேவனுடைய சேனையின் தேவை என்ன - இன்னும் அதிகமான ஜெப வீரர்கள்தான். இந்த வீரர்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களைக் கோருகிற கூட்டம், அவரது பெலத்தையும் கோருகிற கூட்டம். எதிராளிக்கு எதிராக தேவையான உதவிகளை கோருகிற கூட்டம்.

*முடிவுரை.* கிரேக்கக் கட்டுக்கதையில், அச்சிலெஸ் என்பவனே (ஹோமர் என்பவரின் இலியாட் எனும் காவியத்தில் வரும் வீரத் தலைவன்) பழங்கால டிராய் யுத்தத்தில் மிக அதிகமாய் உதாரணப் படுத்தப்பட்டவன். அந்தக் கதையின்படி, அச்சிலெஸின் குழந்தை பருவத்தில் ஸ்டிக்ஸ் எனும் புனித நதியில், அவனுடைய தாயார் அவனை முழுக்கி எடுத்தாள். இது அவனுடைய தாயார் அவனை முழுக்கும்போது, பிடித்திருந்த குதிகால் பகுதியைத்தவிர மற்றபகுதிகள் அனைத்தும் காயமே உண்டாகாத பகுதிகள். அந்த பழங்கால டிரோஜான் யுத்தத்தில், ஒரு விஷ அம்பு அச்சிலெஸ்ஸின் குதிங்காலில் எய்யப்பட்டு மரித்தான். எதிரிகள் தன்னை வேறெங்கு தாக்கினாலும் காயம்பட்டிராத அச்சிலெஸ், ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டும் பாதுகாப்பற்றுப் போனான்.

நாம் தேவனுடைய தலையாய சத்துரு பிசாசுக்கு எதிராக யுத்தம் பண்ணுகிறவர்கள். நாம் சத்துருவின் தாக்குதலுக்கேற்ற ஒரு இடத்தையும் வெளிப்படையாக வைத்துவிடக்கூடாது. ஒரு முழு யுத்தத்திற்கான யுக்தியை பவுல் நமக்கு விளக்கப்படுத்துகிறார். நம்முடைய எதிராளியைக் குறித்தும் அவனுடைய திட்டங்களைக் குறித்தும் நமக்கு நாமே போதித்துக் கொள்ள வேண்டும். தேவனுடைய *எல்லா* சர்வாயுத வர்க்கத்தையும் நாம் தரித்துக்கொள்ள வேண்டும்; அந்த ஆயுதவர்க்கங்களில் ஒன்றையும் நாம் விட்டுவிட்டவர்களாக, வெற்றிகொள்ள முடியாதவர்களாய் போய்விடக் கூடாது. பிறகு நாம் செயலூக்கம் கொடுத்து, நமது யுத்தத்தில் தேவன் உதவி செய்யத்தக்கதாக ஜெபிக்கிறவர்களாய் இருக்க வேண்டும்.

கிறிஸ் புல்லார்ட்

### நம்முடைய நேசக் கூட்டம் (6:13-20)

கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ளும் ஒரு வலிமை மிக்க சத்துரு, சாத்தான்; ஆகிலும் இந்த யுத்தத்தில் நாம் தனித்துப் போரிடுவதில்லை. வெற்றி சாத்தியமானதே என்று முழங்கும் மேகம் போன்ற ஒரு திரளான சாட்சிகள் நமக்கு உண்டு (எபிரெயர் 12:1, 2).

நாம் தேவனுடைய உண்மைத்தன்மையை ஒருபோதும் மறந்துவிடக் கூடாது, அவர் எப்பொழுதும் நமக்கு உதவி செய்ய ஆயத்தமாயிருக்கிறார்

*(1 கொரிந்தியர் 10:13). சத்துருக்களுக்கு எதிராக அவர் நம்மை பாதுகாக்கவும் ஆயத்தப்படுத்தவும் தக்கதாக ஒரு முழு ஆயுதவர்க்கத்தையும், தொடர்பு சாதனமாக ஜெபத்தையும் அளித்திருக்கிறார் (6:13-20).*

*இறுதியாக, நமது பக்கத்தில் கிறிஸ்துவின் இரத்தத்தையும் கொண்டிருக்கிறோம் (வெளிப்படுத்தின விசேஷம் 12:11), அது நம்மை வெற்றி கொள்ளச் செய்கிறது. "நம்மில் அன்புகூருகிறவராலே நாம் முற்றிலும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம்" (ரோமர் 8:37).*

ஜெய் லோக்ஹார்ட்

---

குறிப்புகள்

[1]Josephus *Antiquities* 4.8.24. [2]Andrew T. Lincoln, *Ephesians,* Word Biblical Commentary, vol. 42 (Dallas: Word Books, 1990), 403. [3]*6:2, 3ல் சொல்லப்பட்டுள்ள கட்டளை பழைய ஏற்பாட்டிலிருந்து மேற்கோளாகக் காட்டியிருப்பதால்,* NASB *எனும் ஆங்கில வேதாகமத்தில் வார்த்தைகள் பெரிய எழுத்துக்களில் காணப்படுகிறது (காண்க யாத்திராகமம் 20:12; உபாகமம் 5:16).* [4]Kenneth S. Wuest, *Wuest's Word Studies from the Greek New Testament for the English Reader: Ephesians and Colossians* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1953), 136. [5]*பழைய ஏற்பாட்டில், தேவனுக்குக் கீழ்ப்படிவதினால் "ஆயுசு நாட்கள் கூட்டப்படுவது" தொடர்புடையது (நீதிமொழிகள் 3:1, 2; காண்க உபாகமம் 30:20).* [6]Ibid., 137. [7]Lincoln, 406. [8]Ibid., 409. [9]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 748. [10]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph Henry Thayer (Edinburgh: T. & T. Clark, 1901; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 473. [11]Lincoln, 407–8. [12]S. D. F. Salmond, "The Epistle to the Ephesians," in *The Expositor's Greek Testament,* ed. W. Robertson Nicoll (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1967), 3:377. [13]Lincoln, 408. [14]*காண்க 1 கொரிந்தியர் 7:21, 22; கொலோசெயர் 3:22; 4:1; 1 தீமோத்தேயு 6:1, 2; தீத்து 2:9, 10; 1 பேதுரு 2:18-25.* [15]Spiros Zodhiates, ed., *The Complete Word Study New Testament,* 2d ed. (Chattanooga, Tenn.: AMG Publishers, 1991), 963. [16]Ibid, 965. [17]Salmond, 378–79. [18]Zodhiates, 889. [19]Lincoln, 422. [20]Salmond, 378–79. [21]Lincoln, 423–24. [22]The term is also translated "finally" in *பிலிப்பியர் 3:1; 4:8; 2 தெசலோனிக்கேயர் 3:1.* [23]Lincoln, 441. [24]Ibid., 442. [25]Ibid. [26]Salmond, 382. [27]Lincoln, 443. [28]Salmond, 383. [29]Lincoln, 444. [30]*காண்க 2:2; 2 கொரிந்தியர் 2:11; 10:4; 1 பேதுரு 5:8.* [31]*காண்க 2 கொரிந்தியர் 11:14; 1 தீமோத்தேயு 4:1, வெளிப்படுத்தின விசேஷம் 2:9.* [32]Ethelbert W. Bullinger, *A Critical Lexicon and Concordance to the English and Greek New Testament* (London: Samuel Bagster and Sons, n.d.; reprint, Grand Rapids, Mich.: Zondervan Publishing House, Regency Reference Library, 1975), 893. [33]Wuest, 142. [34]*காண்க கலாத்தியர் 5:1; 1 தெசலோனிக்கேயர் 3:8; 2 தெசலோனிக்கேயர் 2:15.* [35]NASB *பைபிளில் சில அச்சடிப்புக்களில் அடிக்குறிப்புகளில் சொல்லுகிறது, "[நேரடிப் பொருளில்], "உன் மனதின் அரையை."* [36]Wuest, 143. [37]*காண்க எபேசியர் 1:13; 2 தெசலோனிக்கேயர் 2:10, 12; 1 தீமோத்தேயு 3:15; 1 பேதுரு 1:22.* [38]*"சத்தியம்" மற்றும் "உண்மை" ஆகியன ஸ்டெம் என்ற ஒரே எபிரேய வார்த்தையிலிருந்து வருகிறது.* (Robert Young, *Young's Analytical Concordance to the Bible,* 22d American ed., rev. [New York: Funk and Wagnalls Co., 1936], 325, 1004–5.) [39]Salmond, 386. [40]Ibid. [41]Warren Baker, ed., *The Complete Word Study Old*

*Testament* (Chattanooga, Tenn.: AMG Publishers, 1994), 2357. [42]Bullinger, 693. [43]Josephus *Wars* 6.1.8. [44]Lincoln, 449. [45]Salmond, 387. [46]Lincoln, 449–50. [47]Wuest, 144. [48]Lincoln, 449. [49]Zodhiates, 862. [50]Ibid., 866. [51]Bullinger, 754. [52]Zodhiates, 954. [53]Salmond, 388. [54]Zodhiates, 951–52. [55]*மேலும் காண்க ரோமர் 1:9, 10; எபேசியர் 5:20; பிலிப்பியர் 1:4; கொலோசெயர் 1:3; 4:12; 1 தெசலோனிக்கேயர் 5:17.* [56]Wuest, 145. [57]Lincoln, 454. [58]Salmond, 390. [59]Ibid. [60]Bullinger, 222; and Bauer, 226. [61]Bauer, 916. [62]*இது ஜெய் லோக்ஹார்ட் பிசாசைக் குறித்து எழுதின கல்விப்பகுதியுடன் முடிவுறுகிறது. எஞ்சிய பகுதி கிறிஸ் புல்லார்ட் என்பவரால் எழுதப்பட்டது.* [63]James Dobson, *Dare to Discipline* (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1970), 15. [64]The name of Caligula, a vile Roman emperor, means “little shoes” or “little boots.”